
உன் அயலானை நேசி

என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.

எரேமியா 33:3

வெளியீடு 2016. திருத்தப்பட்ட பதிப்பு, டிசம்பர் 2016.
மக்கள் தொகை கணக்கெடுப்பு, ‘மலேசியாவின் மக்கள் மற்றும் இல்லம் கணக்கெடுப்பு 2010’ புள்ளியியல் துறையிலிருந்து எடுக்கப்பட்டது.
பொறுப்பாகாமை: இந்த புத்தகம் தனியார் சுழற்சிக்கு மட்டுமே. எல்லா புகைப்படங்களும் விளக்க நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. அவைகள் இந்த புத்தகத்திலுள்ள எந்த கட்டுரைக்கும் தொடர்புடையதல்ல.

## முன்னுரை

பிதா ஜெபத்தினால் காரியங்களை நிறைவேற்றுவார். நாம் கேட்கிறோமா? மத் 6:9-10. தம்முடைய சீடர்கள் என்ன செய்ய வேண்டுமென்று வேதத்தில் இயேசு சொல்கிறார். நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமானது: பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

ஆண்டவரின் ஜெபம் - பிதாவின் ராஜ்யம் இந்தப் பூமியிலே காணப்படவேண்டும். அவரின் ஆளுகை இன்னும் அநேகரில் நிறைவேற வேண்டும். அவருடைய அன்பு அவர்களின் மூலமாக எல்லாருக்கும் கிடைக்க வேண்டும். பிதாவை நேசி, உன் அயலாரை நேசி. வாழ்வு மாறும் இந்த உலகமும் மாற்றமடையும்.

இதுதான் நம் ஜெபமா? ஜெபம் அதி முக்கியமானது. அதன் மூலமாக பிதாவின் பலத்தையும் நம்முடைய பலவீனத்தையும் நமது நம்பிக்கையை அவரில் வைப்பதின் மூலம் அறிந்து கொள்ளலாம். அது தேவனை உயர்த்தியும் நம்மை தாழ்மையாக்கவும் செய்யும்.

தரிசனம் 525 என்பது ஜெபக்கூக்குரலினால் அயலார் அனைவரும் சுவிசேஷத்தின் மூலமாக மாற்றமடைவர் என்ற பெறும் நோக்கத்தில் உருவானது.

“525” என்றால் என்ன? 52 என்பது 52 மண்டலங்கள், ஒவ்வொரு வாரமும் ஒரு மண்டலத்திற்காக பிரார்த்தனை செய்வோம். மற்ற 5 என்பது 5 ஆண்டுகளை குறிக்கிறது. எல்லாரும் சேர்ந்து ஆண்டவர் மேல் விசுவாசம் வைத்து இந்த அனைத்து மண்டலங்களிலும் விசுவாச கூட்டத்தார் நிரம்பிட தேவனின் அபரித கிரியை நம்பியிருக்கிறோம். இது சாத்தியமா? நிச்சயமாக ஆண்டவர் செய்வார். ஏனெனில் இது அவரின் தரிசனம். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லையே.

தற்போது பெரும்பாலான இந்த மண்டலங்களில் விசுவாசிகள் இருப்பதாகவோ அல்லது நற்செய்தி சென்றதாகவோ தெரியவில்லை. அவர்கள் முற்றிலும் விடுபட்டிருக்கின்றனர். 525ன் அமைப்பு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் அவர்களை எட்டிவிட வேண்டும் என்பதே. இது நம் ஜெப அர்ப்பணத்தில் துவங்குகிறது.

இந்த 52 மண்டலங்களை தத்து எடுக்கிறவர்கள் ஜெபிப்பதோடு மட்டுமல்லாமல் அங்கே செல்லவும், மக்களைச் சந்திக்கவும் வேண்டும்.


ஒவ்வொரு வாரமும் ஒரு மண்டலம் கவனத்தில் கொள்ளப்படும். இந்த மண்டலங்களைப் பற்றிய விவரங்கள், வசனம், சாட்சி, பிரார்த்தனை, குறிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் என விளக்கங்கள் உண்டு. மேலும் ஒவ்வொரு ஆண்டும் இதில் ஈடுபடுகிறவர்கள் ஓரிடத்தில் கூடி சாட்சிகளை பகிரவும், கற்றுக்கொள்ளவும், ஜெபிக்கவும் கூட்டம் ஏற்பாடு செய்யப்படும். இது ஒரு மகிழ்ச்சியான கூட்டமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் இது நமது முதல் படி.

ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு முன்னமே இதே போன்ற முயற்சி இருந்தது. அந்தப் புத்தகத்தின் பெயர் “ஜெபி”. அதே வழியை நாம் தொடர முயலுகிறோம். கடந்த 10 ஆண்டுகளில் மலேசியா பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. இருப்பினும் இன்னும் உயர்வு நிலைக்கு வரவில்லை. இந்த புத்தகம் சமுத்திரம் தண்ணீரினால் நிரப்பப்பட்டிருக்கிறதுபோல மலேசியர்கள் சுவிஷேத்தினால் நிரம்பவும் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியினால் மக்கள் மாற்றம் அடையவும், முழு உலகமே மலேசியாவுக்காக ஜெபிக்க ஊக்கப்படுத்தும் என்று எதிர்ப்பார்க்கிறோம். எல்லா ஜனத்திற்கும் அவர் ஒருவரே நம்பிக்கை. (வெளி 5:7)

பெர்டோ’ஆ என்னும் ஜெப தரிசனம் 525 உடன் தொடரட்டும். பெர்டோ’ஆ ***Berdoa*** (ஜெபி), பெர்காத்தி ***Berkati*** (ஆசிர்வதி), பெர்கொங்ஸி ***Berkongsi*** (பகிர்ந்துகொள்).

# மலேசியா மேல் கண்ணோட்டம்.

## நாடு



மலேசிய கொடி

மலேசிய கூட்டரசு என்பது மேற்கு மலேசியாவில் உள்ள 11 மாநிலங்களையும் போர்னியாவில் உள்ள சபா, சரவாக் என்ற இரண்டு மாநிலங்களையும் கூட்டரசு மாநிலங்களாகிய - கோலாலம்பூர், புத்ரா ஜெயா, லாபுவானை உள்ளங்கியது ஆகும். மலேசியாவின் தலைநகரம் கோலாலம்பூர், நிர்வாகத் தலைநகரம் புத்ரா ஜெயா.

## புவியியல் அமைப்பிடம்.

பூமத்திய ரேகையின் வடக்கு பகுதியில் இரண்டாவது பாகைக்கும் ஏழாம் பாகைக்கும் இடையில் அமைந்திருக்கும் மலேசியா தென் சீன கடலைத்தாண்டி - கிழக்கு மலேசியாவையும் உள்ளடக்கியுள்ளது. மலேசியா தீபகற்பத்தின் வடக்கே தாய்லாந்தும், தெற்கே சிங்கப்பூரும், உள்ளன. சபாவும் சரவாக்கும் இந்தோனிசியாவை ஒட்டியிருக்கின்றன. சரவாக் புருனை டாருல் சலாம் எல்லையோடு பகிர்ந்து கொண்டிருக்கிறது.

## நில பரப்பளவு

329, 847 சதுர கிலோ மீட்டர்.

## மக்கள் தொகை

மொத்த மக்கள் தொகை : 28,334,135 (2010 கணக்கெடுப்பு).

மலேசியா குடிமக்கள் தொகை : 26,013,356 (2010 கணக்கெடுப்பு)

2016 -ஆம் ஆண்டில் மொத்த மக்கள் தொகை 31.7 மில்லியன் என்று எண்ணப்பட்டது. மலேசியா குடிமக்களின், பூமி புத்திரர்களின் தொகை 68.6%. சீனர்கள் 23.7%, இந்தியர்கள் 7.0%, பிறர் 1.0% ஆகும். 2016 ஆண்டின் கணக்கெடுப்பு மலேசியர் அல்லாத மக்கள் தொகை 10.3% ஆகும்.

## இனக் குழுக்கள்

மலாய்காரர் : 54.6%, சீனர் 24.6%, பிற பூமி புத்திரர் 12.8%, இந்தியர் 7.3%, மற்றவர்கள் 0.7%

## மதங்கள் (மலேசியா குடிமக்கள் மட்டும்)

இஸ்லாம் : 60.6%, புத்தம் : 21%, இந்து 6.4%, கிறிஸ்துவம் 9.2 %, மற்ற சீன மதங்கள் 1.3 %

## அரசாங்கம்

மலேசியா ஜனநாயக நாடாளுமன்ற மற்றும் மன்னர் ஆட்சி அரசியல் அமைப்பு கொண்டது. மத்திய கூட்டரசின் தலைவராக யாங் டி பெர்துவான் அகோங் இருக்கிறார். மத்திய அரசாங்கத்தின் தலைவராக பிரதம மந்திரி இருக்கிறார். ஒவ்வொரு ஐந்தாண்டுக்கு ஒருமுறை ஒருவர் பேரரசராக ஒன்பது சுல்தான்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். டேவான் ராக்யாட் (நாடாளுமன்றம்) மற்றும் டேவான் நெகாரா (மேலவை) என 2 சட்டமியற்றும் துறை உண்டு.

பொதுத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 222 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் அதிக இடங்களை கைப்பற்றிய கட்சி அரசாங்கத்தை அமைக்கும் மேலவையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். பினாங்கு, மலாக்கா, சரவாக், சபா ஆகிய மாநிலங்களில் ஆளுநர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், சுல்தான்கள் கிடையாது. மாநில முதலமைச்சர் அல்லது கெத்துவா மந்திரிதான் மாநில அரசாங்காத்தின் தலைவர்.

பாரம்பரிய மாநிலங்களில் சுல்தான்கள் ஆட்சி செய்கிறர்களாகவும் மாநில அரசின் தலைவராக மந்திரி பெசார்களும் இருக்கிறார்கள்.

## பொருளாதாரம்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 25% பொருள் உற்பத்தியை கொண்டுள்ளது. சுற்றுலாத்துறையும் எரிபொருள், செம்பனை எண்ணெய், ரப்பர் போன்ற வளங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மை பங்களிக்கிறது. பிற தொழில்துறைகளும் இயற்கை வளங்களும் தேசகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றன.

# மேற்கு மலேசியா மண்டலம்



# மேற்கு மலேசியா மண்டலம்

**மண்டலம்.................................................................பக்கம்**
**பெர்லிஸ்.............................................................. 12**
1. பெர்லிஸ்.................................................................. 14

**கெடா ................................................................. 16**
2. லங்காவி, குபாங் பாசு, & பாடங் தெராப் ........... 18
3. கோத்தா சேத்தார், பொக்கோ சேனா& பெண்டாங் 20
4. யான், குவலா முடா, & சிக் ............................... 22
5. பாலிங், கூலிம், பண்டார் பாரு ............................ 26

**பினாங்கு தீவு (பினாங்கு) .............................................. 28**
6. வடக்கு செபராங் பிராய்......................................... 30
7. மத்திய செபராங் பிராய் ........................................ 32
8. தெற்கு செபராங் பிராய் ........................................ 34
9. வடகிழக்கு பினாங்கு தீவு .................................... 36
10. தென்மேற்கு பினாங்கு தீவு ................................... 38

**பேராக் ................................................................ 40**
11. உலு பேராக், கெரியான், லாருட் & மாத்தாங்...... 42
12. கோலக்கங்சார், கிந்தா & கம்பார் ........................ 46
13. மஞ்சோங் & பேராக் தெங்கா ............................... 50
14. ஈலிர் பேராக் & பாத்தாங் பாடாங் ...................... 52

**கிளந்தான்.......................................................... 54**
15. தும்பாட் & பாசீர் மாஸ் ......................................... 56
16. பஜோக் & கோத்தா பாரு ....................................... 58
17. பாசீர் பூத்தே & மாச்சாங் ...................................... 60
18. தானா மேரா & ஜெல்லி ..................................... 62
19. குவா முசாங் & கோலக்கிராய் ............................. 64

**திரங்கானு............................................................ 66**
20. பெசுட் & செத்தியு.................................................. 68
21. கோலத்திரங்காணு .................................................. 70
22. உலுத்திரங்காணு .................................................... 72
23. மாராங் .................................................................. 74
24. டுங்குன் & கெமாமான்............................................ 76

**பாஹாங் ............................................................. 78**
25. கேமரன் மலை, லிப்பிஸ் & ஜெரண்டுட் .............. 80
26. ரவுப், தெமர்லோ & பெந்தோங் ............................ 82
27. குவந்தான் & மாரான் ............................................ 84
28. பெக்கான், பெரா & ரொம்பின்............................... 86

**மண்டலம்.................................................................பக்கம்**
**சிலங்கூர் ............................................................ 88**
29. சபா பெர்ணாம் & கோல சிலங்கூர் ..................... 90
30. கோம்பாக் & உலு சிலாங்கூர்............................... 92
31. பெத்தாலிங் & கிள்ளான் .................................. 94
32. கோல லாங்காட், சிப்பாங், & உலு லாங்காட்...... 96


**நெகிரி செம்பிலான்................................................. 98**
33. ஜெலுபு & ஜெம்போல் ......................................... 100
34. சிரம்பான் & கோலப்பிலா.................................... 102
35. போர்ட்டிக்சன், ரெம்பாவ் & தம்பின் ...................... 104

**மலக்கா .............................................................. 106**
36. அலோர் காஜா...................................................... 108
37. ஜாசின்.................................................................. 110
38. மத்திய மலக்கா .................................................. 112

**ஜோகூர் ............................................................. 114**
39. சிகமாட், லேடாங்/தங்காக் & மூவார் ................. 116
40. குளுவாங், மெர்சிங் & கோத்தா திங்கி............... 118
41. பத்து பஹாட் & பொந்தியான் .............................. 120
42. ஜோகூர் பாரு & கூலாய்..................................... 122

**கூட்டரசுப் பிரதேசம் ............................................... 124**
43. கோலாலம்பூர் ...................................................... 126
44. புத்ரா ஜெயா.......................................................... 128

# கிழக்கு மலேசியா மண்டலம்



## கிழக்கு மலேசியா மண்டலம்

**மண்டலம் ... பக்கம்**
**கூட்டரசு பிரதேசம் ... 124**
45. லபுவான் ... 130

**சபா ... 132**
46. மேற்கு கரை எல்லை ... 134
47. சபா உட்புற எல்லை & தவாவ் பிரிவுகள் ... 136
48. குடாட் & சண்டாக்கான் பிரிவுகள் ... 138

**சரவாக் ... 140**
49. கூச்சிங், சமராஹான், செரியான் பிரிவுகள் ... 142
50. ஶ்ரீ அமான், பேத்தோங், சரிகேய் பிரிவுகள் ... 144
51. சீபு, முக்கா, பின்துலு பிரிவிகள் ... 146
52. காபிட் பிரிவுகள், மீரி பிரிவுகள் & லிம்பாங் பிரிவுகள் ... 148

## பெர்லிஸ்

மலேசியாவின் மிகச்சிறிய மாநிலம் பெர்லிஸ். வட மேற்கில் அமைந்துள்ளது. வடக்கே தாய்லாந்தும் கிழக்கே கெடாவும் இருக்கின்றன. மேற்கு கடற்கறையில் மலாக்கா நீரிணை உள்ளது. ஏறத்தாள 795 கி.மீ சதுர பரப்பளவாகும். தலை நகர் கங்கார். ஆராவ் ராஜா தங்கியிருக்கும் மாநில ஆட்சியாளர் பட்டணம் ஆகும். கெடா மாநிலத்தின் ஒரு பகுதியாக பெர்லிஸ் இருந்திருக்கிறது.

மக்கள் தொகை 225,876 (2010). மலாய்க்காரர்கள் 88%, சீனர்கள் 8%, இந்தியர்கள் 1.5%. இஸ்லாம் 88.5% பெரும்பான்மை மதமாக இருக்கிறது. கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 0.6% ஆகும். அவர்கள் மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர்கள், சீனர்கள், இந்தியர்களாவர். இங்கு 400 சீன முஸ்லிம்கள் மற்றும் 250 இந்திய முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்.

பெர்லிஸ் மாநிலம் சட்டமன்ற பேரவையின் கீழ் இயங்கி வருகிறது. இங்கே பெரும்பாலும் மலாய் சமுதாய கலாச்சாரத்தையும், தாய்லாந்து கலாச்சாரத்தையும் காணலாம். இங்குள்ள கிராமங்கள் ஒதுக்கு புறமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், தங்களின் பாரம்பரிய கலாச்சாரத்தை இன்னும் கடைப்பிடிக்கிறவர்களாக இருக்கின்றனர். இங்கு விவசாயம் முக்கிய தொழிலாக இருக்கிறது. பெர்லிஸ் மாநில பூங்காவும், குவா கேலாம் எனும் குகை மிகவும் பிரசித்திப் பெற்றவை ஆகும். பிரபல உணவு தோம் யாம், லக்சா பெர்லிஸ் ஆகும். டாக்டர் முகமட் அஸ்ரி சய்னுல் அபிடின் இஸ்லாமிய போதகர் எழுத்தாளர் மற்றும் விரிவுரையாளர் ஆவார். பெர்லிஸ் மாநிலத்தில் மாவட்டங்கள் இல்லை. ஆகையால் இந்த ஜெப புத்தகத்தில் பெர்லிஸ் மாநிலம் ஒரே ஜெப மண்டலமாக அமைக்கப்பட்டுள்ளது.

மண்டலம் 1: பெர்லிஸ்




பெர்லிஸ் கொடி

| மக்கள் தொகை (2010) | |
|---|---|
| **மொத்தம்** : 225,876 | |
| **இனக்குழுக்கள்** | **%** |
| மலாய் | 88 |
| சீனர் | 8 |
| இந்தியர் | 1.5 |
| மற்றவர்கள் | 2.5 |
| **மதங்கள்** | **%** |
| இஸ்லாம் | 88.5 |
| புத்தம் | 9.5 |
| இந்து | 0.8 |
| கிறிஸ்துவம் | 0.6 |

# பெர்லிஸ்



## மண்டலம் 1. பெர்லிஸ்







| மக்கள் தொகை | |
|---|---|
| பெர்லிஸ்: 225, 876 | |
| சதவிதம் (%) | |
| மலாய் | 88 |
| சீனர் | 8 |
| இந்தியர் | 1.5 |
| மற்றவர்கள் | 2.5 |

மலேசியாவின் மிகச்சிறிய மாநிலம் **பெர்லிஸ்**. வட மேற்கில் அமைந்துள்ளது. வடக்கே தாய்லாந்தும் கிழக்கே கெடாவும் இருக்கின்றன. இம்மாநிலத்தின் தலைநகரம் கங்கார் ஆகும். ஆராவ் மாநில ஆட்சியாளர் உள்ள பட்டணம் ஆகும். கெடா மாநிலத்தின் ஒரு பகுதியாக பெர்லிஸ் இருந்திருக்கிறது.

மக்கள் தொகை 225,876 (2010). மலாய் 88%, சீனர்கள் 8%, இந்தியர்கள் 1.5% இஸ்லாம் 88.5% விழுக்காடாக பெரும்பான்மை மதமாக இருக்கிறது.

பெர்லிஸின் ஆட்சியாளர் சுல்தான் என்றழைக்கப்படாமல், இராஜா என்றழைக்கப்படுவார். பெர்லிஸ் மாநில சட்டமன்ற பேரவையே சட்டங்களை நிறைவேற்றும். மலாய் மற்றும் தாய்லாந்து கலச்சாரங்கள் இந்த மாநிலத்தில் செல்வாக்கைப் பெற்றுள்ளன. பழமையான கிராம பாரம்பரியங்கள் கவர்ச்சியுடயவை. “அரிசி” மற்றும் “சாகுபடி” முதன்மை வாய்ந்த பொருளாதார உற்பத்தியாகும். மீன் பிடித்தலும், வனவளமும் இங்கு அதிகம் உள்ளது. கரும்பு தோட்டத்தின் ஆதி இருப்பிடம் பெர்லிஸ் ஆகும்.

பெர்லிஸ் மாநில பூங்காவும், குவா கேலாம் எனும் குகை மிகவும் பிரசித்திப் பெற்றவை ஆகும். பிரபல உணவு தோம் யாம், & லக்சா பெர்லிஸ். டாக்டர் முகமட் அஸ்ரி சய்னுல் அபிடின் மலேசியாவில் மிகச் சிறந்த இஸ்லாமிய போதகர் எழுத்தாளர் மற்றும் விரிவுரையாளர் ஆவார்.

**ரோமர் 10 :17**
ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.

28 வயதாகிய ஆன் நமக்காக பகுதி நேரம் வேலை செய்பராவார். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். ஆனால் தன் குடும்பத் தொழிலுக்கு உதவி வருகிறார். கடந்த 3 மாதங்களாக அவரின் குடும்ப வணிபமான உணவு கேட்டரிங் நடத்தி வருகிறார். அவரின் தாயார் உடல் நலமில்லாத கணவரை கவனித்துக் கொள்கிறார். எனவே ஆன் உணவு கேட்டரிங் வணிகத்தையும் அவருடைய முழு பொருப்பில் கவனித்து கொள்கிறார். அவருடைய கடையில் ஒரே வேலையாள் இருப்பதால் எல்லா நாட்களிலும் கடை திறப்பதில்லை. நம்மோடும் இணைந்து பணியாற்றுகிறதும் இதற்கு ஒரு காரணம். அவருடைய தாயார் கடையை முடிவிடும் யோசனையில் இல்லை. அதே நேரம் நம்மோடு தொடர்ந்து பணியாற்றவும் விரும்புகிறார். அவருக்கு அதிகமான வேலையாட்கள் கிடைக்க வேண்டும் என்று நாங்கள் அவர்களுக்காக பிரார்த்தனை செய்தோம். எனினும் அவர் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறார்.

பட்டம் பெற்ற பல இளையோர்களை பார்த்திருக்கிறோம். பெரும்பாலோர் பெற்றோர் மற்றும் வீட்டில் முதியோர்களைக் காப்பாற்ற கூலிவேலைகள் மற்றும் குறைந்த வருமானம் உள்ள வேலைகளை செய்துவருகிறார்கள். அவர்களின் குடும்ப மானத்தை காக்க இந்த வேலைகளை செய்தாலும் மிகுந்த மன உளைச்சல் அடைகிறார்கள். குடும்பத்தில் இருக்கிற எல்லா சகோதரர்கள் குடும்பச் செலவை பகிர்ந்துக் கொள்வதில்லை. அதனால் அதிக கஷ்டப்படுகிறவர்கள் நம்பிக்கை இழந்து விடுகிறார்கள். இதற்காக இவர்களோடு சேர்ந்து அவர்களுக்காக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது. இவர்களிடத்தில் அன்புக் காட்டவும் நடைமுறை ஆலோசனையும் வழங்குவோம்.








**ஜெபக் குறிப்புகள்**

- பெர்லிஸ் அயலகத்தார் ஒவ்வொருவரும் அப்பா பிதாவே என்று அழைக்கப்படுகிறவரும் நீதியும் அன்பும் உள்ள அவரையே அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.
- இயேசு கிறிஸ்து மூலம் மாத்திரமே தேவனாகிய பிதாவை அணுக முடியும் என்று பெர்லிஸ் அயலகத்தார் உணர்ந்து கொள்ள ஜெபியுங்கள்.
- தாய்லாந்து எல்லையில் வாணிபம் மற்றும் கலாச்சாரம் மாத்திரமே நடைபெறாமல், தேவ வசனமும் பரிமாறிக் கொள்ளப்பட ஜெபியுங்கள்.
- ராஜாவுக்கும், மந்திரி பெசாருக்கும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
இந்த வாரம் உன் அயலானுக்கு ஒரு வேளை உணவு உட்கொள்ள அழைப்புக் கொடு.

# கெடா

தீபகற்ப மலேசியாவின் வடக்கே உள்ள கெடா மாநிலம் 9,425 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. தாய்லாந்தின் எல்லையைப் பகிர்ந்துக் கொள்கிறது. கெடா முழுமையாக மலேசியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது. கெடா, பெர்லிஸ்சின் நெல்விளைச்சல் மொத்த உள்நாட்டு நெல் விளைச்சலின் பாதிக்கு மேலாகும்.

கெடா இந்நாட்டின மிகப் பழைய மாநிலம். லெம்பா பூஜாங் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பழம்பொருட்கள், கி.பி. 4ஆம் நுற்றாண்டுகளில் மலாய் கலாச்சாரத்தில் இந்து மற்றும் புத்த மதக்காரியங்கள் இருப்பதாக காண்பிக்கிறது. கெடாவின் வரலாறு: ஆச்சேயர்களால் தோற்கப்பட்டு, பிறகு சியாமியர்களின் ஆக்கிரமிப்பு. கடைசியாக பாங்கோக் ஒப்பந்தத்தின் மூலம் 1909-இல் பிரிடிஷ்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனாலும் இவைகள், சுல்தான்களின் ஆட்சியமைப்பை பாதிக்காதபடியினால், இன்றும் யாங் டி பெர்துவான் ஆகோங், சுல்தான் அப்துல் அலீம் இங்கு கெடாவின் சுல்தானாக ஆட்சிபுரிகிறார்.

மாநில தலைநகரமான அலோர் ஸ்டார் அரசாங்க தலைமையமாகவும் வணிக ஸ்தலமாகவும் உள்ளது. பழம்பெரும் கட்டிடங்கள் இன்னும் அசலாகவே உள்ளதோடு மட்டுமல்லாமல் அநேக பழைய பொருட்களும் இருக்கின்றன.

கெடாவின் மக்கள் தொகை 1,880,783 (2010). அதிகமானோர் மலாய்காரர்கள் (77.5%) சீனர்கள் (13.5%) இந்தியர்கள் (7%). இஸ்லாம் முக்கிய மதமாகும் (78%), கிறிஸ்துவர்கள் (0.7%) பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சீனர்களும் இந்தியர்களும் ஆவர். 1000 சீன முஸ்லிம்களும் 3300 இந்திய முஸ்லிம்களும் உள்ளனர்.

பூலாவ் லங்காவி அனைத்துலக பெயர் பெற்ற சுற்றுலாத்தளம். ஆழகிய கடற்கரைகளும் அங்கு உண்டு. உலகலாவிய மாநாட்டு கூட்டங்கள் இங்கு அதிகம் ஒருகினைக்கப்படும். கெடாவின் பிரபலமான உணவுகள் பெகாசாம் மீன், லக்சா குவால கெடா. கெடாவில் 12 நிர்வாக மாவட்டங்கள் உள்ளன. இந்தப் புத்தகத்திகாக 12 மாவட்டங்களை 4 மண்டலங்களாக்கி இருக்கிறோம்.

மண்டலம் 2: லங்காவி, குபாங் பாசு & பாடாங் தெராப்

மண்டலம் 3: கோத்தா சேத்தார், போகோக் சேனா & பெண்டாங்

மண்டலம் 4: யான், குவாலா மூடா & சீக்.

மண்டலம் 5: பாலிங், கூலிம் & பண்டார் பாரு.

**மக்கள் தொகை** (2010)
**மொத்தம்** : 1,880,783

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 77.5 |
| சீனர் | 13.5 |
| இந்தியர் | 7 |
| மற்றவர்கள் | 2 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 78 |
| புத்தம் | 14 |
| இந்து | 6.7 |
| கிறிஸ்துவம் | 0.7 |



கெடா கொடி

# கெடா



## மண்டலம் 2. கெடா - லங்காவி, குபாவ் பாசு, மற்றும் பாடாங் தெராப்.




**லங்காவி**, 99 தீவுக்கூட்டங்களில் லங்காவி முதன்மையானது. வடமேற்கில் இருக்கும் இந்த தீவு அழகிய கடற்கறைக்கு பெயர்பெற்றது. மலாய் இளவரசி மாஹ்சூரி ஏழு தலைமுறைகளுக்கு இத்தீவை சபித்து விட்டதாக இங்கே உள்ள மக்கள் நம்புகிறார்கள். இந்த சாபம் இப்போது முடிந்து மிகப்பெரிய அளவிளான முன்னேற்றம் அடைந்து வருவதாக நம்புகிறார்கள். இங்கு வசிப்பவர்களில் 93% மலாய்க்காரர்கள்.

| லங்காவி: 85,588 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 93 |
| சீனர் | 5 |
| இந்தியர் | 2 |

**குபாங் பாசு** : இந்த மாவட்டம் கல்வி மையமாக பெயர் பெற்று இருகிறது. வட மலேசியா பல்கலைகழகம் இங்கே அமைந்திருக்கின்றது. இங்கே வாழ்கிறவர்கள் பெரும்பாலும் விவசாயிகளும் வணிகர்களும் ஆவர். விவசாயத்தை அடுத்து இன்னும் பல வளர்ச்சியும் உள்ளன. 1974-ஆம் ஆண்டிலிருந்து 2004 வரை துன் டாக்டர் மகாதீர் முகமது குபாங் பாசு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். 1981 - 2003 வரை அவரே மலேசியாவின் பிரதம மந்திரியாகவும் இருந்தார். இங்கே வசிக்கும் மலாய்க்காரர்கள் 88% ஆவர்.

| குபாங் பாசு: 215,491 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 88 |
| சீனர் | 8 |
| இந்தியர் | 2 |
| மற்றவர்கள் | 2 |

**பாடாங் தெராப்**: தெராப் மரத்தின் பெயரே மாவட்டத்தின் பெயர் ஆயிற்று. சிறிய அளவிளான தாய்லாந்து குடியேற்றம் உண்டு. இங்கே 92% விழுக்காடு மலாய்க்காரர்கள்.

| பாடாங் தெராப்: 61,325 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 92 |
| சீனர் | 1 |
| இந்தியர் | 0 |
| மற்றவர்கள் | 7 |

**ஏசாயா 61:11**

பூமி தன் பூண்டுகளை விளைவிப்பதுபோலவும் தோட்டம் தன்னில் விதைக்கப்பட்டவைகளை முளைவிப்பதுபோலவும் கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார்.

பீட்டரும் அவரது அயலாரும் இரண்டு மணி நேர பயண இடைவெளி கொண்ட தன் மனைவி வாழும் கிராமத்திற்கு செல்கின்றனர். மனைவியை விட்டு பிரிந்து வாழ்வது வியப்பாக இருந்தாலும், குடும்பத்தாரை விட்டு தொலைவில் நல்ல வேலையில் பணிபுரிவது இங்கு வழக்கமாய் இருந்தது. கிராமத்தில் இதிக வருமானம் கொண்ட நல்ல வேலை கிடைப்பது சிரமம். ஆதலால் பீட்டரை போல பலரும் எங்கே நல்ல வேலை இருக்கிறதோ அங்கே போய்விடுகிறார்கள். கடந்த வருடத்தில் திருமணமாயிருந்தாலும், இவர்கள் ஒன்றாக இல்லை. பிட்டரின் மனைவி கிராமத்தில் வசிக்கிறார்கள். அவர் அருகே உள்ள பல்கலைகழகத்தில் பணிபுரிகிறார். அவர்களுடைய வீடும் இந்தக் கிராமத்திலேயே இருக்கிறது. எனினும் பீட்டர் பட்டணத்தில் வேலை செய்துவிட்டு வார இறுதியில்தான் கிராமத்துக்கு திரும்புவார். கெடாவில் உள்ள பல பேர்கள் கோலாலம்பூர், ஜொகூர்பாரு, சிங்கப்பூர் போன்ற பெரிய பட்டணங்களில் வேலை செய்துவிட்டு இப்படியாக வார இறுதியில்தான் குடும்பத்தினரைக் காண வீடு திரும்புவார்கள். இது திருமணங்களையும் குழந்தைகளையும் பெரிய அளவில் பாதிக்கிறது. மேலும் நல்ல வேலையில் உள்ள சில கணவன்மார்கள் இரண்டாவது திருமணம் செய்து கொள்வதால் குடும்பத்தில் இன்னும் பெரிய சிக்கல்கள் உருவாகிறது.








**ஜெபக் குறிப்புகள்**

- கணவன் தன் முதல் மனைவிக்கு உண்மையாக இருக்கவும் அவர்களுடைய திருமணம் வாழ்க்கை பலப்படவும் ஜெபிப்போம்.
- லங்காவியில் அண்டை வீட்டாருக்கு சுவிசேஷம் சொல்லுகிற ஒரு குடும்பத்தாருக்காக ஜெபிப்போம்.
- வெளிநாட்டிலிருந்து மேலும் அதிகமானோர் நற்செய்தியை கொண்டு வர ஜெபிப்போம்.
- சிறிய தேவாலயங்களுகளும் தங்கள் மாவட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்பதை அறிந்துக்கொள்ள ஜெபிப்போம்.
- கெடா ஆட்சியாளருகாகவும் முதலமைச்சருகாகவும் ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**

உங்கள் அயலக நண்பரை இன்னும் சிறப்பான முறையில் அறிந்து கொள்.

## மண்டலம் 3. கெடா - கோத்தா சேத்தார், போகோக் சேனா & பெண்டாங்




**கோத்தா சேத்தார்** மாவட்டத்தில்தான் மாநில தலைநகரமான அலோர் ஸ்டார் உள்ளது. உள்ளூரில் விளையும் சேத்தார் மரத்தின் பெயரே அலோர் ஸ்டார் என மாறியது. துங்கு அப்துல் ரஹ்மான் மற்றும் துன் டாக்டர் மகாதீர் பிறந்த இடமும் இதுவே. பழமையான மனநிலைமையும், கொஞ்சம் கடுமையாக இஸ்லாத்தின் வழியை பின்பற்றுவதோடு உள்ளூர் வாசிகள் அரச ஆட்சியில் பெரும் மதிப்பும் கொண்டுள்ளனர். கெடாவின் சுல்தான், சுல்தான் அப்துல் ஹலீம் ஆவார். இங்கே உள்ள நெல் காட்சியகம் கெடாவின் முதன்மை விளைச்சல் நெல்தான் என பறைசாற்றுகிறது. 19-ஆம் நூற்றாண்டில் கெடா சியாமிற்கு கப்பம் கட்டின பல பழம்பொருட்களை காட்சியகத்தில் வைத்திருந்தார்கள். மலாயக்காரர்கள் 74.5%, சீனர் 22.5%, சில கிறிஸ்துவ தேவாலயங்களும் உள்ளன.

| கோத்தா சேத்தார்: 360,129 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 74.5 |
| சீனர் | 22.5 |
| இந்தியர் | 2.5 |
| மற்றவர்கள் | 0.5 |

| போகோக் சேனா: 47,745 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 92 |
| சீனர் | 5.5 |
| இந்தியர் | 1.5 |
| மற்றவர்கள் | 1 |

**போகோக் சேனா** கெடாவின் 12வது மாவட்டம். முன்னர் கோத்தா சேத்தாரின் பகுதி மாவட்டமாக இருந்தது. ஆங்சானா என்ற மரத்தின் மலாய் பெயரே போகோக் சேனா. விவசாயம் பெருமளவு பொருளாதார உற்பத்தியாயினும், அலோர் ஸ்டாரின் மிகப்பெரிய துணைக்கோள் நகரமாக உருப்பெற அரசங்காம் திட்டமிட்டுள்ளது. மலாய்காரர்களின் குடியிருப்பு 92%.

**பெண்டாங்** : பாரம்பரிய மலாய்காரர்கள் வாழும் இடம். கெடாவின் மிகப்பெரிய விவசாய மாவட்டம். அதிக அளவில் சியாம் மக்கள் தொகை உண்டு. மலேசியா தாய்லாந்தினரும் இருக்கின்றனர். மலாய்க்காரர்களின் குடியிருப்பு 90%.

| பெண்டாங்: 94,033 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 90 |
| சீனர் | 3.3 |
| இந்தியர் | 0.3 |
| மற்றவர்கள் | 6.4 |

**ரோமர் 10:14-15**

அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே.

நம் அயலானான கென்னி, கடந்த இரண்டு வருடங்களாக சிகரெட் புகைப்பதை நிறுத்த முயன்றும் இயலவில்லை. கொஞ்சநேரம் அவரோடு இருந்த போது அவரின் நிலையைத் தெரிந்து கொண்டு இதற்கு ஆவிக்குறிய தீர்வு உண்டு எனச் சொல்லி, அவருக்காக ஆண்டவரின் உதவிக்காகவும் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபித்தோம். ஆண்டவர் எங்கள் ஜெபத்தைக் கேட்டு கென்னியின் புகைப்பழக்கத்தை நிறுத்தினார்! அதன் பிறகு கென்னியும் அவர் மனைவி ரேச்சலும் கிறிஸ்துவத்தில் ஆர்வம் காட்டினர். மற்றொருநாள் எங்கள் சகோதரியை கென்னியும் அவரது மனைவியும் சந்தித்தபோது, அடுத்தமுறை நீங்கள் வரும்போது உங்கள் கதைப்புத்தகத்தை (வேதாகமத்தை) கொண்டுவருமாறு கேட்டுக் கொண்டனர்.

மீண்டும் ஒருநாள் சந்திந்தபோது அவர்களுடைய வேதத்தில் இயேசுவைப்பற்றி சில வசனங்களைப் பார்த்தோம். உதாரணமாக இயேசு குருடர்களை குணப்படுத்தினார் என்று எழுதப்பட்டிருந்தாலும் அதை பற்றி அதிக விவரங்கள் அந்த வேதத்தில் இல்லை. ஆகவே மேலும் விவரங்களை நம்முடைய வேதத்திலிருந்து கேட்டார்கள். இதுவே அற்புதங்களை செய்கிற இயேசுவைப் பற்றி அவர்கள் தெரிந்துக்கொள்ள வாய்ப்பாய் அமைந்தது. இதன் மூலம் இயேசுவைப் பற்றிய திரைப்படத்தையும் அவர்களுக்கு காட்டுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறோம்.







**ஜெபக் குறிப்புகள்**

- கென்னி மற்றும் ரேச்சல் போன்று அநேகர் திறந்த மனதுடையவர்களாக ஜெபிப்போம்.
- போகோக் சேனா மற்றும் பெண்டாங்கில் உள்ளவர்களுக்கு வேதாகமம் உடனடியாக கிடைக்கப்பெற ஜெபிப்போம்.
- கோத்தா சேத்தாரில் உள்ள கிறிஸ்துவர்கள், ஆண்டவரைப் பற்றி சிந்திப்பவர்களை சந்தித்து உதவி செய்ய ஜெபிப்போம்.
- பல குழுவினர் தவறாமல் இங்கு வந்து இயேசுவின் அன்பை பகிர்ந்து கொள்ள ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**

உன் பகுதியில் வாழும் அயலானைப்பற்றி தெரிந்து கொள்.


## மண்டலம் 4. கெடா - யான், குவலா மூடா & சீக் (தொடர்ச்சி.... அடுத்த பக்கம்)



## மண்டலம் 4. கெடா - யான், குவலா மூடா & சீக் (முந்தைய பக்கத் தொடர்ச்சி)



## மண்டலம் 4. கெடா - யான், குவாலா மூடா மற்றும் சீக் (முந்தைய பக்கத் தொடர்ச்சி)




| யான்: 67,653 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 93 |
| சீனர் | 6.5 |
| இந்தியர் | 0.1 |
| மற்றவர்கள் | 0.4 |

| குவாலா மூடா: 435,959 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 65.5 |
| சீனர் | 19.5 |
| இந்தியர் | 14 |
| மற்றவர்கள் | 1 |

| சிக்: 65,774 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 93 |
| சீனர் | 1 |
| இந்தியர் | 0 |
| மற்றவர்கள் | 6 |

**யான்** மாவட்டம் மலாக்கா நீரிணையின் கரையோரம் அமைந்திருக்கிறது. இந்த இடம் மிக அமைதியான அருவியும் கடற்கரையும் கொண்டது. கெடாவின் மிக உயரமான சிகரமாகிய குனோங் ஜெராயிலிருந்து (1220 மீட்டர்) பரந்த நெல் வயலையும் நீரிணையும் பார்த்தால் கண்கொள்ளா காட்சியாக இருக்கும். மலாய்க்காரர்கள் (93%), சில இடங்களில் ஆச்சே ஜனத்தினர் குடியுள்ளனர்.

**குவாலா மூடா** மாவட்டத்தில் பண்டைய நாகரீக வளர்ச்சிகளின் குடியிருப்பு இருப்பதால் இந்த மாவட்டம் புகழ் வாய்ந்தது. சுங்கை பட்டாணி நிர்வாக நகர மையமாகும். லெம்பா பூஜாங் தீபகற்ப மலேசியாவின் சிறந்த மற்றும் பழமை வாய்ந்த மண் ஆய்வாளர் இடமாக விளங்குகிறது. 5-ம் நூற்றாண்டில் ஒரு துறைமுகமாகவும் 7-ம் நூற்றாண்டில் ஸ்ரீ விஜயா பேரரசின் பகுதியாகவும் இருந்தது. 9ஆம் 10ஆம் நூற்றாண்டுகளில் இஸ்லாம் காலடி எடுத்து வைக்குமுன் இந்த பகுதிகள் மிக பிரபலமாக இருந்தன. பூஜாங் நதிக்கறையோரம் சுமார் 50 பண்டைய கல்லறை கோவில்களும், இந்து தெய்வ சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பண்டைய மலாய் நாகரீகத்தையும் இவை படம்பிடித்துக் காட்டுகின்றன. சீன மற்றும் இந்திய வம்சாவளியினர் இங்கு அதிகம். சீனர்கள் 19.5%, இந்தியர்கள் 14%, கிறிஸ்தவ தேவாலயங்களின் செல்வாக்கு இங்கு அதிகம் உண்டு.

**சிக்** - இப்பகுதி கெடாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. பெருபான்மையினராக 93% மலாய்க்காரர்கள் இருக்கிறார்கள். “மூடா நதி” கெடாவின் மிக நீண்ட நதியாகும். “உளு மூடா” பூங்காவனம் இயற்கை வழங்களைக்கொண்ட 109 வகை பாலூட்டிகளின் ஓர் இடமாக அமைந்துள்ளது.

**ஏசாயா 43: 1-2** இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது.





அயலாரிடத்தில் பொல்லாத ஆவிகளின் கிரியைகள் அதிகம் காணப்பட்டது. தொலைக்காட்சியில் பேய்க்கதைகளும் மற்றும் அசுத்த ஆவிகள் கொண்ட நிகழ்ச்சிகள் நிறைய காட்டப்படுகின்றன. கெட்ட ஆவிகள் தேடும் ரியாலிட்டி ஷோவும் சூன்யகாரர்களின் ஆவிகள் விரட்டும் காட்சிகளும் இடம் பெறுகின்றன.

இந்த வேளையில்தான் ஆண்டவர் ஜேக் என்பவரோடு பேசி அவருடைய மனதில் இசையின் மூலமாக ஊழியம் செய்ய ஏவினார். கித்தார் இசைக்கருவியின் வழியாகவும், துதித்தலின் மூலமாகவும் ஆண்டவர் கிரியை செய்ய ஆரம்பித்தார். தாவீது வாத்தியக் கருவியை இசைக்கும்போது சவுலை விட்டு ஒரு தீய ஆவி வெளியேறினதை அறிவோம். அது போல ஜேக்கின் கித்தார் இசையின்மூலம் அங்குள்ள மக்களுக்கு இதமான ஒரு தேவ வெளிச்சத்தைக் உணர முடிந்தது. இருளில் உள்ளவர்களை இந்த இசையும் பாடல்களும் மனம் சமாதானம் அடையச் செய்கிறதா என்று ஜேக் கேட்டார். அடுத்த சில வாரங்களில் ஜேக் பல அழகிய சிறந்த பாடல்களை இயக்கினார். அவற்றை கேட்டவர்கள் மிகவும் சமாதானம் அடைந்ததாக கூறியுள்ளனர். பரிசுத்த ஆவி மேலும் இரண்டு மூன்று பாடல்களை ஆண்டவரைப் பற்றிய மாட்சிமை, அவரின் பரிசுத்த தன்மைகள் போன்றவற்றை விவரித்து இயக்க வைத்தார். ஜேக்கின் மொழி ஆற்றல் சிறப்பாக இல்லாவிட்டாலும் இறைவன் அவருக்கு இனிமையான குரலைத் அளித்திருக்கிறார்.




**ஜெபக் குறிப்புகள்**

- ஆண்டவரின் மகிமையை உயர்த்தவும், துன்பப்படுகிறவர்கள் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அவரை புரிந்து கொள்ளும்படி, ஞானமாய் ஊழியம் செய்ய பரிசுத்த ஆவியானவர் ஜேக்குக்கு உதவி செய்ய ஜெபியுங்கள்.
- மந்திரவாத வல்லமைகளை நாடுகிறவர்கள் இயேசுவின் வல்லமையைக் காண ஜெபியுங்கள்.
- யான், குவாலா மூடா, சிக் பகுதி மக்கள் புதிய செய்திகளையும் நன்மைகளையும் தெரிந்து கொள்ளவும் ஜெபியுங்கள்.
- இப்போது அங்கே ஊழியம் செய்பவர்கள் தொடர்ந்து உறுதியாக இருந்து தேவ வெளிச்சத்தை பிரகாசிக்க ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உங்கள் அண்டை நண்பருடன் உங்கள் சாட்சியை பகிர்ந்துக் கொள்ளுங்கள்.

## மண்டலம் 5. கெடா - பாலிங், கூலிம், பண்டார் பாரு




| பண்டார் பாரு: 41,659 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 82 |
| சீனர் | 11 |
| இந்தியர் | 6.5 |
| மற்றவர்கள் | 0.5 |

| கூலிம்: 272,024 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 63.5 |
| சீனர் | 17 |
| இந்தியர் | 18.7 |
| மற்றவர்கள் | 0.8 |

| பாலிங்: 133,403 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 91 |
| சீனர் | 3.5 |
| இந்தியர் | 4 |
| மற்றவர்கள் | 1.5 |

**பாலிங்** மாவட்டத்தில்தான் பாலிங் பட்டணம் இருக்கிறது. 1956ல் நடந்த மலாயா அவசர கால பிரகடன சட்டத்திற்குப் புகழ்ப்பெற்றது. இதில் பங்குக்கொண்டவர்கள் துங்கு அப்துல் ரஹ்மான், துன் தான் செங் லோக், டேவிட் மார்ஷல் மற்றும் சின் பெங் ஆகியோர். இந்த பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்து மலாயா சரித்திரத்தின் மறு மேம்பட்டிற்கு வித்திட்டது. பெரும்பான்மையினர் மலாய்க்காரர்கள் 91%.

பினாங்கு எல்லையை ஒட்டி கெடாவின் தென் கிழக்குப்பகுதியில் **கூலிம்** மாவட்டம் அமைந்திருக்கிறது. கூலிம் மரம் எனும் புகழ்பெற்ற மரத்தின் அடிப்படையில் இந்தப்பெயர் விளங்குகிறது. வட பகுதியின் தொழில்நுட்ப மையமாக விளங்குகிறது. கூலிம் ஹை டெக்ஹ் தொழிற்நுட்பம் இங்கு இருந்துதான் கூலிம் மேம்பாட்டை ஊந்துவிக்கிறது. கூலிமில் சீனர்(17%), இந்தியர் (18.7%) அதிகம்.

கெடாவின் தென்கிழக்கு பகுதியில் **பண்டார் பாரு** மாவட்டம் இருக்கிறது. கெடா, பினாங்கு, பேராக் மாநிலங்களின் எல்லையைத்தொடும் மூன்று கூறு பகுதி இது. மலாய்க்காரர்கள் 82%, சீனர்கள் 17%.

**எபேசியர் 4:1**
ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து,..

பலருடைய மூட நம்பிக்கை தங்கள் குடும்பத்தில் தலைமுறையாய் தொடருகிறது. செலினா தன்னுடைய அண்டை வீட்டுக்காரியான பெத்திடம் அவர்களுடைய கலாச்சாரத்தில் சடங்குகள் ஏதாவது இருக்கிறதா எனக் கேட்டார். அப்படித் தெரிந்து கொண்டால் அக்குடும்பத்தை புண்படுத்தும் செயலிலிருந்து தவிர்க்கலாம் எனும் எண்ணத்தில் வினவினாள். செலினா ஒருமுறை வீட்டில் இருக்கும்போது விசிலடித்தாள். பின்னர் ஒருநாள் பெத் வீட்டுத் தெருவில் செலினாவை பார்க்க வந்தபோது, வீட்டிற்குள் விசில் அடித்தால் பாம்பு வரும் என்று கூறினாள். செலினாவிற்கு இது சிரிப்பாக காணப்பட்டாலும் பேத்திடம் மரியாதையாய் இருக்க வேண்டிய நிமித்தம் மன்னிப்பு கேட்டாள். அவள் அதற்கு மேல் விசிலடிக்கும் பழக்கத்தை நிறுத்திக்கொண்டு பேத் தான் கொண்டிருக்கும் நம்பிக்கை பற்றி மேலும் விசாரித்தாள். அதோடு பேத்திற்கு பயம் இருக்கிறதை உணர்ந்து எப்படி அவளுக்காக ஜெபிப்பது என விளங்கிக்கொண்டாள் செலினா. ஆண்டவரின் பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்.

அயலாரின் உயர் கல்வி பொருளாதாரம் சமூக அளவு உயர்வாக இருந்தாலும் இத்தகைய மூட நாட்டுப்புற நம்பிக்கைகள் பொதுவாகவே அவர்கள் மத்தியில் நிறைந்து இருக்கின்றன. சாதாரணமாக நோய்வாய்படும்போது முதலில் சூனியக்காரர்களிடம் செல்கிறார்கள் அதன் பின்னரே மருத்துவரை நாடுகிறார்கள். அல்லது யார் மேல் பொறாமை கொண்டார்களோ, அந்த மாந்திரீக வைத்தியர்களைக் கொண்டு சபிக்க சொல்கிறார்கள்.








**ஜெபக் குறிப்புகள்**

- தேவ பிள்ளைகள் எல்லா வேளைகளிலும் தங்கள் அயலாருக்காக ஜெபம் பண்ணுகிறவர்களாக இருக்க ஜெபியுங்கள்.
- பாலிங், கூலிம், பண்டார் பாருவில், இயேசுவின் முழு உண்மையையும் அவர்களுக்கு வெளிப்படுத்த ஜெபியுங்கள்.
- தப்பான போதனை, தவறான புரிந்துணர்வுகள் களைய ஜெபியுங்கள்.
- தவறான புரிந்துணர்வுகள அவர்கள் மத்தியில் இருந்து அகன்றுபோய் சத்தியத்தை விளங்கிக்கொள்ள ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உன் அயலான் நண்பனிடம் இயேசுவைப்பற்றி சொல்ல தேவனுடைய வழிநடத்துதலுக்காக ஜெபித்தல்.

# பினாங்கு தீவு

தீபகற்ப மலேசியாவின் வடமேற்கே உள்ள பினாங்கு தீவை கீழ்த்திசை முத்து என்பார்கள். தீவின் பரப்பளவு 290 சதுர கிலோ மீட்டர். 760 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பு மலேசிய தீபகற்பத்தில் இருக்கிறது. தலைநகரம் ஜோர்ஜ்டவுன் நகரம் பினாங்கு தீவிலும், பட்டர்வோர்த் எனும் பெருநகரம் செபெராங் பிராயிலும் உள்ளன.

ஜோர்ஜ் நகரம் வணிய மையமாகவும் இருக்கிறது. மேற்கும் கிழக்கும் இணைந்து இருக்கின்றன. பலவண்ண, கலாச்சார கட்டிட சரித்திர அமைப்புகள் கவனமாக பராமரிக்கப்பட்டு பாரம்பரியமான ஜோர்ஜ் நகரத்தை 2007ல் உலக கலாச்சார பாரம்பரிய நகரம் என்று யுனெஸ்கோ அங்கிகரித்தது.

மின்சார உற்பத்தி மையமாகவும் பினாங்குத் தீவு அமைந்திருக்கிறது. பாயான் லெபாஸ் மண்டலம் உயர் தொழில் நுட்ப கூடங்கள் பினாங்கு தீவின் பகுதியில் அமைந்திருக்கிறது. இதோடு, தொழில்நுட்பத்துறையில் சிலாங்கூர், ஜொகூர் மாநிலங்களுக்கு அடுத்து மூன்றாவது பொருளாதார வளர்ச்சி மிக்கதாக பினாங்கு இருக்கிறது.

பினாங்கின் மக்கள் தொகை : 1,471,523 (2010) பெருவாரியாக சீனர்கள் 45.5%, அடுத்து மலாய்க்காரர்கள் 43% இந்தியர்கள் 10.5%, பெரும்பாலான சீனர்கள் தீமோர் லாவுட், செபெராங் பெராய் மாவட்டதில் வசிகின்றனர். நாட்டிலே சீன முதலமைச்சர் இருக்கிற ஒரே மாநிலம் பினாங்கு. இஸ்லாம் 44%, கிறிஸ்தவம் 5%, பெரும்பாலான சீனர்கள் புத்தமும் பிற சீன நம்பிக்கைகளிலும் பிராத்திக்கின்றனர். சீனர்களும் இந்தியர்களும் கிறிஸ்தவ மார்க்கத்தில் உள்ள இனங்கள். 1300 சீன முஸ்லிம்கள், 12,000 இந்திய முஸ்லிம்கள் இங்கு வாழ்கின்றனர்.

பினாங்கு லக்சா, நாசி கண்டார், ஹொக்கியன் மீ, கிச்சாப் கொய் தியாவ், பாசெம்பொர், (இந்தியன் ரோஜா) போன்றவை பினாங்கில் பிரபலமான உணவு வகைகள்.

பினாங்கில் 5 நிர்வாக மாவட்டங்கள் உள்ளன. அவற்றை 5 மண்டலங்களாக பிரித்துள்ளோம்.


மண்டலம் 6 : வட செபெராங் பிறை

மண்டலம் 7 : மைய செபெராங் பிறை

மண்டலம் 8 : தெற்கு செபெராங் பிறை

மண்டலம் 9 : தீமோர் லாவுட் பூலாவ் பினாங்கு.

மண்டலம் 10 : பாராட் டாயா பூலாவ் பினாங்கு.



பினாங்கு கொடி

**மக்கள் தொகை (2010)**

**மொத்தம்:** 1,471,523

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 43 |
| சீனர் | 45.5 |
| இந்தியர் | 10.5 |
| மற்றவர்கள் | 1 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 44 |
| புத்தம் | 36.6 |
| இந்து | 8.6 |
| கிறிஸ்துவம் | 5 |
| நாட்டுபுற சீனர்கள் | 5 |

# பினாங்கு தீவு



## மண்டலம் 6. பினாங்கு - வட செபராங் பிராய்







மொத்தம்: 286,323
சதவிதம் (%)

| | |
|---|---|
| மலாய் | 60.5 |
| சீனர் | 31 |
| இந்தியர் | 8 |
| மற்றவர்கள் | 0.5 |

**வட செபராங் பிராய்**, பினாங்கு மாநிலத்தின் நிலப்பகுதியின் நிர்வாக மாவட்டம் ஆகும். இதன் தலைநகரம் கப்பாலா பாத்தாஸ், பெரிய நகரம் பட்டர்வொர்த். இது பினாங்கு தீவோடு பெ.்ரி (Ferry—நீர் கப்பல்) வழி இணைக்கப்படுகிறது. பெரும்பகுதியில் நெல் விவசாயம் அதிகமாக செய்யப்படுகிறது. கப்பாலா பாத்தாஸ் என்பது நமது நாட்டில் 5வது பிரதமராக இருந்த துன் அப்துல்லாவின் ஊர் ஆகும். அவர் ஓய்வு பெரும் முன்னர் இந்தப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். பட்டர்வொத் நகரத்திற்கு ***வில்லியம் ஜோன் பட்டர்வத்*** (1843-1855 கவர்னர்) என்ற நபரின் பெயரே இடப்பட்டது. மலாய் மொழியில் முன்பு பகான் என அழைக்கப்படுவதுதான் பட்டர்வொர்த். 19-ம் நூற்றாண்டில் பினாங்கு தலைநகர் ஜோர்ஜ் நகரத்தின் நீரனை கடற்கரையை இணைக்கும் இடமாக பிரிக்கப்பட்டது. இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் பினாங்கு முதலமைச்சர் லிம் குவான் எங். இவரே ஆயர் பூத்தே, தீமோர் லாவுட் பூலாவ் பினாங்கில் இருக்கும் புக்கிட் பென்டேரா சட்டசபை உருப்பினரும் ஆவார். மலாய்க்காரர்கள் 60.5%, சீனர்கள் 31%. மற்றவர்கள் பரவலாக வசித்தாலும் பட்டர்வொர்த் சுற்றிலும் சீனர்களே அதிகம் காணப்படுகின்றனர்.

**அப்போஸ்தலர் 5:29**
அதற்குப் பேதுருவும் அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாய் இருக்கிறது.





அமெலியா தன் பக்கத்து வீட்டு பீயுடன் உடற்பயிற்சிக்கு செல்வாள். சில வாரங்களாக தங்களைப் பற்றிய விபரங்களை பகிர்ந்துகொண்டார்கள். ஒரு நாள் பீய், தான் தன் சொந்த குடும்பத்தினரையே நம்புவதற்கு இல்லை எனக்கூறி அமெலியாவிடம் பாதுக்காப்பான அடைக்கலம் கிடைப்பதாக கூறினாள். அமெலியா அவளுடன் அமர்ந்து சில கேள்விகளைக் கேட்டும், அவள் சொல்லுவதை கவனித்துக் கேட்டதினாலும் பீய் இயேசுவின் அன்பை அனுபவித்தாள். அவர்கள் சம்பாஷணையின்போது அதிகமாய் வாய்விட்டு சிரித்தார்கள். இந்த அனுபவத்தை பீய் ஒருபோதும் பெற்றதில்லை.

பெண்கள் சத்தமாக சிரிப்பது மரியாதை இல்லை என்றும் அதினால் அப்பெண்களை பார்க்கிறவர்கள் அவர்களை அறிவிலிகள் என தவறான அபிப்பிராயம் கொள்வார்கள் எனவும் ஒரு நாள் பீய் அமெலியாவிடம் சொன்னாள். எனினும், அமெலியா அதற்கு மறு உத்தரவாக களிப்புள்ள இருதயம் ஒரு மருந்துபோல இருக்கிறது என வேதத்தின் வசனத்தை எடுத்துக்க ாண்பித்தாள். மேலும் இன்றைய மருத்துவ உலகம் வேத வசனத்திற்கு திரும்பி அதில் உள்ள மருத்துவ நலன்களை இப்பொழுது கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறது என விளக்கினாள். இவ்வித அற்புதமான வேதத்திலிருந்து குறிப்புகள் இருப்பதை முதன்முறையாக பீய் அறிந்தாள்.



**ஜெபக் குறிப்புகள்**

- அனுதின சம்பாஷணையில், தங்கள் அவிசுவாச நண்பர்களோடு பேசும்பொழுது நடைமுறை காரியங்களை வேதத்திலிருந்து பகிர ஜெபியுங்கள்.
- கடவுளுடைய தயவைப்பெறும்படி பல்வேறு பிரயாசங்கள் எடுக்கிற அநேக அயலார்கள், தேவனுடைய கிருபையைக்குறித்தும் கேள்விப்பட ஜெபியுங்கள்.
- பினாங்கில் உள்ள விவசாய சமூகத்தினர் தேவனுடைய ஆசீர்வாத செழிப்பினைப்பெற ஜெபியுங்கள். நல்ல அறுவடையும் இராஜ்ஜிய விருத்தியும் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.
- பினாங்கின் ஆளுனர் மற்றும் முதல் மந்திரிக்காக ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
நீங்கள் அவர்களை எவ்வளவாய் மதிக்கிறீர்கள் என்பதை உங்கள் அண்டை அயலார்களிடம் சொல்லுங்கள்.

## மண்டலம் 7. பினாங்கு - மைய செபராங் பிராய்

| மொத்தம்: 342,485 சதவிதம்(%) | |
|---|---|
| மலாய் | 50 |
| சீனர் | 39 |
| இந்தியர் | 10 |
| மற்றவர்கள் | 1 |







**செபெராங் பெராய் தெங்கா** பினாங்கின் நிர்வாக மாவட்டமாகும். புக்கிட் மெர்த்தாஜாம் இந்த மாவட்டத்தின் தலைநகர் ஆகும். பிராய் செபெராங் ஜெயா மற்றும் பெர்மாத்தாங் பாவ் ஆகியவை பிற பட்டணங்கள் ஆகும். முன்னாள் துணை பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இந்த தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக பல ஆண்டுகளாக பணிபுரிந்தார். இந்த மாவட்டத்தின் அருகே இருக்கும் பட்டர்வெர்த் மற்றும் செபெராங் ஜெயா வளர்ந்து வருகிற வாணிப மையங்கள் ஆகும். செபெராங் பிறை வட்டாரத்தில் மிகப் பெரிய அளவில் வாணிபம் பெருகி வருகின்றன. பினாங்கோடு ஒப்பிடும்போது கடந்த காலத்தில் இந்தப் பகுதிகள் மேம்படுத்தப்படவில்லை. ஆனால், இன்று வேகமாய் வளர்ச்சி பெற்று வருகிறது. பினாங்கின் பெரிய வளர்ச்சி திட்டங்கள் செபெராங் பிராய் மாவட்டத்தில்தான் இருக்கின்றன. ஜனத்தொகை மலாய்க்காரர்கள் 50%, சீனர்கள் 39%. பெரும்பாலான சீனர்கள் புக்கிட் மெர்த்தாஜாம் பிறை மற்றும் புக்கிட் தெங்காவில் வாழ்கிறார்கள். முக்கிய சுற்றுலாத்தளங்களாக புக்கிட் மெர்த்தாஜாம் பொழுது போக்கு பூங்கா, செபெராங் ஜெயாவில் உள்ள பறவை பூங்கா, புக்கிட் மெர்த்தாஜாமில் புனித ஆன் கத்தோலிக்க ஆலயம் இருக்கிறது.

**அப் : 6.5**

அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானைய தெரிந்துகொண்டு,....




என்னுடைய வாழ்வில் அயலார்களை டஜன் கணக்கில் ஆண்டவர் கொண்டு வந்தார். எங்கள் பட்டணத்தில் 40 நாள் தங்க ஒரு அயலார் குழுவினர் வந்தார்கள். அவர்கள் வீடு வீடாக சென்று இன்னும் அதிகமாக ஜெபத்தை ஊக்குவித்தார்கள். ஜெப ஆலயங்களில் ஜெபம் குறைந்து வருவதாகவும் நாம் சாத்தானை மிதிக்காவிட்டால் நம்மை மேற்கொண்டு விடுவான் என்றார்கள். இப்படி ஒரு தடவை சிற்றுண்டி அருந்தி பேசிக் கொண்டிருந்தப்போது ஒரு நபர் கிறிஸ்தவ வேதாகமம் கறைப்பட்ட வேதாகமம் என்றார். அப்போது 'பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்'' என்று கர்த்தர் எனனோடு பேசினார். அவர்கள் பேசி முடித்தவுடன் இயேசுவின் கதைகளை அவர்களோடு பகிர்ந்து கொண்டேன். முதலில் இயேசு கிறிஸ்து தேவ குமாரனாக இருந்து பிற்பாடு பூமிக்கு மனித குமாரானாக வந்தார் என்றேன். அவர்கள் இதற்கு முன்பு இதை குறித்து கேள்விபட்டவில்லை என்பதால் மிகுந்த ஆச்சரியப்பட்டார்கள். ஆபிரகமாம் என்று அழைக்கப்பட்டவர் என்னிடத்தில் வந்து அவர் என்னோடு பரலோகத்தில் இருக்க வேண்டும் என்றார். நான் நிச்சயமாக அங்கே இருப்பேன் என்று நம்பிக்கையோடு சொன்னபோது அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார்.



**ஜெபக் குறிப்புகள்**



- ஆபிரகாமும் அவரது நண்பர்களும், இயேசு கிறிஸ்து தம்முடைய அழைப்புக்கு பதிலளிக்கிறவர்களுக்காக அவர் ஆயத்தம் பண்ணிய இடத்தில் தாங்களும் இருக்கலாம் என்பதை அறிந்துகொள்ள ஜெபிக்கவும்.
- அயலாரின் மத தலைவர்களுக்காக ஜெபிப்போம். தாங்கள் செய்கிறது என்னவென்று அறியாதிருக்கிறார்கள்.
- அரசியல் தலைவர்களின் குறைபாடுகள் குறித்து அயலார்கள் உள்ளத்தில் சந்தேகங்கள் உண்டாக்கி தலைவர்களின் ஆன்மீக உண்மைத்துவத்தை குறித்து கேள்விகள் கேட்க ஜெபிப்போம்.
- செபராங் பிராயில் உள்ள அயலார்கள் சுவிஷேத்தை பகிர்ந்து கொள்ளும் விசுவாசிகளோடு தொடர்பு கொள்ள ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**

ஒரு கார்டு எழுதி உன் அயலான் நண்பனுக்கு அனுப்புதல்

## மண்டலம் 8. பினாங்கு - தெற்கு செபெராங் பிறை




| மொத்தம்: 162,905<br>சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 41 |
| சீனர் | 39.5 |
| இந்தியர் | 18.7 |
| மற்றவர்கள் | 0.8 |

**தென் செபெராங் பிறை** மாவட்டம் பினாங்கு நிலப்பகுதியில் இருக்கிறது. தலைநகர் சுங்கை ஜாவி, பெரிய பட்டணம் நிபோங் தெபால். பிற பட்டணங்கள் பத்து காவான், புக்கிட் தம்பூன், சிம்பாங் அம்பாட், சுங்கை பாக்காப் மற்றும் சுங்கை ஆச்சே. செபெராங் பிறை மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் முன்னணி வகிக்கிறது. செம்பனை மர தோட்டங்கள் நிறைத்திருக்கின்றன. நிபோங் தெபால் என்பது சுற்றியுள்ள கசப்பு நிலத்தில் வளரும் நிபோங் மரத்தையே இது குறிக்கிறது. மலேசியா விஞ்ஞான வளாகம் இங்கே இருக்கின்றது. சிவில் பொறியியல், ஏரோஸ்பேஸ் பொறிவியல், மற்றும் கனினி வளபொறியியல் முதலிய கல்லூரிகள் இங்கே இருக்கின்றன. பினாங்கு மாநிலத்தை வடிவமைத்த பேராசிரியர் சின் புங் கீ நிபோங் தெபாலின் புகழ்பெற்ற மனிதர். ஜனத்தொகை மலாய்க்காரர்கள் 41%, சீனர்கள் 39.5% இந்தியர் 18.7% இது அதிகமாக வாழும் பகுதியாகும்.

**கலாத்தியர் 2:20** கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

'மண்டி பூங்கா' அல்லது மலர் குளியல் சடங்கு நடைமுறை துரதிஷ்டத்தை போக்கும் என்பது தென் கிழக்கு ஆசிய நாடுகளில் நிலவி வரும் மூட நம்பிக்கை. சில அயலார் இந்த துரதிஷ்டம் போனால், செல்வமும் சில வேலையில் நல்ல வாழ்க்கை துணையும்கூட கிடைக்கும் என்று நம்புகிறார்கள். இந்த சடங்கிற்காக ரிங்கிட் 2,100 வரை செலவிட தயாராக இருக்கிறார்கள்.

இந்த சடங்கு மாந்திரீகர்களால் நடத்தப்படுகிறது. க.ஃப்பிர், எழுமிச்சை இலைகள் மற்றும் சில திராட்சை இலைகள் சேர்த்து கலக்குவார்கள்.

15 நிமிடங்களுக்கு இதில் தங்களை ஊறவைத்து இப்படி செய்வது மூலம் துரதிஷ்டங்கள் கழிந்து நல்ல துணை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இன்னொரு சடங்கு மாந்திரீக வசியம். இதை தாங்கள் நேசிக்கிறவர்கள் மேல் தடவினால் அவர்கள் தங்களை காதலிப்பார்கள் என்று எதிர்பார்ப்புடன் இது செய்யப்படுகிறது.







**ஜெபக் குறிப்புகள்**

- கர்த்தர் இத்தகைய மோகங்களை களையச் செய்து அவர்கள் நம்பியுள்ள போலியான சக்திகளிடம் இருந்து காப்பாற்றி மக்கள் இயேசுவின் தூய்மையான அன்பை உணர ஜெபிப்போம்.
- ஆண்டவரின் நற்செய்தியை அயலாரிடம் கொண்டு செல்ல போதகர்களுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் தைரியத்தை தரவும், இன்னும் வாசல்களை திறக்கவும் ஜெபிப்போம்.
- விசுவாசிகளும் பினாங்கு சபைகளும் ஒன்றுகூடி அயலாருக்காக ஜெபிக்கவும் தங்களுடை வளங்களை முறையாய் பயன்படுத்தவும் ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**

உன் அயலானுக்கு ஒரு பரிசு வாங்கிக் கொடு.

## மண்டலம் 9. பினாங்கு - தீமோர் லாவுட் புலாவ் பினாங்கு




| மொத்தம்: 488,061 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 22 |
| சீனர் | 66 |
| இந்தியர் | 11 |
| மற்றவர்கள் | 1 |




**பூலாவ் பினாங் தீமோர் லாவுட்** (வட கிழக்கு பினாங்கு தீவு) பினாங்கு மாநிலத்தின் நிர்வாக, கலாச்சார பொருளாதார மாவட்டமாகத் திகழ்கிறது. இது ஜோர்ஜ்டவுனை தலைநகராகக் கொண்டிருக்கிறது. ஒரு பாலத்தின்வழி பிராய் மற்றும் கெலுகோரை இணைக்கிறது. சில முக்கியம் வாய்ந்த துணை மாவட்டங்கள் – புக்கிட் பெண்டேரா, ஆயர் ஹீத்தாம், பத்து ஃபெரிங்ஹி, தஞ்சோங் பூங்கா, தஞ்சோங் தோக்கோங், ஜெலுத்தோங் மற்றும் கெலுகோர் போன்றவை.
2007 முதல் பினாங்குத் தீவின் வடகிழக்கு கரைப்பகுதி யுனெஸ்கோ உலக பாரம்பரிய அங்கீகாரம் பெற்ற நகரமாக அறிவத்தது. இது மலேசியாவிலேயே அதிகமாக சுற்றுப்பயணம் செய்யப்படுகிற ஸ்தலமாக அமைந்திருக்கிறது. இது 1786ல் மலாய் பிராந்தியங்களில் தமது கிழக்கிந்திய தளத்தை ஸ்தாபிக்க சர் ஃப்ரான்சிஸ் லைட் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. முக்கியமான சீனர்கள் நகரமாக - ஜலசந்தி சூழ்நிலை அமைப்பில், ஆக்கிரமிப்பாளர்களினால் உருவாக்கப்பட்ட கட்டிட பாணியில், பலகை கட்டிடங்களும் மலாய், சீன, இந்திய, பெரனாக்கான், தாய்லாந்து மற்றும் ஐரோப்பிய பாரம்பரிய சமூகங்களின் சமையற்கட்டுகளும் இங்கு காணப்படும். இந்த மாவட்டத்தில், லிட்டல் இந்தியாவில் சீன கோவில்களும், சீனா டவுனில் மசூதிகளும் இருக்கின்றன. சில குறிப்பிட்ட சாலைகளில், இந்திய உணவு வகை, காரமான சிறப்புமிக்க மலாய் மற்றும் சீன மீ வகைகள் உணவுப்பண்டங்கள் கிடைக்கும்.
இந்த மாவட்டத்தின் மக்கள்தொகை, 488 061 பெரும்பான்மை சீனர்கள் (66%), மலாய்க்காரர்கள் (22%). அநேக கிறிஸ்துவ சபைகள் இங்கு இருக்கின்றன.

**ஆதி 2:24** இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

இது ஒரு குக்கிராமத்தில் இயேசுவுக்கு ஒளியாயிருப்பதற்கு அழைக்கப்பட்ட ஒரு தம்பதியினரின் சாட்சி. 'என் கணவரும் நானும் 2 வருடங்களுக்கு முன்பு இருந்தது போல அல்லாமல், எங்களையே நாங்கள் மாற்றிக்கொண்டோம். வெளிப்புறமாக காணும்பொழுது நாங்கள் எல்லாரைப்போலவும் இருந்தோம். ஆனால் எங்கள் இருதயத்தின் உள்ளே ஆண்டவர் ஒரு வல்லமையான மாற்றத்தைக்கொண்டு வந்து எங்கள் விசுவாசத்தில் இன்னும் அதிகமாய் வளரும்படி செய்தார்.' தேவன் எங்கள் பயத்தையும், தவறான கொள்கைகளையும் மற்றும் மற்றவர்களிடம் எதிர்பார்த்து காத்திருந்த எண்ணங்கள் யாவற்றையும் படிப்படியாக எடுத்துப்போட்டார். தேவன் ஜனங்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை எங்களுக்கு வெளிப்படுத்தி, ஜெபிக்கக்கற்றுக்கொடுத்தார். அவருடைய அன்பு எங்கள் ஜீவியத்தையே மாற்றிப்போட்டது.



தேவனை நோக்கி வேண்டுதல் செய்து, எங்கள் வாழ்க்கையை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்த பொழுது, பரிசுத்த ஆவியானவர் ஒரு அயலகத்தாரின் கிராமத்தையே நேசிக்கும் ஓர் அதீத அன்பை எங்களுக்குத் தந்தார். இயேசு அவர்களுக்கு காண்பிக்கிற அன்பும், கரிசனையும் எவ்வளவாய் உள்ளது என்பதனை அறிந்து அவர்களை ஆண்டவரின் இருதயத்தோடு இணைந்து நேசிக்கத் துவங்கினோம். இதே வித பாரத்தோடு அயலாருக்காக தெருக்களில் அன்பை பகிர்ந்து கொள்ளும் ஒருவர் இருந்தார். இந்த பகிர்ந்துகொள்ளுதலின் வழி 3 அயலார்கள் விசுவாசத்திற்குள் வந்தார்கள்.







**ஜெபக் குறிப்புகள்**

- ஒவ்வொரு கிராமத்தின் மீதும் இயேசு கிறிஸ்து தம் அன்பையும் ஆவியையும் பொழியும்படி ஜெபியுங்கள். அவருடைய பிரசன்னத்திலும், வருகையிலும் எல்லா இருளும் மாயையும் விலகுவதாக.
- இரண்டு போதகர்களுக்கும் சபை மக்களுக்கும், அயலாருக்கு உதவி செய்யும் திராணியையும் அவர்களைத்தேடி கண்டுபிடிக்கும் முயற்சியை செய்யவும் ஜெபியுங்கள்.
- தங்கள் வளங்களை பராமரிப்பதில் நல்ல உக்கிராணக்காரர்களாகவும், ஒற்றுமை மற்றும் ஊக்கமான ஜெபத்தில் தரித்திருக்கும் சபைகளாகவும் பினாங்கு திருச்சபைகள் காணப்பட ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

உங்கள் அயலகத்தாருக்கு ஒரு அணிச்சல் (கேக்) செய்து கொடுங்கள்

# மண்டலம் 10. பினாங்கு - பாராட் டாயா பூலாவ் பினாங்கு.







மொத்தம்: 191,749
சதவிதம் (%)

| | |
|---|---|
| மலாய் | 61 |
| சீனர் | 32 |
| இந்தியர் | 6 |
| மற்றவர்கள் | 1 |

**பாராட் டாயா - தென்மேற்கு பினாங்கு** மாகாணம். இதுவும் நிர்வாக ஸ்தலங்கள் கொண்ட மாவட்டம். இந்த மாவட்டம், அதி நவீன தொழில்நுட்பம், தீர்வையற்ற வாணிப மையம், பினாங்கு அனைத்துலக விமான நிலையம் மற்றும் பெயர்பெற்ற கடற்கரை பகுதிகளை உள்ளடக்கியது. இதற்கு மத்தியில் மலாய் சமூக இதய மையமாகிய பாலேக் பூலாவ் செழிப்பான விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் பிடித்திட்டம் ஆகியவை முக்கிய பொருளாதார நடவடிக்கைகளை கொண்டது. பாயான் லெப்பாஸ் தீர்வையற்ற அதி நவீன தொழிற்சாலைப்பகுதி, மலேசியாவிலேயே சிறப்பு வாய்ந்தது. பாலேக் பூலாவ் முக்கியமான பட்டணம். பினாங்கு மாநிலத்திலே கடைசியாக நெல் பயிரிடப்பட்ட நிலம். இங்குதான் சிறந்த பழ வகைகள் குறிப்பாக பழங்கள் பருவத்தில் கிடைக்கும். இந்த மாவட்டத்தின் மக்கள் தொகை, 191,749. மலாய்க்காரர்கள் (61%), சீனர்கள் (32%).

**யோவான் 14:27** சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.



தன் சகோதரன் நடாவின்மேல் பில்லி சூனியம் ஏவப்பட்டதைக் குறித்து சகோதரி எல்சா ஒரு சம்பவத்தைச் சொன்னாள். நடா தன் மனைவியோடு 2 வருடங்கள் மிகவும் நேசத்தோடு வாழ்ந்தவர், தன் பால்ய சிநேகிதி ஒருவரோடு தொடர்பு ஏற்பட்டு அவளுடைய ஆளுகையினால் திருமணத்தில் பிரச்சினை உண்டானது. இரவு கடந்து மறுநாள் வீடு திரும்புவது வழக்கமாகியது. தன் குடும்பத்தாருக்கு மறைக்காமல் இஷ்டம் போல தன் கள்ளத்தொடர்பை பயமின்றி தொடர்ந்தான்.



நாடாவை எப்படியாவது அவன் மனைவியிடமிருந்து பிரித்து அழைத்துச்செல்ல முடிவு செய்ததையும் அதின் அடிப்படையில் அவள் பில்லி சூனியத்தில் ஈடுபட்டதையும் அவனுடைய குடும்பத்தார் அறிந்தபொழுது அதற்கு எதிராக இன்னொரு மந்திர சூனியத்தை கையாண்டனர்.

தேவனை அறியாதவர்கள் நடாவைப்போல நிறைய குடும்பங்கள் இவ்வித கண்ணியிலும், பிசாசின் தந்திரங்களிலும், வலையிலும் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள்.



**ஜெபக் குறிப்புகள்**

- சூனியத்தில் கட்டுண்ட மக்கள் இயேசு கிறிஸ்துவின் விடுதலையிலும், பரிசுத்த ஆவியின் வல்லமையிலும் இரட்சிப்பைக்காண ஜெபியுங்கள்.
- பினாங்குத் தீவின் கிராமப்பகுதியில் வாழும் மக்களுடைய கலாச்சாரங்களில் நுழைந்து அவர்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படி நம் பிள்ளைகள் மத்தியில் தேவன் வாஞ்சையை எழுப்ப ஜெபியுங்கள்.
- விசுவாசக்கூட்டமாக சேர்ந்து ஜெபிக்கும் சிறுகுழுக்களுக்காகவும், அவர்கள் வளர்ந்து, பெருகி தங்கள் மக்கள் மத்தியிலேயே ஊழியம் செய்ய எடுக்கும் பிரயாசத்திற்காகவும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

மாலை வேளைகளில் உன் அயலானை விளையாட்டு மையங்களுக்கு அழைக்கலாம்.

# பேராக்

21,005 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட பேராக், தீபகற்ப மலேசியாவின் 2வது பெரிய மாநிலமாகும். இது ஈயச்சுரங்கத்திற்கு கடந்த காலங்களில் பெயர்பெற்றதாகும். ஈயம் கண்டுபிடிப்பினால், சீன தேசத்து குடியேறிகளை ஈர்த்து இன்று பல்வேறு பன்மொழி, கலாச்சாரம் மற்றும் மரபுரிமைகளைக் கொண்ட சுபீட்சமான மாகாணம்.

இதன் தலைநகரம் ஈப்போ. அழகான மண் சதுப்பு வடிவங்களும் முறையான சாலை வசதிகளும் கொண்டது. ஈப்போவின் மற்ற பெருமை யாதெனில், சுண்ணாம்பு மலை, குகைகள், சீன கோவில்கள் போன்றவை. கோலகங்சாரில் சரித்திரப்பூர்வ கட்டிடங்களுடன் கூடிய அரச அரண்மனை உண்டு. தைப்பிங்-அருங்காட்சி நிலையம் மற்றும் மேக்ஸ்வெல் மலையும் பழைமைவாய்ந்த ஏரி பூங்கா உள்ளன. பங்கோர் தீவு சுற்றுப்பயணிகளை ஈர்க்கும் கடற்கரை கொண்ட தளமாக உள்ளது.

பேராக்கின் மக்கள்தொகை (2010) வாக்கில் 2, 283,290. மலாய் சமூக 54.2%, சீன சமூகம் 30.4%, இந்தியர் 12.4%. இஸ்லாம் மார்க்கம் பெரும்பான்மைக்கொண்டது (55.4%). சீனர்களும் இந்தியர்களும் கொண்ட கிறிஸ்தவம் 4.2% உள்ளனர். 1400, சீன இஸ்லாமியர்களும், 7500 இந்திய முஸ்லிம்களும் இருக்கின்றனர்.

மேலும் 64,000 முஸ்லிம் அல்லாத பூமிபுத்ராக்கள் இருக்கின்றனர். இதில் 24% பேர்கள் இஸ்லாமியர்கள், 23% கிறிஸ்தவர்கள் மற்றும் 28% எந்த மதத்தைச் சார்ந்தவர்களும் அல்லர். பெரும்பான்மையானவர்கள் பத்தாங் பாடாங், உலு பேராக், கோலகங்சார் மற்றும் கிந்தா மாவட்டங்களில் வசிக்கின்றனர்.

பேராக் ஈப்போ சிக்கன் ரைஸ், ஈப்போ வைட் காபி, ரென்டாங் தோக் போன்ற உணவு வகைகளுக்கும் பெயர்பெற்றது. 10 மாவட்டங்கள் பேராக்கில் உள்ளது.

மண்டலம் 11: உலு பேராக், கிரியான் & லாருட் மாத்தாங், செலாமா

மண்டலம் 12: பேராக் – கோலகங்சார், கிந்தா & கம்பார்

மண்டலம் 13: பேராக் – மஞ்சோங் & பேராக் தெங்கா

மண்டலம் 14: பேராக் – ஹீலிர் பேராக் & பத்தாங் பாடாங்



பேராக் கொடி

**மக்கள் தொகை (2010)**

**மொத்தம்:** 2,283,290


| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 54.2 |
| சீனர் | 30.4 |
| இந்தியர் | 12.4 |
| மற்றவர்கள் | 3 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 55.4 |
| புத்தம் | 25.8 |
| இந்து | 11 |
| கிறிஸ்துவம் | 4.2 |


# பேராக்




மண்டலம் 11. பேராக் - உலு பேராக், கெரியான் & லாருட் மற்றும் மாத்தாங் (தொடர்ச்சி அடுத்த பக்கம்)



மண்டலம் 11 பேராக் - உலு பேராக், கெரியான், லாருட் மற்றும் மாத்தாங் (முந்தைய பக்கத் தொடர்ச்சி)



# மண்டலம் 11. பேராக் - உலு பேராக், கெரியான் & லாருட் மற்றும் மாத்தாங், செலாமா




**உலு பேராக்** மாவட்டம், வடகிழக்கு பேராக்கில் உள்ளது. இதன் தலைப்பட்டணம் கிரிக். பேராக்கில் மிகப்பெரிய மாவட்டம். லேங்கோங், லாவீன், இன்தான், பெங்காலான் ஹுலு போன் இதர பட்டணங்களை கொண்டது. தாய்லாந்து, கிளந்தான், கோல கங்சார் லாருட், மாத்தாங் & செலாமா எல்லைகளைத் தொடுகிறது. மலாய் சமூதாயத்தினர் பெரும்பான்மை (74%). மலாய்க்காரர்களைத் தவிர்த்து மற்ற பூமி புத்ராக்களும் அங்கு உண்டு (13%).

**கிரியான்** - அரிசி பயிர் செய்யப்படும் மாவட்டம். பினாங்கு மற்றும் கெடா எல்லைகளைத்தொடும் பாரிட் புந்தார் அதின் தலைப்பட்டணம். பெரும்பான்மையினர் மலாய் சமூகம் (74.5%).

**லாருட், மாத்தாங், செலாமா** ஒன்றிணைந்த ஒரே மாவட்டம். தைப்பிங், பழைய தலை நகரம். 1850 ஆண்டுகளின் சரித்திர சம்பவங்கள் இதில் உள்ளன. நாட்டிலேயே முதலாவது ஈயம் தோண்டுதல் இங்குதான் துவங்கப்பட்டது. கீ ஹின் & ஹை சான் கும்பல் மோதல் லாருட் போர் என்று அழைக்கப்பட்டது. டைப்பிங் மற்றும் போர்ட் வெல்ட்டை இணைக்கும் முதல் மலாயா இரயில் நிலையம் இங்குதான் கட்டப்பட்டது. பேராக் மாநிலத்தில் முதலாவது நவீன அருங்காட்சி நிலையமும் மேட்டு நிலையமும் இங்கு கட்டப்பட்டது. பெரும்பான்மையினர் மலாய் சமூகம் (62%).

**நீதிமொழிகள் 2:3-5** ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்.

**மந்திரவாத டாக்டர்**




இந்த நாட்டில் மந்திரவாத டாக்டர்கள் பொதுவாகிவிட்டனர். தங்கள் பிரச்சினைகளுக்கு அது பாரம்பரிய அணுகுமுறை, மருத்துவம் என எல்லா சமூகத்தினரும் நினைக்கின்றனர். நவீன மருத்துவரின் சிகிட்சை குணமாகவில்லையெனில் அல்லது கட்டணம் அதிகம் என்றால், மந்திரவாத டாக்டர்களிடம் செல்கின்றனர். மதங்களின் நம்பிக்கையும் இந்த மந்திரவாதத்தில் இணைக்கப்பட்டு அப்படி போவது ஒன்றும் மோசமில்லையென்றும் மூட நம்பிக்கையில்லையென்றும் கூறுகின்றனர். காணப்படாத, ஆவிக்குரிய விவகாரங்களை மந்திரவாதம் மூலம் தீர்க்கப்பார்க்கின்றனர். ஒரு பக்கம் அசுத்த ஆவிகளைத் துரத்தச்சொல்வதும் மறுபக்கத்தில் சாபங்களை எதிரிகளின் மீது அவிழ்த்து விடவும் நாடுகின்றனர். இவர்கள் சக்தி வாய்ந்தவர்களும் தாக்கம் கொண்டு வருபவர்களாகவும் இருக்கின்றனர்.



மந்திரவாத மருத்துவர்களை நியமிப்பது இலவசம் கிடையாது. எந்த வித கட்டணம் விதிக்க வேண்டுமென அவர் தீர்மானிப்பார். அநேக சமயம் பணமாகவும், மிருக ஜீவனாகவும், சிற்சில வேளைகளில் இவர்களின் காம இச்சைக்கு பெண்களாயிருந்தால் கட்டுப்படவேண்டும்.




**ஜெபக் குறிப்புகள்**

- மந்திரவாத மருத்துவர்களைவிட இயேசுவின் வல்லமை மகத்தானது என அயலார் அறிந்து கொள்ள தேவ ஒத்தாசைக்காக ஜெபியுங்கள்.
- போதுமான அளவு புரிந்துகொள்ளுதலும், கரிசனையும் விசுவாசமும், விசுவாசிகளுக்கு அருளும்படி தேவனிடம் மன்றாடுவோம். அயலாருக்கு உள்ள தேவைகளை ஜெப உதவியுடன் சந்திக்க விசுவாசிகள் முன்வர ஜெபியுங்கள்.
- இன்னும் அதிகமான அயலார் இயேசுவிடம் வரவும் அவரை அறிந்துகொள்ளவும் ஜெபியுங்கள்.
- பேராக் சுல்தானுக்காகவும், மந்திரி பெசாருக்காகவும் ஜெபியுங்கள்.


**செயல் திட்டம்**

உங்கள் குடும்பங்களை அயலக நண்பர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் அறிமுகம் செய்யுங்கள்.

## மண்டலம் 12. பேராக் - கோலக்கங்சார், கிந்தா & கம்பார் (தொடர்ச்சி..... அடுத்த பக்கம்)




## மண்டலம் 12. பேராக் - கோலக்கங்சார், கிந்தா & கம்பார் (முதல் பக்க தொடர்ச்சி)



# மண்டலம் 12. பேராக் - கோலாகங்சார், கிந்தா & கம்பார்




| கோலாகங்சார்: 156,295 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 58.8 |
| சீனர் | 22.3 |
| இந்தியர் | 13.5 |
| மற்றவர்கள் | 5.4 |

| கிந்தா: 744.715 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 40.4 |
| சீனர் | 43.8 |
| இந்தியர் | 14.4 |
| மற்றவர்கள் | 1.4 |

| கம்பார் : 97,167 சதவிதம் (%) | |
|---|---|
| மலாய் | 32.3 |
| சீனர் | 52.8 |
| இந்தியர் | 11 |
| மற்றவர்கள் | 3.9 |

**கோலகங்சார்** பேராக்கின் அரச தலைநகர் ஆகும். பிரிட்டிஷ்சின் முதல் காலடி இம்மண்ணில்தான் காணப்பட்டது. அரச சபைகளில் ரெசிடெண்ட்மார்களை நியமித்தனர். முதலாவது இரப்பர் விதை 1877ல் இங்குதான் நடப்பட்டது. ஆனால் இன்றோ மிக அமைதலான பட்டணமாகவும், மலாய் பாரம்பரியத்தில் வேரூன்றி நிற்கும் பட்டணமாக திகழ்கிறது. கோலகங்சாரில் உள்ள மலாய் கால்லூரி சுல்தான், பிரதமர், அமைச்சர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் பிள்ளைகள் படிக்கும் இடமாகவும் விவேக மலாய்க்காரர்களை உருவாக்கவும் தோற்றுவிக்கப்பட்டது. பெரும்பான்மையினர் மலாய் சமூகம் (58.8%).

**கிந்தா** பேராக்கிலேயே அதிக மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டம். ஈப்போ மாநகராட்சி இங்குதான் உள்ளது. 18ஆம் நூற்றாண்டுகளில் ஈயம் இங்கு உற்பத்தி செய்யப்பட்டது. பேராக்கின் தலைப்பட்டணமாகவும், மலேசியாவின் 3வது பெரிய நகரமாகவும் திகழ்கிறது. 19ஆம் நூற்றாண்டில் ஈய உற்பத்தியின் வழி சீன குடியேறிகளை பெருமளவு வளப்படுத்தியது. பெரும்பான்மை சீன சமூகம்-(43.8%), மலாய் சமூகம் (40.4%) மற்றும் இந்தியர்கள் (14.4%).

**கம்பார்** மாவட்டமும் பட்டணமுமாக சீனர்களை அதிகமாக கொண்டிருக்கிறது (52.8%), மலாய் சமூகம் (32.3%). 1887ல் ஈய சுரங்கம் இங்கு கண்டுபிடிக்கப்பட்டது. 20ஆம் நூற்றாண்டில் ஈய விலை உயர்ந்தபொழுது பிரபலமானது. 1980களில் ஈயலம்பங்கள் மூடப்பட்டபோது இந்த பட்டணமும் மடிந்துபோனது. எனினும், இங்கு புதிய ஒரு பல்கலைக்கழகம் (யுத்தார்) ஸ்தாபிக்கப்பட்டவுடன் மீண்டும் புத்துயிர் பெற்றுவிட்டது.

**1 கொரி 7:20,24** (அதின் செய்தி)
அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன். சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்.

**பாதுகாப்பற்ற பெண்**





20 வயது வரம்பிற்குள் உள்ள சாரா ஓர் இரக்கமுள்ள ஜாக்கிரதையுள்ள பெண். எனினும் தன் தோற்றத்தைக் குறித்து உறுதியற்ற நிலையில் காணப்படுகிறாள். அவளுக்கு ஆண் சிநேகிதர் கிடையாது ஆகவே தன்னைக்குறித்து தாழ்வு நிலை கொள்கிறாள். மேற்கத்திய நாகரீகம் போலவே முக அழகுதான் எல்லாமே எனும் ஓர் அபிப்பிராயம் கொண்டிருக்கிறாள். எல்லா ஆண்களும் பார்வைக்கு வசீகரமான பெண்களைத்தான் வெளியே அழைத்துச்செல்ல பிரியப்படுகிறார்கள் என அவள் கூறுகிறாள்.
சரீர அழகு முக்கியமல்ல ஆனால் கடவுளிடம் விசுவாசம் கொண்டிருப்பதே மேல் என அவளுடைய சமயம் போதிக்கிறது. ஆனால் தன் சமயத்தைச் சார்ந்த வாலிப ஆண்கள் விசுவாசமுள்ள பெண்களை அல்ல, வசீகரம் கொண்டுள்ளவர்களையே நாடுகிறார்கள் எனவும் சாரா காண்கிறாள்.
பல்வேறு சமய நம்பிக்கைகள் கொண்ட பெண்கள், இதே வித உறுதியற்ற மன போராட்டத்தை எதிர்கொள்கின்றனர். அவர்கள் அவ்வளவாய் அழகு இல்லையென்றும், அழகாய் தோற்றமளிக்க எடுக்கும் முயற்சிகள் குறித்து குற்றமுள்ளவர்களாகவும் காணப்பட்டு ஆண்களின் இரண்டு வித அபிப்பிராயங்களுக்கு பலிகடா ஆகிறதாய் நினைக்கின்றனர். வசனத்தின் சத்தியத்தை பகிர்ந்து கொள்ள எத்தனை அற்புதமான தருணம்! கிணற்றருகே உள்ள சமாரியப்பெண்ணை உதாரணமாக கொள்ளலாமே. உடைந்துபோன பெண்களின் இருதயங்களை நேர்த்திசெய்யவும் அவர்களுடையத் தேவைகளை சந்திக்கவும் நமது ஆண்டவராகிய இயேசுவினால் முடியும்.



**ஜெபக் குறிப்புகள்**

- சாராவைபோன்று உண்மையான அன்பக்காக ஏங்குகிற பெண்கள் கர்த்தரின் அன்பை உணர்ந்துக்கொள்ள ஜெபியுங்கள்.
- இயேசுவைக் கேள்விப்படும் அயலார்கள் சிலுவையின் சம்பவத்தின் தாக்கத்திலிருந்து விடுபட்டு போய்விடாதபடி ஜெபியுங்கள்.
- இரட்சகர் பக்கமாய் ஈர்க்கப்படும்படி தேவன் அவர்களுக்கு சொப்பனங்களையும் தரிசனங்களையும் அருள ஜெபியுங்கள்.
- அயலக விசுவாசிகள், சுவிசேஷத்தை, உத்தமமாய் தங்கள் குடும்பங்கள் மத்தியில் வாழ்ந்துகாட்டும்படிக்கான உற்சாகத்தையும், தங்கள் கிராமத்தில் தேவ வழிகாட்டுதலின்படி விதைகளை விதைக்கச்செய்யவும் தேவ அருளுக்காக ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உங்கள் அயலக நண்பர்களையும் உங்களது சுற்றுலா பயணங்களில் இணைத்துக்கொள்ளவும்.

# மண்டலம் 13. பேராக் - மஞ்சோங் & பேராக் தெங்கா

| மஞ்சோங்: 224,331 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 54.6 |
| சீனர் | 30 |
| இந்தியர் | 13.5 |
| மற்றவர்கள் | 1.9 |

| பேராக் தெங்கா: 97,530 | |
|---|---|
| மலாய் | 94.4 |
| சீனர் | 1.3 |
| இந்தியர் | 1.5 |
| மற்றவர்கள் | 2.8 |







**மஞ்சோங்** மாவட்டம் பிரசித்தி பெற்ற பங்கோர் தீவையும், மீன் கிராமம் மற்றும் தங்கு விடுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. பங்கோர் உடன்படிக்கை 1874 எனும் சரித்திரத்தையடக்கி ரெசிடெண்ட் முறையை ஸ்தாபித்தது முதல் மற்ற மலாய் மாநிலங்களுக்கு ஊடுருவ வகைசெய்தது. பண்டார் ஸ்ரீ மஞ்சோங் மாவட்டத்தின் நகர் மையம். மற்ற பட்டணங்கள் – லூமுட், சித்தியவான், ஆயர் தாவார், பந்தாய் ரெமிஸ் மற்றும் புருவாஸ். 1903ல் 2 போதகர்களால், சித்தியவானில் ஃபூச்சோவ் மரபுரிமை மற்றும் கிறிஸ்துவ ஃபூச்சோவ் குடியேற வகை செய்துள்ளது. பெரும்பான்மையினர் மலாய் சமூகம் (54.6%).

**பேராக் தெங்கா** மாவட்டம் பேராக் மாநிலத்தின் நடுமையத்தில் உள்ளது. இந்த மாவட்டத்தின் தலைப்பட்டணம் பாண்டார் ஸ்ரீ இஸ்காண்டார். பேராக் நதி இந்த மாவட்டத்தின் மத்தியில் பாய்ந்து ஓடுகிறது. பெரும்பான்மையினர் மலாய் சமூகம் (94.4%). பாசீர் சாலாக் சரித்திரப்பூர்வ சம்பவம் நடந்த இடத்தில் கட்டப்பட்ட கட்டிடம் இங்குதான் உள்ளது (ஜேம்ஸ் பெர்ச் என்பவர் பங்கோர் உடன்படிக்கைக்கு ஒரு வருடத்திற்குப்பிறகு 1875ல் குத்திக்கொல்லப்பட்டார்). இந்த எதிர்ப்புப்போராட்டம் தேசிய சுதந்தரம் உருவாகுவதற்கு வித்திட்டது. மேலும் காலனித்துவ ஆட்சி எதிர்ப்பும், மலாயா யூனியன் தோற்றுவித்து சுதந்திர ஜுவாலையை ஏற்படுத்தியது. இந்த நினைவு கட்டிடம், பாசீர் சாலாக்கில் நடந்த சம்பவத்தை இளைஞர்களுக்கு நினைவுறுத்தி வீரர்களின் போராட்டம் மற்றும் தியாகங்களை என்றும் தேசத்தின் மதிப்பீடுகளாய் இருக்க வகை செய்கிறது.

**எபிரெயர் 4:12**
தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.





## காசு தம்பதியினர்

7 வருடங்களாக ஜெபத்தில் காத்திருந்து தேவ இலக்கை நூதனமான விதத்தில் பெற்ற ஒரு தம்பதியினரின் அனுபவம் இது. சரியான திச மற்றும் ஊக்கத்திற்கென 100 பேர்களுக்கு மின்அஞ்சல் மூலம் ஜெப மன்றாட்டை அனுப்பியிருந்தனர். சில நாள்களுக்குப் பின்னர் தங்கள் வீட்டு வாசலில் பூ ஜாடிக்கடியில் ஒரு மலேசிய காசைக் கண்டெடுத்தனர். இது எந்த நாட்டு நாணயம் என்று அறியாமல், தேவன் பதிலளிக்கும் விதம் இதுவாகத்தான் இருக்குமோ என திகைத்தனர். 2 நாட்களுக்குப் பிறகு ஒரு விசேஷப் பேச்சாளர் அவர்களின் சபைக்கு வந்து, மலேசிய மண்ணில் தன்னுடைய ஊழியம் மற்றும் 70 வயதுகள் நிரம்பிய மற்றொரு தம்பதியரின் பணியினை தமது செய்தியில் பகிர்ந்து கொண்டார்.

விசுவாசத்தோடு இந்த தம்பதியினர் முன்வந்து, தகவல்களை பரிமாறியதுடன் ஒரு தரிசன பயணத்திற்கும், வேறு கலாச்சார அறிமுக பயிற்சியிலும் பங்காளித்துவ மேம்பாட்டுப்பயிற்சியிலும் ஈடுபட்டு முடித்தனர். அவர்களின் விசா கிடைத்தவுடன், தைரியமாய் மலேசிய மண்ணில் கால் பதித்தனர். தேவன் தெளிவான வழிகாட்டுதல் அருளும்பொழுது, ஏற்ற நேர்த்தியான மறுமொழி என்னவென்றால் "ஆம் ஆண்டவரே, வழிநடத்தும். நான் உலக இறுதி பரியந்தம் போவதானாலும் கீழ்ப்படிந்து செல்லுவேன்" என்பதாகும்.



## ஜெபக் குறிப்புகள்

- அயலார் மத்தியில் ஊழியம் செய்ய ஏதுவாக விசுவாசிகளை தரிசனத்துடனும், ஒப்புக் கொடுத்தலுடனும் முன்வர ஜெபியுங்கள்.
- சிறுபான்மை இன கிறிஸ்தவர்கள் வேத ஞானத்துடனும் தரிசனத்துடனும் அயலார் எவ்விதம் இயேசுவை பின்பற்ற முடியும் எனும் தெளிவை தங்கள் இனத்தில் இருந்துகொண்டே அவர்களுக்கு நற்செய்தி கொண்டு செல்லுவதற்குரிய வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு ஜெபியுங்கள்.
- இன்னும் அதிமான கிறிஸ்தவ குழுக்களை தேவன் எழுப்பும்படிக்கு ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
அயலார், நண்பர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருடன் ஒரு விடுமுறை பிரயாணத்தை ஏற்பாடு செய்.

# மண்டலம் 14. பேராக் - ஹிலிர் பேராக் & பத்தாங் பாடாங்




| பத்தாங் பாடாங்: 172,082 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 55.4 |
| சீனர் | 18.3 |
| இந்தியர் | 13.3 |
| மற்றவர்கள் | 13 |

| ஹிலீர் பேராக்: 198,479 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 52.4 |
| சீனர் | 28.3 |
| இந்தியர் | 18 |
| மற்றவர்கள் | 1.1 |

**ஹீலிர் பேராக்** - பேராக்கின் தென் பகுதி மாவட்டமாகும். தெலுக் இந்தான் அதின் மையப்பட்டணமாக விலங்குகிறது. மற்ற பட்டணங்கள் - லங்காப், ஊத்தான் மெலிந்தாங் மற்றும் பாகான் டத்தோ. எண்ணெய் பனைத்தோட்டங்கள் மற்றும் மீன் வளர்ப்பு (ஊத்தான் மெலிந்தாங்) இதன் முக்கிய பொருளாதார வளங்கள் ஆகும். 1885ல் கட்டப்பட்ட சாய்ந்த மணிக்கூண்டு கோபுரம் இதன் சிறப்பு. மலாய் சமூகத்தினர் பெரும்பான்மையினர் (52.4%). சீனர் (28.3% மற்றும் இந்தியர் (18%).

**பாதாங் பாடாங்** - பேராக்கின் தென் கிழக்குப்பகுதியாகும். தாப்பா அதின் மையப்பட்டணம். மற்ற சிறுபட்டணங்கள் - சுங்காய், சிலிம் ரிவர், தஞ்சோங் மாலிம். மலாய் சமூகத்தினர் பெரும்பான்மையினர் (55.4%). சீனர் (18.3% மற்றும் இந்தியர் (13.3%). பேராக்கின் பெரும்பான்மை மலாய்க்காரர் அல்லாத பூமி புத்ரா இன மக்கள் இங்குதான் வசிக்கிறார்கள் (22,000)

**1 கொரி 8:6**

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.





**ஆர்வம்**

சிலுவையில் தொங்குகிற இயேசுவின் சிலையை ஒவ்வொரு முறை கடந்து செல்லும்போது, டேவிட் மிகவும் ஆர்வமடைவான். அது ஏன், என்னவென அறிந்து கொள்வதற்கு ஆர்வப்பட்டு இணையத்தளத்தில் ஊடுருவித் தேடி அலசுவான். இயேசு தன் பாவத்திற்காக மரித்தார் என உணர்த்தப்பட்டவனானான். சுயமாகவே இயேசுவை தன் சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டான்.

3 மாதங்கள் கழிந்தபின் எந்தவொரு நண்பனின் விசுவாச பகிர்தல் இன்றி, தானாகவே ஒரு சபைக்குச்செல்ல தீர்மானித்தான். டேவிட் தன் பெற்றோரிடம் தன் புது விசுவாசத்தைக்குறித்துச் சொல்லவில்லை (ஒருநாள் சொல்லித்தான் ஆக வேண்டும்). இயேசுவுக்குள் அவனுடைய விசுவாசம் வளர்ந்தது. இப்பொழுதோ அவனையொத்த நண்பர்கள் ஆண்டவருக்குள் நடக்க அவன் ஊன்றுகோலாக இருக்கிறான்.



**ஜெபக் குறிப்புகள்**

- டேவிட்டைபோன்று நம் அண்டை அயலார் இயேசுவை பற்றி அறிந்துக்கொள்ள ஆர்வம் கொள்ள ஜெபியுங்கள்.
- அனுதினமும் சுவிசேஷத்தை அயலாரிடம் அறிவிப்போரின் ஊழியம் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.
- பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளி நற்செய்தியினை பகிரவும் நெருக்கி ஏவப்படவும் ஜெபியுங்கள்.
- ஊழியத்தில் அதிக பயன் பெறும்படி அயலார் மத்தியில் ஊழியம் செய்யும் அனைவரும் இணைந்து பணிபுரிய ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

உன் அயல நண்பர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரோடு ஓரிரண்டு விளையாட்டை ஏற்பாடு செய்.

# கிளந்தான்

கிளந்தான், 'மின்னல்களின் நிலம்' என்றழைகப்படும் இந்த மாநிலம் தீபகற்ப மலேசியாவின் கிழக்குக்கரையோரத்தில் மேல் பகுதியில் அமைந்துள்ளது. 15,024 சதுர கிலோ பரப்பளவும் 1.5 மில்லியன் ஜனத்தொகையைக் கொண்டதுமான ஒரு மாநிலம் பல்வேறு பொக்கிஷங்கள் நிறைந்த மீன்பிடி வளங்களும், நெல் பயிரிடப்படும் நிலங்களும் கடற்கரையோர வனப்பும் உள்ளடக்கியவை. 95% மலாய் சமூகத்தினர், பாரம்பரிய மலாய் கலாச்சாரங்களை பாதுகாத்து வருகின்றனர். எனவே இது மலாய் கலாச்சாரத்தின் ஆணிவேர் எனலாம்.

கிளந்தான் - வீட்டு மனை தொழிற்சாலைகளுக்கு பெயர்போனவை. அதில் சில - பாத்தேக் அச்சு, வெண்கலப்பாத்திரங்கள், மர சிற்பம் மற்றும் துணி நெய்தல் போன்றவை. கிளந்தான் மாநில நகரம் கோத்தா பாருவில் மலாய் கலாச்சார மையம் நிறுவப்பட்டிருக்கிறது. வாயாங் கூலிட், சீலாட் மற்றும் பம்பர விளையாட்டின் தளம்மாகவும் விளங்குகிறது.

கிளந்தான் மக்கள்தொகை 1507129 (2010). அதில் 95% மலாய்காரர்கள், சீனர் 3.4%, இந்தியர் 0.3%. இஸ்லாம் சமயம் 95.3%, கிறிஸ்தவம் 0.3% மாத்திரமே. மலாய்க்காரர் அல்லாத பூமிபுத்ரா மற்றும் சீன கிறிஸ்தவர்கள் இதில் அடங்குவர். 1500 சீன முஸ்லிம்களும், 500 இந்திய முஸ்லிம்களும் உள்ளனர். 1993 முதல் கிளந்தான் அரசாங்கம் ஹூடுட் சட்டத்தை அமலாக்கம் செய்ய முயலுகின்றனர்.

ஆயாம் பெர்ச்சிக், நாசி கெர்பாவ் மற்றும் நாசி டாகாங் உணவுகளுக்கு பிரசித்தி பெற்றது கிளந்தான்.

10 நிர்வாக மாவட்டங்கள் உண்டு. இவற்றை ஜெபத்திற்கென 5 மண்டலங்களாக பிரித்துள்ளோம்.

மண்டலம் 15: தும்பாட் & பாசீர் மாஸ்

மண்டலம் 16: பாச்சோக் & கோத்தா பாரு

மண்டலம் 17: பாசீர் பூத்தே & மாச்சாங்

மண்டலம் 18: தானா மேரா & ஜெல்லி

மண்டலம் 19: குவா மூசாங் & கோல கிராய்

**மக்கள் தொகை (2010)**

**மொத்தம்:** 1,507,129

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 95 |
| சீனர் | 3.4 |
| இந்தியர் | 0.3 |
| மற்றவர்கள் | 1.3 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 95.3 |
| புத்தம் | 3.7 |
| இந்து | 0.2 |
| கிறிஸ்துவம் | 0.3 |




கிளந்தான் கொடி

# கிளந்தான்



## மண்டலம் 15. கிளந்தான் - தும்பாட் & பாசீர் மாஸ்




| தும்பாட்: 152,168 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 92.3 |
| சீனர் | 4.3 |
| இந்தியர் | 0.1 |
| மற்றவர்கள் | 3.3 |

| பாசீர் மாஸ்: 185,741 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 97.5 |
| சீனர் | 2 |
| இந்தியர் | 0 |
| மற்றவர்கள் | 0.5 |

**தும்பாட்** மாவட்டம் தாய்லாந்து எல்லையை ஒட்டி இருக்கிறது. 15 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பெரிய பட்டணம். பெரும்பான்மையினர் மலாய்க்காரர் (92.3%), சீனர்கள் 4.3%. 3.3% மற்ற இன மக்கள் குறிப்பாக சியாம் மக்கள். இதன் முக்கிய விளைச்சல் விவசாயம். இன்று தும்பாட் சுற்றுப்பயணிகளை கவர்ந்திழுக்கும் புத்தர் கோவில் கட்டிடங்களைக் கொண்டிருக்கிறது குறிப்பாக வாட் போதிவிஹான் தென் கிழக்காசியாவிலேயே பெரிய புத்த சிலை இங்கு உண்டு. பந்தாய் ஸ்ரீ தூஜோ மலேசியாவின் நீண்ட லகூன். இங்குதான் அனைத்துலக பட்டம் விடும் விழா நடைபெறும்.

**பாசீர் மாஸ்** மாவட்டம் பெரிய மாவட்ட நகராகவும் தாய்லாந்துக்கு செல்லும் வாசலாகவும் திகழ்கிறது. ராந்தாவ் பண்ஜாங் தாய்லாந்திற்கு செல்லும் இன்னொரு எல்லையாக இருக்கிறது. பெரும்பான்மை சமூகம் மலாய்க்காரர் (97.5%) சீனர் 2%.

ஏசாயா 29:13 இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது

**போராடும் விதவையின் வாழ்க்கை**



சா என்பவள் 40 வயது கொண்ட விதவை. தன் 20 வயது மகனோடும் தன இளைய மகளோடும் வசித்து வருகிறாள். 3 வருடங்களுக்கு முன்பாக தன் கணவர் லா காசநோயினால் மரித்துப்போனான். சில நாட்கள் சக்கரை வியாதியாய் இருக்கிற தன் வயது கடந்த மாமியாரை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்வாள். சில சமயங்களில் தன் பேரப்பிள்ளையை பராமரித்துக்கொள்வாள். மகன் இரவு வியாபார ஸ்தலங்களில் பகுதி நேரமாக கைக்கடிகாரங்கள் விற்பனை செய்வான். கைச்செலவுக்கு சில வேளைகளில் திருமண பந்திகளில் காய்கறி வெட்டி கொடுப்பாள். இந்த வரவு வாடகை மற்றும் பில் கட்டணத்திற்கு உதவியாயிருக்கும்.






**ஜெபக் குறிப்புகள்**

- தங்கள் சொந்தங்களை இழந்த அயலகத்தாருக்கும் குடும்ப செலவுகளை ஈடு கட்ட முடியாத மக்களுக்கும் ஆறுதலாக அவர்களைச் சந்தித்து உதவும்படி விசுவாசிகளுக்காக ஜெபியுங்கள்.
- அயலகத்தார் தேவனை அறிந்து கொள்ளும்படி அவர்களுக்கு அவர் தன் அன்பையும் வெளிச்சத்தையும் வெளிப்படுத்த ஜெபியுங்கள்.
- அயலகத்தார் சீக்கிரமாய் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள். ஏனெனில் மரணம் இயேசுவோடு வாழும் தருணத்தை இழக்க நேரிடும்.
- கிளந்தான் சுல்தானுக்காகவும் மந்திரி பெசாருக்காகவும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

அயலகத்தாரின் ஒரு ஜெப வீட்டை சந்திக்கவும்

# மண்டலம் 16. கிளந்தான் – பாச்சோக் & கோத்தா பாரு




| பாச்சோக்: 132,308 சதவீதம் (%) | |
| --- | --- |
| மலாய் | 98.6 |
| சீனர் | 1 |
| இந்தியர் | 0 |
| மற்றவர்கள் | 0.4 |

| கோத்தா பாரு: 482,222 சதவீதம் (%) | |
| --- | --- |
| மலாய் | 94 |
| சீனர் | 5 |
| இந்தியர் | 0.4 |
| மற்றவர்கள் | 0.6 |

**பாச்சோக்** மாவட்டம் கோத்தா பாரு மாவட்டத்தின் கிழக்கே இருக்கிறது. பாச்சோக் பட்டணம் மாவட்டத்தின் நிர்வாகம், வாணிபம் மற்றும் போக்குவரத்து மையமுமாக இருக்கிறது. மலாய் மக்கள் பெரும்பான்மை (98.6%). சீனர் 1%. முக்கிய வருமானத்தொழில் விவசாயமும் மீன் பிடிப்பும். 2010ல் பாச்சோக் இஸ்லாமிய சுற்றுப்பயணிகள் மையம் என பெயர் சூட்டப்பட்டது (பாண்டார் பெலான்சோங்கான் இஸ்லாம்). சாலை அருகாமையிலேயே உள்ள மற்ற பட்டணங்கள் பெருப்போக் மற்றும் ஜெலாநாட் ஆகும். பந்தாய் இராமா புகழ்வாய்ந்த இசை இராக தளமாக அநேகரால் விஜயம் செய்யப்படும். தென் சீனக்கடலின் பக்கமாய் அமைந்துள்ள கடற்கரை மிகவும் அழகானது என சொல்லப்படுகிறது.

**கோத்தா பாரு** மாவட்டம் கிளந்தானின் வட கிழக்கில் உள்ள மாநிலத்தின் தலைமை பட்டணம். பெரும்பான்மை சமூகம் மலாய்க்காரர் (94%), சீனர் 5%. அதிகமான சீனர் மற்றும் இந்தியர் இங்கு வசிக்கின்றனர். இஸ்லாமிய பாரம்பரியத்தைக்கொண்ட இம்மாவட்டத்தில் அதற்கேற்றார்போல நிறைய அருங்காட்சி நிலையங்கள் ஆதாரமாக உள்ளன. வாயாங் கூலிட், சீலாட், பம்பர ஆட்டங்கள் அதிகமாகவே காட்டப்படும். சமய அனுசரிப்புகள் – குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் தொழுகை நேரத்தின் போது அனைத்தும் ஸ்தம்பித்து நிற்கும். பந்தாய் டாசார் சாபாக் என்பது சரித்திர தளம். 8 டிசம்பர் 1941ல் 2ஆம் உலகப்போரின் போது, ஜப்பானிய கடற்படை இங்குதான் தரையிறங்கினர்.

**அப் 16:31,34** அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டுபோய், அவர்களுக்குப் போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.





அனித்தா ஓர் இறை பக்தி நிறைந்த குடும்பத்தில் பிறந்தவள். அவளுடைய சமய புத்தகத்தை 5 வயது முதல் மனனமாய் படித்து பல தடவை வாசித்து முடித்தவள். ஆனாலும் அவளால் அதனை விளங்கிக்கொள்ள முடியவில்லை காரணம் அது அந்நிய மொழியில் எழுதப்பட்டது. மிகவும் ஆர்வமுள்ளவளாய் இருந்து பல தடவை மனனப்போட்டியில் பங்கு பெற்றிருக்கிறாள். அவள் சமயத்தின் தீர்க்கதரிசியின் கடைசி வெளிப்பாடு எனும் கூற்றின்படி, எல்லா மனிதருக்கும்தான் அந்த சமயம் என அவள் நம்பிக்கொண்டிருந்தாள். மேலும் அவளுடைய சமயம்தான் பரலோகத்திற்கு ஒரே வழி எனவும், நற்கிரியைகள் பரலோகத்திற்குச்செல்லும் நுழைவுச்சீட்டு எனவும் நம்பியிருந்தாள். அதுவும் அவளுடைய கடவுள் அனுமதித்தால் மாத்திரமே. இயேசு அவளுடைய வாழ்க்கையில் வந்து பரலோகத்திற்கு அவர் மாத்திரமே ஒரே வழி என்று வெளிப்படுத்தும் வரையில் தான் செய்வதுதான் சரியான காரியம் என்று எண்ணியிருந்தாள்.




## ஜெபக் குறிப்புகள்

- பரலோகத்திற்கு வழிதேடும் அயலகத்தாருக்கு இயேசு தம்மைத்தாமே வெளிப்படுத்த ஜெபியுங்கள்.
- பாச்சோக்கிலும் கோத்தபாருவிலும் பணிபுரியும் ஊழியர்கள் விடா முயற்சியோடு பிரயாசம் எடுக்க ஜெபியுங்கள்.
- அயலாருக்கு மத்தியில் ஊழியம் செய்யும் பணியாளர்களுக்கு ஞானமும் விவேகமும் அருளப்பட ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

அயலக சக நண்பர்களோடு ஒரு காரோக்கே நிகழ்வை ஏற்பாடு செய்யவும்.

# மண்டலம் 17. கிளந்தான் - பாசீர் பூத்தே & மாச்சாங்





| பாசீர் பூத்தே : 116,494 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 98.4 |
| சீனர் | 0.7 |
| இந்தியர் | 0 |
| மற்றவர்கள் | 0.9 |

| மாச்சாங்: 92,149 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 96.5 |
| சீனர் | 2.8 |
| இந்தியர் | 0.5 |
| மற்றவர்கள் | 0.2 |

**பாசீர் பூத்தே** மாவட்டம் கிளந்தானின் கிழக்குப்பகுதியில் உள்ளது. செமராக் ஆற்றின் கரையோரப்பகுதியில்தான் அது அமைந்துள்ளது. பங்காளான் லிம்புஙான் எனும் மற்றொரு பெயரும் இதற்கு உண்டு. பாசீர் பூத்தேயில் பிரிசித்திப்பெற்ற கடற்கரை பந்தாய் பிசிக்கான் பாயு (மெல்ல வீசும் தென்றல் கடற்கரை) மற்றும் பந்தாய் தோக் பாலி போன்றவை. ஜெராம் எனும் இடத்தில் தோக் ஜாங்குட் எனும் போர்வீரர் பிரிட்டிஷாரின் செல்வாக்கை எதிர்த்த ஸ்தலமாக விளங்குகிறது. இந்த சம்பவத்தை நினைவுகூற பாசீர் பூத்தே தலைப்பட்டணத்தில் தோக் ஜாங்குட்டிற்கு ஒரு நினைவுச்சின்னம் நிறுவப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தின் 82% நிலப்பகுதி விவசாய நோக்கத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையினர் மலாய்க்காரர் – 98.4%.

**மாச்சாங்** மாவட்டம் கிளந்தானின் மையப்பகுதியில் உள்ளது. இதன் முக்கிய பட்டணமும் நிர்வாக மையமும் பாண்டார் மாச்சாங்கில்தான் அமையப்பெற்றுள்ளது. செனிக் அவாங் கெச்சிக் என்பவர் தலைமையில் கோத்தா பாருவின் பாசீர் தும்போஹ் எனும் கிராமத்தில் உள்ள சில கிராம மக்களால் 1880களில் ஸ்தாபிக்கப்பட்டது. மாச்சாங் கிளையின் மாரா தொழிற்நுட்ப பல்கலைக்கழகம் மாச்சாங்கில் அமையப்பட்டுள்ளது. பெரும்பான்மையினர் மலாய்க்காரர் – 96.5%. இது இன்னமும் பெரும்பாலும் நெல் வயல்கள், செம்பனை மற்றும் ரப்பர் தோட்டங்களுக்கு பெயர் போனது.

*ஏசாயா* **54:5-6** உன் சிருஷ்டிகரே உன் நாயகர்: சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்,... கைவிடப்பட்டு மனம்நொந்தவளான ஸ்திரியைப்போலவும், இளம் பிரயாத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லகிறார்.



ஜோஷ் கோலாலம்பூருக்கு தெற்கே உள்ள ஒரு சிறு கிராமத்தில் வளர்ந்த ஒரு வாலிபன். தந்தையை அறியாத அவனை அவன் தாயார் வளர்த்தார். அவன் கல்லூரியில் சில நண்பர்களின் மூலமாக இயேசுவை அறிந்து கொண்டபோதிலும் பிறகு அவரைப்பற்றி அறிய அதிக ஆவல் கொள்ளவில்லை. ஆனால் கொஞ்ச நாட்களுக்கு பிறகு, இணையத்தளத்தின் மூலம் இயேசுவைப்பற்றி அறிந்துக் கொண்டான். திரு.யாப்பின் தொலைபேசி எண்ணை ஒருவர் கொடுக்க, அவன் திரு.யாப்பை தொடர்பு கொண்டான். திரு.யாப்பும் சிரமம் பாராமல் ஜோஷை சந்தித்து இயேசுவை பற்றி மேலும் சொல்லியபோது அன்றையதினம் ஜோஷ் இயேசுவிடம் தன் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தான். இன்று இயேசுவைப்போல மாறுவதற்கு ஜோஷ் வேதத்தை கற்று வருகிறான்.






## ஜெபக் குறிப்புகள்

- திரு. யாப்பை போன்று மற்றவர்களை சந்தித்து இயேசுவைப்பற்றி சுவிசேஷம் சொல்லுவோர் எழும்ப ஜெபியுங்கள்.
- கிளந்தானில் இன்னும் அதிகமான சிறுகுழுக்களை அமைத்து புதிய விசுவாசிகளை சீஷத்துவத்தில் வழிநடத்த வேலையாட்களுக்காக ஜெபியுங்கள்.
- விசுவாசிகளிடமிருந்து இயேசுவைக்குறித்து கேட்டு அறிந்து கொண்டதை அயலார் நினைவுகூற ஜெபியுங்கள்.

## செயல் திட்டம்

உங்கள் அயலகத்தாரின் ருக்குன் தெத்தாங்கா நிகழ்வில் பங்கு கொள்ளுங்கள்.

## மண்டலம் 18. கிளந்தான் – தானா மேரா & ஜெல்லி




| தானா மேரா: 117,338 | |
|---|---|
| மலாய் | 95.4 |
| சீனர் | 3.6 |
| இந்தியர் | 0.4 |
| மற்றவர்கள் | 0.6 |

| ஜெல்லி : 39,445 | |
|---|---|
| மலாய் | 97.7 |
| சீனர் | 0.2 |
| இந்தியர் | 0.1 |
| மற்றவர்கள் | 2 |

கிளந்தானின் மத்தியப்பகுதியிலும் தாய்லாந்து மேற்காகவும் **தானா மேரா** அமைந்துள்ளது. தானா மேரா பட்டணம், இம்மாவட்டத்தின் கிழக்குப்பகுதியிலும் கிளந்தான் ஆற்றோரக் கரையை ஒட்டியும் அமைந்துள்ளது. இந்த ஆற்றின் பயனால்தான் விவசாயத்திற்கு வேண்டிய அளவு தண்ணீர் விநியோகம் கிடைக்கப்பெறுகிறது. பெரும்பான்மையினர் மலாய்க்காரர்கள் (95.4%), சீனர்கள் 3.6%. ஒரு வேளை, ச்சி-து (சிவப்பு மண்) எனும் இராஜ்ஜியத்தின் தானா மேரா தலைப்பட்டணமாகவும் சூய் பரம்பரையினால் விவரிக்கப்படும் மலாய்-இந்து இராஜ்ஜிய பின்னணியைக்கொண்டிருக்கலாம் எனவும் வரலாற்று வல்லுணர்கள் கருதுகின்றனர். ஆறாம் நூற்றாண்டில் கௌதம அரசர் இந்த பழைய சாம்ராஜ்யத்தை கண்டுபிடித்து, அந்த நாட்களில் முக்கிய வணிக மையமாக அமைத்திருக்கலாமெனவும், இந்து கலாச்சாரத்துடன் சீனாவுடனும் வலுவான உறவையும் கொண்டிருந்திருக்கலாம் எனவும் கணக்கிடப்படுகிறது.

**ஜெல்லி** மாவட்டம் கிளந்தானின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ளது. ஜெல்லி பட்டணத்தைச்சுற்று கிரிக்கிலிருந்து வரும் கிழக்கு மேற்கு நெடுஞ்சாலையோடு (சாலை 4) ஒட்டியுள்ளது. தானா மேரா மற்றும் கோலக்கிராய் மாவட்டங்களின் பகுதியாக செயல்பட்டு வந்த இது 1986ல் ஒரு முழு மாவட்டமாக உயர்வு பெற்றது. ரப்பர் உற்பத்தியும் மற்றும் இதர பயிர் தோட்டங்களும் இதன் பெரும்பாலான பொருளாதார நடவடிக்கை. பெரும்பான்மையினர் மலாய்க்காரர்கள் (97.7%).

**சங்கீதம் 72:12-14**
கூப்பிடுகிற எளியவனையும்....பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி....அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்.





அபி தன் தகப்பனுக்கு மிகவும் நெருக்கமானவள். அவன் தகப்பன் வேறொரு பெண்ணோடு தொடர்பு கொண்டு குடும்பத்தை விட்டு பிரிந்தார். அந்த பிரிவை ஏற்றுக்கொள்ளமுடியாமல் தன் தகப்பன் இல்லாமல் வாழுவது கடினம் என்பதை அறிந்து அல்லாஹ்விடம் வேண்டுதல் செய்தாள். அல்லாஹ் தன் தகப்பனை மறுமடியும் தன் குடும்பத்தோடு கொண்டு வந்து விடுவான் என் நினைத்தாள். அவள் பிரார்த்தனை கேட்கப்படவில்லை. ஆதலால் வெறுப்படைந்தாள், நம்பிக்கையற்றவளாகினாள். உலகத்திடமும் ஆண்களிடமும் அன்பைத்தேடினாள். வாலிப பருவத்தில் செய்யக்கூடாதவற்றைச் முரட்டாட்டமாய்ச் செய்தாள். ஒருநாள் தன் தோழி இயேசுவைப்பற்றி அவளிடம் பகிர்ந்து கொண்டதை நிராகரித்தாள். சில காலம் சென்றபின் மிகுந்த மன அழுத்தத்தில் விழுந்து தன் வாழ்க்கையை முடித்துக்கொள்ள திட்டமிட்டாள். அந்த வேளையில்தான் அவளுடைய இருதயம் இயேசுவிடம் வேண்டுதல் செய்ய அசைக்கப்பட்டது. அதன்பின்னர் பல கிறிஸ்தவர்களை அவளின் வாழ்க்கையில் தேவன் இடைபட வைத்தார். அதில் ஒருத்தி யோவான் 1ஆம் அதிகாரத்திலிருந்து எடுத்து தேவனுடைய அன்பை விவரித்தாள். அவள் தேவனால் தொடப்பட்டு தனக்கு மிகவும் தேவைப்பட்ட பிதாவின் அன்பை அனுபவித்தாள்.




**ஜெபக் குறிப்புகள்**

- தேவன் தம்மை தகப்பனாக அபிக்கு வெளிப்படுத்தியதுபோல மற்றவர்களுக்கும் தம் அன்பை வெளிப்படுத்த ஜெபியுங்கள்.
- தானா மேரா மற்றும் ஜெல்லியின் கிறிஸ்தவர்கள் ஜெபிக்கவும், அயலாரிடம் சாட்சி பகரவும் ஜெபியுங்கள்.
- விசுவாசிகள் இல்லாத இந்த மாவட்டஙளில் ஜெப நடை செய்ய கிறிஸ்தவர்கள் புறப்பட ஜெபியுங்கள்.
- இன்னும் அதிகமான குழுக்கள் வரவும் கனிதரும்படியாக நற்செய்தியை பகிரவும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

அயலகத்தார் சமூக நிகழ்வகளில் பங்கு கொள்ளுதல்

# மண்டலம் 19. கிளந்தான் - குவா மூசாங் & கோலக்கிராய்




| குவா மூசாங் : 84,908 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 79.2 |
| சீனர் | 4.8 |
| இந்தியர் | 0.4 |
| மற்றவர்கள் | 15.6 |

| கோலாக்கிராய்: 104,356 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 95 |
| சீனர் | 4 |
| இந்தியர் | 0.9 |
| மற்றவர்கள் | 0.1 |

கிளந்தானின் 10 நிர்வாக மாவட்டங்களில் **குவா மூசாங்** மாவட்டம் மிகப்பெரிது. கிளந்தானின் பாதி பகுதியை இது கொண்டிருக்கிறது. எனினும் மாநிலத்தில் குறைவான மக்கள்தொகையில் இரண்டாவது இடம் கொண்டிருக்கிறது. வெறும் 84,908 மக்கள்தொகை மாத்திரமே, அதில் பெரும்பான்மையினர் மலாய்க்காரர்கள் (79.2%). மலாய்க்காரர் அல்லாத பூமிபுத்ராக்களை அதிகம் கொண்ட மாவட்டம். அதாவது 15% மக்கள் தொகை. தெங்கு ரசாலி ஹம்சா பல வருடங்களாக அதின் நாடாளுமன்ற உறுப்பினர். இயற்கை எழிலும் கவர்ந்திழுக்கக்கூடிய இயற்கை அடிப்படையிலான வனப்பும் இங்கு காணப்படுகிறது.

**கோலக்கிராய்** கிளந்தானின் நடுவில் உள்ள மாவட்டம். அது மலைகள் நிரம்பிய மாவட்டம். மாநிலத்தின் உயர்ந்த மலைகள் இங்குதான் உண்டு. குனோங் ஆயாம் (1504 மீ), குனோங் பஹார(1395 மீ) மற்றும் குனோங் ஸ்டோங் (1422மீ) ஆகும். குனோங் ஸ்டோங்கில்தான் 305 மீட்டர் உயரம் நீர்வீழ்ச்சி உண்டு. இந்த நீர்வீழ்ச்சி தென்கிழக்காசியாவிலேயே ஆக உயரம் என நம்பப்படுகிறது. இந்த மலைகள் கம்போங் டாபோங் எனும் கிராமத்தில் உள்ளன. சில குகைகளும் சுற்றுலாத்தளங்களாக குவா கெலியோ, குவா கிரீஸ், குவா பாகார், குவா ஈக்கான் ஆகியவை உண்டு.

**மத்தேயு 15:19-20** இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைப்பாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். கைக்கழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்.





**திரைப்படம்**

பிரையன் ஒரு மாணவன். ஒரு சிறு குழுவினர், இயேசு திரைப்படத்தை மலாய் மொழியில் மொழிபெயர்க்க உதவி செய்துகொண்டிருந்த குழுவில், பிரையன் இடம்பெற்றிருந்தான். திரைப்படத்தின் இறுதியில் இயேசுவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. செய்யவேண்டியதெல்லாம் எல்லா மணவர்களும் அந்த ஜெபத்தை பின்பற்றி சொல்ல வேண்டும். ஜெபத்தை பின்பற்றும் பொழுது, அக்குழுவில் இருந்த சின்டி என்பவள் பிரையனின் உதடுகள் அசைவதை கவனித்தாள். திரைப்படம் முடிந்த பின்னர், அவள் அவனிடம், ஜெபத்தை பின்பற்றினாயா என வினவிய பொழுது அவன் ஆம் என பதி அளித்தான். அந்தநாள் முதல் பிரையன் தன் வாழ்க்கையை பின்னோக்கிப் பார்க்கவேயில்லை. சில ஆண்டுகள் கழித்து, பிரையனின் அப்பா இவன் இயேசுவைப் பின்பற்றுகிறவனாகச் சந்தேகித்தார். பிற்பாடு அவன் தகப்பனிடம், ஆண்டவரைப்பற்றி பகிர்ந்து கொள்ள அவனுக்கு ஒரு சிலாக்கியம் கிட்டியது.



**ஜெபக் குறிப்புகள்**

- பிரையனைபோல நிறைய பேர் இயேசுவை திரைப்படத்தின் மூலமாக அறிய ஜெபியுங்கள்
- டிசம்பர் 2014ன் வெள்ளப்பேரிடருக்கு உதவிகள் நல்கிய திருச்சபைகளுக்கும் அதின் பின்னர் அயலாரிடம் தொடரும் உறவுகளுக்கும் ஜெபியுங்கள்.
- தொடர்ந்து வெள்ளப்பேரிடரில் பாதிக்கப்பட்டோரிடன் பணிபுரிவோர் தொடர்புகளை ஞானத்துடன் கொண்டிருக்க ஜெபியுங்கள்.
- 24 மணிநேர ஜெபக்கோபுரத்தை வியூகத்துடன் மலேசியாவின் ஒவ்வொரு பட்டணங்களிலும் இந்த மாவட்டங்களிலும் நிறுவ ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

உங்கள் அயலான் நண்பர்களுக்காக உபவாசித்து ஜெபி.

# திரங்காணு

திரங்காணு மாநிலம் மிகவும் அழகிய இயற்கை மண்வளத்தோடு 12,955 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. எழில்மிக்க கடற்கரை, அழகிய தீவுகள், காட்டு வளம், மீன் பிடி கிராமங்கள், கொட்டும் நீர்வீழ்ச்சி இன்னும் எவ்வளவோ. வெண்மை நிற மணலும், தெளிவான கடல் நீரும் 225 கிலோமீட்டர் தூரம் நீண்டிருக்கிறது. மிகவும் பிரபலமான சுற்றுப்பயணிகளின் செல்லுமிடங்கள் பூலாவ் ரெடாங் மற்றும் பூலாவ் பெர்ஹெந்தியான் தீவுகளாகும்.

கோலத்திரங்காணு - மாநிலத்தின் தலைப்பட்டணமாகவும் மற்றும் திரங்காணு மாநிலத்தை அறிந்து கொள்ள சிறப்பான ஸ்தலமாக இருக்கிறது. ஒரு போர்ட்வால்க், சில நெறிமிக்க கடற்கரைகள், உயர்ந்த கட்டிடங்களுக்கிடையில் ஒளிந்து கிடக்கும் சில குக்கிராமங்கள், கிழக்குப்பகுதியின் மிகவும் எழில்மிக்கவற்றில் சில சீனா டவுன்கள், பெட்ரோல் எரிவாய் செழிப்பும் வானுயர வளர்ந்து நிற்கும் கட்டிடங்களும் அடங்கும்.

திரங்காணுவின் மக்கள் தொகை 1,017,210 (2010ல்) அதாவது 97% மலாய்க்காரர்கள். சீனர்கள் 2.6% இந்தியர்கள் 0.2% மாத்திரமே. இஸ்லாம் மிகப் பெரும்பான்மையான மதம் (97%). சீனர் மற்றும் இந்தியர்கள் சேர்ந்த கிறிஸ்தவர்களின் ஜனத்தொகை 0.2%. 370 சீன இஸ்லாமியர்களும் 450 இந்திய முஸ்லிம்களும் வாழுகின்றனர்.

திரங்காணு மாநிலம் உணவுகளுக்கு பெயர் போனவை: நாசி டாகாங், லக்ஸாம், கெரொப்போக் லெக்கோர் & சத்தா. திரங்க்காணுவில் 7 நிர்வாக மாவட்டங்கள் உண்டு. இந்த சிறுநூல் நிமித்தம் 5 ஜெப மண்டலங்களாக பிரித்துள்ளோம்.

மண்டலம் 20 : பெசுட் & செத்தியு

மண்டலம் 21 : கோலத்திரங்காணு

மண்டலம் 22 : உலுத் திரங்காணு

மண்டலம் 23 : மாராங்


மண்டலம் 24 : டுங்குன் & கெமாமான்

**மக்கள் தொகை (2010)**

**மொத்தம்:** 1,017,210

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 96.8 |
| சீனர் | 2.6 |
| இந்தியர் | 0.2 |
| மற்றவர்கள் | 0.4 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 97 |
| புத்தம் | 2.4 |
| இந்து | 0.2 |
| கிறிஸ்துவம் | 0.2 |




திரங்காணு கொடி

# திரங்காணு



# மண்டலம் 20. திரங்காணு - பெசுட் & சேத்யு




| பெசுட்: 138,876 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 98.3 |
| சீனர் | 1.3 |
| இந்தியர் | 0.1 |
| மற்றவர்கள் | 0.3 |


| சேத்யு: 54,405 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 99.6 |
| சீனர் | 0.2 |
| இந்தியர் | 0.1 |
| மற்றவர்கள் | 0.1 |

**பெசுட்** மாகாணம் திரங்காணுவின் வட பகுதியில் அமைந்துள்ளது. கம்போங் ராஜா பெசுட் மாகாணத்தின் மையப்பகுதியாக அமைந்துள்ளது. குவாலா பெசுட் மற்றும் ஜெர்த்தே திரங்காணுவின் முக்கிய நகரங்களாக காணப்படுகிறது. இவர்களுடைய மொழி கிளந்தான் மலாய் மொழியாகும். இங்கு மலாய்க்காரர்களின் தொகை 98.3% ஆகும். பெர்ஹெந்தியான் தீவானது, பெர்ஹெந்தியான் பெசார், பெர்ஹெந்தியான் கெசில் மற்றும் சுசு டாரா போன்ற தீவுகளை உள்ளடக்கியது. இவைகள் சுற்றுப் பயணிகள் அதிகமாகவே வந்து போகும் முக்கிமான இடமுமின்றி இது உலகிலே மிகச் சிறந்த தீவுகளில் ஒன்றாகும். இந்த தீவு வெப்பமண்டல திட்டுகள் (கடல் பாசி), ஆழ்கடல் நீச்சல், பாய்மரக்கப்பல், ஸ்நோர்கெலிங் போன்ற காரியங்களுக்கு பெயர் பெற்றவையாகும். புந்தாய் ஆயேர் தாவார், பந்தாய் டோன்டோங் மற்றும் பந்தாய் புகிட் கெலுவாங் பெயர் பெற்ற கடல்களில் இதுவும் அடங்கும்.

**சேத்யு** மாவட்டம் பெசுட் மற்றும் கோல திரங்காணுக்கிடையில் அமைந்துள்ள ஓர் மாகாணமாகும். இதனுடைய முக்கிய நகரம் பண்டார் பெர்மாய்சூரி ஆகும். இங்கு மலாய்க்காரர்களின் எண்ணிக்கை 99.6% ஆகும். ரேடாங் தீவு 7 விதமான தீவுகளை உள்ளடக்கிய மிக சிறந்த தீவாகக் கருதப்படுகிறது.

**யோவான் 17: 20-21**
நான் இவர்களுக்காக வேண்டிகொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும், அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

**தெய்வீக சந்திப்பு**





பெனி என்பவர் பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றவர். ஆனால் இவருக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. எங்கள் குழுவிலிருந்து ஒருவர் அவரை பார்த்து, இயேசுவின் நாமத்தில் ஜெபித்தால் நிச்சயம் உனக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லி அவ்விடத்தை விட்டு கடந்து சொன்றோம். சில மாதங்கள் கழிந்து மறுபடியும் அவரை சந்தித்த போது, அவர் அதிக உற்சாகத்தோடு சொன்னார் இப்பொழுது நான் வேலை செய்துக்கொண்டிருக்கிறேன். இதில் முக்கியமான காரியம் என்னவென்றால், இவர் இப்பொழுது இயேசுவைக் குறித்து அறிய இன்னும் ஆர்வமுள்ளவராகவே இருந்தார். பிற்பாடு நாங்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து கூறினோம். அந்த இரவிலேயே அவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவுக்குள் புதிய விசுவாசியாக வாழ்ந்து வருகிறார்.




**ஜெபக் குறிப்புகள்**

- அதிகமான ஜெபவீரர்கள் இந்த மாநிலத்திற்காக ஜெபிக்கவும், இத்தேசத்தில் பிரவேசிக்கவும் ஜெபிப்போம்.
- முதிர்ச்சியடைந்த விசுவாசிகள் ஒன்றிணைந்து நம்முடைய நண்பர்களை வழிநடத்த ஜெபிப்போம்.
- கிராமத்தில் உள்ள ஒரு தம்பதியை தேவன் பாதுகாக்கவும் அவர்களை பயன்படுத்தவும் ஜெபிப்போம்.
- இந்த மாநிலத்தை ஆளுகின்ற சுல்தான் மற்றும் முதல் அமைச்சருக்காக ஜெபிப்போம்.

## செயல் திட்டம்

பண்டிகை காலங்களில் இவர்களோடு இசைந்து உணவை உட்கொள்ளலாம்.

## மண்டலம் 21. திரங்காணு - கோலாத்திரங்காணு




| மொத்தம்: 338,836<br>சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 96 |
| சீனர் | 3.5 |
| இந்தியர் | 0.3 |
| மற்றவர்கள் | 0.2 |

**கோலத்திரங்காணு,** திரங்காணுவின் தலைநகரமாகும். திரங்காணுவின் சுல்தான் இங்குதான் வாசம்பண்ணுகிறார். இந்த பட்டணம் தென் சீன கடல் எதிர்புறமாக அமைந்துள்ளது. கோலத்திரங்காணு சிறிய மாவட்டமாக இருந்தாலும் அதிகமான மக்கள் இங்கே வாழ்கின்றார்கள் அதிலும் மலாய்க்காரர்களின் எண்ணிக்கை 96% ஆகும். இதே மாவட்டத்தில் இந்தியர்களும் சீனவர்களும் கூட வசிக்கின்றனர். 2008ம் ஆண்டில் கோலத் திரங்காணு “**கடலோர பாரம்பரிய பட்டணம்**” என்று பிரகடனம் செய்யப்பட்டது. ஒரு காலக்கட்டத்தில் மீனவர் கிராமமாக இருந்த இந்த பகுதி, இப்பொழுது தென் சீனக் கடலின் எண்ணை வருவாயால் வசதி நிறைந்த நகரமாக மாறியுள்ளது. இந்நாள் வரையிலும் மலாய்க்காரர்களின் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் பாதுகாத்து வருகிறார்கள். பாரம்பரிய உடைகள், உணவு பொருட்களை இங்கே காணலாம் மற்றும் போருக்கு முன்பதாகக் கட்டப்பட்ட பழைய சரித்திர கட்டங்களை இங்கே காணலாம். இவைகள் சுற்றுலா பயணிகளைக் கவரக்கூடிய இடமாகவும் திகழ்கின்றது.

700 ஆண்டுகளுக்கு முன்பதாக செதுக்கப்பட்ட பாத்து பெர்சுறாட் கல்லை இங்கே காணலாம். இக்கல் நிமித்தமாக இஸ்லாம் அதிகாரபூர்வமான மதமாக இந்த மாநிலத்தில் பிரகடனம் செய்யப்பட்டதுமின்றி இதில் காணப்பட்ட எழுத்துக்கள் தென்கிழக்கு ஆசியா மலாய் இஸ்லாமியர்களின் முதன்மை எழுத்தாக ஆதராமாகக் கொள்ளப்பட்டது.

**எபிரெயர் 9:22**
நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்ததினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.

**கனவுகள்**





கரோலின் இரண்டு கனவுகள் கண்டாள். முதல் கனவில், அவள் கப்பல் துறைமுகப்பக்கமாய் நின்று கொண்டிருந்தாள். அங்கே ஒரு மனிதன் அங்கேயிருந்த ஜனங்களை கடலில் குதிக்கச் சொன்னான். ஆனால் அனைவருமே முடியாது என்று சொன்னார்கள். பிற்பாடு கரோலினிடம் வரும் போது அவள் சொன்னால் எனக்கு நீச்சல் தெரியாது. அதற்கு அந்த மனிதன் "பயப்படாதே" என்றபின் இருவரும் நீரில் குதித்தனர் ஆனால் அவர்களை நீரில் மூழ்காமல் மிதந்து கொண்டிருந்தார்கள். ஆப்பொது பிரகாசமான ஒளியைக் கண்டாள். திடீரென பார்க்கும் போது அவள் மறுபடியும் கப்பற்துறைமுகப்பக்கமாய் வந்து நின்றாள் ஆனால் அந்த மனிதனைக் காணவில்லை.

அவளுடைய இரண்டாம் கனவில், ஒரு மனிதரை காணும்படியாக அநேகர் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். சூயூவினால் அவரை கண்டுப்பிடிக்க முடியவில்லை. அங்கேயிருந்த ஒரு மனிதன் அவளுடைய காதில் "அவர் இயேசு" என்று கூறினான். திடிரென்று அவளும் இயேசுவை கண்டாள்.

இவ்விரண்டு கனவிற்குப் பிற்பாடு, நிஜத்தில் அவளுக்கு ஒரு பொட்டலம் அனுப்பி வைக்கப்பட்டது. அந்தப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்க்கும் போது அவள் ஒரு வேதாகமத்தை கண்டாள். அந்த வேதாகமத்தின் மேல் எழுதப்பட்ட வார்த்தையாவது யோவான் 14:6 ஆகும். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். பிற்பாடு இயேசுவை குறித்து இணைய தளங்களில் தேட ஆரம்பித்தாள். பாவ அறிக்கை செய்து இயேசுவை தன் சொந்த இரட்சகராக தன் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டாள்.
"தேவன் தம்முடைய மக்களை பின் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறார்".




**ஜெபக் குறிப்புகள்**

- கனவில் இயேசுவை தரிசனம் கண்டு அவரை விசுவாசிக்க ஜெபிப்போம்.
- கோலத்திரங்காணு மதச்சார்பற்ற கலாச்சாரத்தைவிட்டு, உண்மையான சத்தியத்திற்குள் வர ஜெபிப்போம்.
- இங்குள்ள மக்கள் இயேசுவை குறித்தான கைபிரதிகளை வாசிக்க ஜெபிப்போம்.
- இயேசுவை சந்தித்தவர்கள் தொடர்ந்து அவரை தேடவும் அறிந்துக்கொள்ளவும் ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**

பெருநாள் காலங்களில் உங்கள் அயலார்களுக்கு பரிசுகள் வாங்கி கொடுக்கலாம்.

## மண்டலம் 22. திரங்காணு - உளு திரங்காணு




| மொத்தம்: 69,933 | |
|---|---|
| சதவீதம் (%) | |
| மலாய் | 99 |
| சீனர் | 0.4 |
| இந்தியர் | 0.1 |
| மற்றவர்கள் | 0.5 |

திரங்காணுவிலே இந்த **உளு திரங்காணு** மிகப் பெரிய மாவட்டமாகும். இம்மாநிலத்தில் மிகப்பெரிய நீர்பிடிப்பு இங்குதான் உள்ளது. தாசேக் கெஞ்சிர் இங்குதான் உள்ளது. தென்கிழக்கு ஆசியாவிலே மனிதனால் செய்யப்பட்ட மிகப் பெரிய ஏரி இதுதான். இதனுடைய விரிவாக்கம் 260 சதுர கிலோ மீட்டர் ஆகும். இங்கு 350 சிறிய தீவுகள் உள்ளன மற்றும் 14க்கு மேற்பட்ட அழகிய நீர்வீழ்ச்சிகளும், நீரோட்டங்களும், ஆறுகள் மற்றும் நீர் அணை சுற்றிலும் உள்ள காடுகள், மலை ஏறுவதற்கும் நடப்பதற்கும் முக்கிய இடமாக வகிக்கிறது. 99 சதவிதம் மலாய்க்காரர்கள் மட்டுமே இங்கே வசிக்கின்றனர்.

**1 சாமுவேல் 16:7**

கர்த்தர் சாமுவேலை நோக்கி : நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம். நான் இவனைப் புறக்கணித்தேன். மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்.

**கேள்வியினால் விசுவாசம் வளரும்**

டேரன் கிறிஸ்துவை அறிந்தவன் ஆனால் அவன் மனைவி (இங்கிரி) கிறிஸ்துவை அறியாதவள். ஆனால் அவள் தன் கணவரோடு சேர்ந்து எல்லா ஜெபக்கூட்டங்களில் உற்சாகமாக கலந்துக்கொள்வாள். அக்கூட்டங்களில் கிறிஸ்துவ பாடல்கள், பிரசங்கங்கள் செய்யப்படும். ஒரு நாள் “நான் இயேசுவை நேசிக்கிறேன்” என்ற பாடலை பாடிய பிற்பாடு, ஏன் அனைவருக்கும் இந்த பாடல் பிடித்திருக்கின்றது என்று கேட்டவுடனே, காரணம் இயேசு என் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என்று இங்கிரி உடனடியாக பதிலளித்தாள். நாங்கள் யாவரும் அதிர்ச்சிக்குள்ளானோம். சில நாட்களுக்குப் பிற்பாடு அவளை சந்திக்க வீட்டிற்கு சென்று, அவள் கூறின பதிலை குறித்து கேட்டறிந்தோம். நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டீர்களா என கேட்டோம்? அதற்கு அவள் தெரியவில்லை, ஆனால் உங்களுடைய ஜெபக்கூட்டங்களில் இயேசுவை குறித்து அதிகமாய் கேட்டிருக்கிறேன். ஒரு நாள் நிச்சயமாக அவரை ஏற்றுக்கொள்வேன்.








**ஜெபக் குறிப்புகள்**

- விசுவாசியின் மனைவிமார்களுக்கு ஜெபியுங்கள். இங்கிரி போல கிறிஸ்துவை விசுவாசிக்க ஜெபி
- உளு திரங்கானுவில் உள்ள நண்பர்கள் தைரியமாகவும் திடநம்பிக்கையோடும் உண்மையான சத்தியத்தை நாடி வர ஜெபிப்போம்.
- வானத்தின் ராஜியத்தை பின்பற்றின முன்னோர்கள் கிறிஸ்துவிடம் கிட்டிச் சேர ஜெபிப்போம்.
- திரங்காணுவில் உள்ள நண்பர்கள் தெய்வீக சந்திப்பு பெற ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**

இவ்வாரத்தில் உன் நண்பனிடம் கிறிஸ்துவை குறித்து பகிர்ந்துக்கொள்.

# மண்டலம் 23. திரங்காணு - மாராங்




| மொத்தம் : 96,384<br>சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 97.7 |
| சீனர் | 2 |
| இந்தியர் | 0.2 |
| மற்றவர்கள் | 0.1 |

**மாராங்**, திரங்காணுவில் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. காப்பாஸ் தீவுக்கு செல்வதற்கு, மாராங் பட்டணம் முக்கியமான படகுத்துறைமுகமாக அமைந்துள்ளது, மற்றும் இது முக்கியமான மீன்வள மையமாக காணப்படுகிறது. காப்பாஸ் தீவு ஓர் அழகிய சிறிய தீவு. இங்கு வெள்ளை நிற மணல் கடற்கரைகள், உள் நீச்சல் போன்றவைகளுக்கு பேர்பெற்றவையாகும். இதனுடைய துணைமாவட்டம் ருசிலா, கேரங்கா தீவு மற்றும் மெர்ச்சாங் ஆகும். ஜெருங் பட்டணம் மலைபாங்கான ஓர் இடமாகத் திகழ்கின்றது. மாராங் மாவட்டத்தில் மக்களின் தொகை 96,384 (2010 மக்கள் தொகை கணக்கெடுப்பு) ஆகும். பெரும்பான்மையாக 97.7% மலாய்க்காரர்களும், சிறுபான்மை மக்களாக சீனர்கள் 2% இருக்கிறார்கள். இவர்கள் திரங்காணு மலாய் மொழியை பேசுவார்கள்.

**பிரசங்கி 5:7**
அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பதுபோல, அநேக வார்த்தைகளும் வியர்த்தமாயிருக்கும், ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு.

## நான்காம் விசுவாசம்





நான் இரண்டு கொள்கையுடைய (புத்தர் மற்றும் சீக்கிய) குடும்பத்தை சேர்ந்தவன். ஆனால் என்னுடைய பெற்றோர்கள் இரண்டு கொள்கையுமே பின்பற்றாதவர்கள். ஜனவரி 2000-ல் நான் திருமணம் செய்து கொண்டேன். ஆனால் நான் திருமணம் செய்து கொண்ட என் மனைவி அயலார் என்பதால் அவளுடைய மதத்தை அறிவேன். ஓர் அயலானாகிய நான் என்னென்ன வழிபாடுகள் செய்ய வேண்டும் என்பதை நன்கு அறிந்திருக்கிறேன் (பிராத்தனை, உபவாசம் மற்றும் பல). ஆனால் இந்த மதத்தை என்னால் புரிந்துக்கொள்ளவே முடியவில்லை. என்னால் சமாதானமாகவே வாழ முடியவில்லை. ஏறக்குறைய எங்களுடைய திருமண வாழ்க்கையே முறிக்கப்படுகிற சூழ்நிலையில் காணப்பட்டது.

ஒரு சகோதரியின் மூலமாக ஒரு கிறிஸ்தவரின் ஆலோசனை பெற்றேன். அங்குதான் உண்மையான அன்பையும் இரக்கத்தையும் சமாதானத்தையும் உணரவும் அனுபவிக்கவும் ஆரம்பித்தேன். இயேசுவை குறித்து அதிகமாக எனக்கு தெரியாது. ஆனால் தெரிந்துக்கொள்ள வாஞ்சையாய் இருந்தேன். வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தேன். என் வாழ்க்கை முற்றிலுமாக மாறினது. விசுவாசத்தில் வளர ஆரம்பித்தேன். தேவன் அற்புதங்களையும் அதிசயங்களையும் என் வாழ்க்கையிலும் குடும்பத்திலும் செய்தார். 2006-ல் என் மனைவி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாள். என்னுடைய பெற்றோர்களும் இரண்டு வருடத்திற்கு முன்பதாக ஞானஸ்தானம் பெற்று சபைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். தேவன் எங்களுக்கு நான்கு பிள்ளைகளை கொடுத்திருக்கிறார். நாங்கள் குடும்பமாக ஊழியம் செய்துக் கொண்டிருக்கிறோம்.





## ஜெபக் குறிப்புகள்

- திருமண காரியங்களில் சூழப்பட்டிருக்கிற சட்டத்திட்டங்கள் மாற்றப்பட்டு அவர்கள் கிறிஸ்துவை பின்பற்ற ஜெபிப்போம்.
- வாழ்க்கை துணையை தேர்ந்தேடுப்பவர்கள் ஒரு நல்ல விசுவாசியாக தெரிந்தெடுக்க ஜெபிப்போம்.
- திரங்காணுவை சுற்றி வரும் குழுவிற்காக ஜெபிப்போம். தேவனுடைய உன்னதமான சந்திப்பு காணப்பட ஜெபிப்போம்.
- அநேகர் தேவனுடைய அன்பையும் விசுவாசிகளின் அன்பையும் அனுபவிக்கவும், வேதாகமத்தை வாசித்து மாற்றமடைய ஜெபிப்போம்.

## செயல் திட்டம்

கிறிஸ்மஸ் காலங்களில் நம்முடைய அயலார்களை அழைத்து விருந்து உபசரிக்கலாம்.

## மண்டலம் 24. திரங்காணு - டுங்குன் & கெமாமான்




| டுங்குன்: 152,342 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 97.2 |
| சீனர் | 2.3 |
| இந்தியர் | 0.2 |
| மற்றவர்கள் | 0.3 |

| கெமாமான்: 166,434 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 94.8 |
| சீனர் | 4.2 |
| இந்தியர் | 0.4 |
| மற்றவர்கள் | 0.6 |




**டுங்குன்** வட்டாரம், திரங்காணுவின் மத்திய தெற்கு பகுதியில் அமைந்துள்ளது. இது கிழக்கு கடற்கரையான தென் சீனக் கடல் புறமாக அமைந்துள்ளது. 1940-ல் இது இரும்பு-சுரங்க நகரமாக காணப்பட்டது. இந்த இரும்பு சுரங்கம் புக்கிட் பெசியில் அமைந்துள்ளது. பழமையான சில இரும்பு ரயில் சுரங்க பாதைகளை இன்றும் இங்கே காணலாம். 1970-ல் இப்பகுதி மூடப்பட்டது. டுங்குனின் முக்கியமான பொருளாதார வளர்ச்சிக்கு காரணம் பெட்ரோலியம் துறையே ஆகும். இங்குள்ள மக்களின் தொகை 97.2% மலாய்க்காரர்கள், 2.3% சீனர்கள் ஆவார்கள்.

**கெமாமான்** திரங்காணுவின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இவ்வட்டாரத்தின் தலைமையகம் சுக்காய் (அல்லது கெமாமான் நகரமாகும்). இதில் கேமாசிக், கேர்தே, கிஜால், பண்டார் ஸ்ரீ பந்டி மற்றும் பண்டார் ச்சேனே பாரு முக்கிய நகராங்களில் அடங்கும். மற்ற கடற்கரைகளை பார்க்கிலும் கேமாஷக் கடற்கரை மிகச் சிறந்த கடற்கரையாகும். இவ்விடம் மாநிலத்தின் எண்ணெய் உற்பத்திக்கு அடிப்படையக இருக்கிறது. கேர்த்தேயில், மா டயோரா என்னும் கடற்கரை ஓரத்தில் ஆமைகளின் சரணாலயத்தை காணலாம். இங்கு பெரும்பான்மையினர் 94.8% மலாய்க்காரர்களும், 4.2% சீனர்கள் வாழ்கின்றனர்.

**தீத்து 3:7**
அவர்கள் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்த பரிசுத்தாவியை நம்மேல் சம்பூர்ணமாய் பொழிந்தருளினார்.

## சுகமடைதல்



டோரிஸின் மகன் சில நாட்களாகவே உடல் சுகம் இல்லாமல் காணப்பட்டான். மருந்தை கொடுப்பதைவிட மற்ற எதனையும் மருத்துவர்களால் செய்ய முடியவில்லை. அவருடைய அண்டை வீட்டுக்காரர் அவனுக்கு இயேசுவின் நாமத்தை சொல்லி ஜெபம் செய்தார். அதற்கு பிறகு அவன் முழுமையாக சுகத்தை பெற்றுக்கொண்டான். சில நாட்களுக்குப் பிறகு டோரிஸ் தன்னுடைய உறவினரை சந்திக்க சென்றிருந்தார். அந்த உறவினரும் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் காணப்படுகிற சவால்களையும், வியாதிகளையும் குறித்து பேசிக்கொண்டிருக்கும் போது, அவருடைய உறவினர் டோரிஸைப் பார்த்து நீ மருத்துவரின் உதவியை நாடத் தேவையில்லை. அதற்கு மாறாக இயேசு கிறிஸ்துவின் உதவியை நாடு என்றார்கள். அப்பொழுதுதான் டோரிஸ், தன்னுடைய மகன் வியாதியாய் கிடக்கும் போது அவளுடைய அண்டை வீட்டுக்காரர் அவனுக்கு ஜெபத்தை நினைவுக் கூர்ந்தார். அந்நாளிலே அவளுடைய உறவினர் அவளை கர்த்தருக்குள் வழிநடத்தினார்கள்.





### ஜெபக் குறிப்புகள்

- சுற்றுலா ஸ்தலத்திற்கு வருகிற விசுவாசிகள், இங்குள்ள மக்களை கர்த்தருக்குள் வழி நடத்தவும், அவர்களோடு நல்ல நட்பை வளர்த்துக் கொண்டு அவர்களுடைய கஷ்டமான சூழ்நிலையிலிருந்து உதவி செய்ய ஞானத்திற்காகவும், தேவ வழிநடத்துதலுக்காகவும் ஜெபிப்போம்.
- விசுவாசிகள், கிறிஸ்துவின் அன்பை நம்முடைய அண்டை சகோதரிகளுக்கு வெளிப்படுத்த ஜெபிப்போம்.
- டுங்குன் மற்றும் கெமாமான் பகுதிகளில் வசிக்கின்ற சகோதர சகோதரிகள் மத்தியில் தேவன் வேலையாட்களை அனுப்ப ஜெபிப்போம்.

### செயல் திட்டம்

உன்னுடைய அல்லது உன்னுடைய பிள்ளைகளின் பிறந்த நாளுக்கு உன் அயலாரை அழைக்கலாம்.

## பஹாங்

தீபகற்ப மலேசியாவின் பெரிய மாகாணமான பஹாங் 35,965 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டது 'தாமான் நெகரா' என்றழைக்கப்படும் தேசிய பூங்காவும் என்டாவ் ரொம்பின் பூங்காவும் இம்மாகாணத்தில்தான் உள்ளன. 'தாசிக் பெரா', 'தாசிக் சினி' என்ற இயற்கை ஏரிகளும் இங்குதான் உள்ளன.

பஹாங் மாகாணத்தை கிழக்கு, மேற்கு என்று அதின் நடுவே அமைந்திருக்கும் மலைத்தொடர் பிரிக்கிறது. அங்குதான் மலேசியாவின் உயர்ந்த மலையுச்சியான 'குனோங் தஹான்' உச்சியும் உள்ளது. மலேசியாவின் தேயிலை, காய்கறிகள், பூக்கள் இங்குள்ள கேமரன் மலையில் குளிர்ச்சியான சூழலில் முளைகிறது. ஓய்வெடுக்க 'கெந்திங் மலை' ஆரோக்கியமான குளிர் காற்றுக்கு அமைதியான சூழலுக்கு 'பிரேசர் மலை' இம்மாகாணத்தில் தான் உள்ளன.

பஹாங்கின் தலைநகரமான குவாந்தானுக்கருகில் உலகப் பிரசித்திப் பெற்ற செராத்திங் கடற்கறை 'தெலுக் செம்படாக் கடற்கறை', பாலோக் கடற்கறை மற்றும் பெசாரா கடற்கறையும் உள்ளன. ஆசியாவின் முதல் 'கிளப் மெட்' செராதிங் கடற்கறையில் அமைந்துள்ளது.

பஹாங் மாகாணத்தின் மொத்த ஜனத் தொகை 1,426,209 (2010). இதில் 73.8% மலாய்க்காரர்கள் 16% சீனர்கள் 44% இந்தியர்கள். 75% இஸ்லாம் பிரதான மதமாக உள்ளது கிறிஸ்தவர்கள் 1.8% மட்டுமே. கிறிஸ்தவர்களில் மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர்களும் சீனர்களும் இந்தியர்களும் அடங்குவர். இதை தவிர்த்து 1000 சீன முஸ்லீம்களும் 2200 இந்திய முஸ்லீம்களும் இம்மாகாணத்தில் உள்ளனர். மற்றொரு சுவையான அம்சம் என்னவெனில் இங்கு சுமார் 73000 மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர்களும் வசிக்கிறார்கள். அவர்களில் 53% எந்த மதத்திலும் இல்லை. 12% முஸ்லீம்கள் 12% கிறிஸ்தவர்கள். பெரும்பாலோர் லிப்பீஸ், பெக்கான், ரொம்பின் வட்டாரங்களில் வசிக்கின்றனர்.

மீ சாபோங், ஒப் போர் பஹாங், நாசி பிரியோக் கெரா போன்ற உள்ளூர் உணவுகளுக்கும் பஹாங் பேர் போனது பஹாங்கில் 11 நிர்வாக வட்டாரங்கள் உள்ளன. இந்த 11 வட்டாரங்களும் 4 ஜெப மண்டலங்களாக பிரிக்கப்படுகிறது.

மண்டலம் 25 : கேமரன் மலை, லிப்பீஸ், ஜெரண்டுட்

மண்டலம் 26 : ரவுப், தெமர்லோ, பெந்தோங்

மண்டலம் 27 : குவந்தான், மாரான்

மண்டலம் 28 : பெக்கான், பெரா, ரொம்பின்



பஹாங் கொடி

**மக்கள் தொகை (2010)**

**மொத்தம்:** 1,426,209

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 73.8 |
| சீனர் | 16 |
| இந்தியர் | 4.4 |
| மற்றவர்கள் | 5.8 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 75 |
| புத்தம் | 14.8 |
| இந்து | 4 |
| கிறிஸ்துவம் | 1.8 |

## பஹாங்



# மண்டலம் 25. பஹாங்- கேமரன் மலை, லிப்பிஸ் & ஜெரண்டுட்




| ஜெரண்டுட்: 86,840 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 82 |
| மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர் | 3 |
| சீனர் | 12 |
| இந்தியர் | 3 |
| மற்றவர்கள் | 0 |

| கேமரன் மலை: 33,278 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 22 |
| மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர் | 17 |
| சீனர் | 39 |
| இந்தியர் | 21 |
| மற்றவர்கள் | 1 |

பஹாங்கின் வட மேற்கு பகுதியில் மலேசியாவின் பிரபலமான **"கேமரன் மலை"** அமைந்துள்ளது. இப்பகுதியை நிர்மாணித்த பிரிட்டிஷ் நில அளவையாளரான சர் வில்லியம் கேமரன் நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. மலேசியா, சிங்கப்பூருக்கான காய்கறிகள் இந்த இடத்திலிருந்து கிடைக்கப்பெறுவதால் இந்த இடம் பச்சைக் கிண்ணமாக கருதப்படுகிறது. இந்த இடத்தில் தேயிலைத் தோட்டங்களும் உள்ளன. இதன் இன்னொரு முக்கிய பகுதி தானா ராத்தாவாகும். இங்கு கூடுதலாக சீனர்கள் 39% மலாய்க்காரர்கள் 22% இந்தியர்கள் 21% மாக வசிக்கின்றனர். மேலும் 17% மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர்களான ஆதி குடியினரும் இங்குள்ளனர்.

**லிப்பிஸ்** வட்டாரம் பஹாங் மாநிலத்தின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ளது. இவ்வட்டாரத்தின் தலைநகரம் கோலா லிப்பிஸ். இது ஒரு தங்கச் சுரங்க இடமாகும். பெக்கானுக்கு மாற்றாக தலைநகரமாக கோலா லிப்பிசை பிரிட்டிஷார் 1898ல் ஏற்படுத்தினார்கள். பிற்பாடு 1995ல் குவந்தான் தலைநகரமாக இருந்து வந்துள்ளது. ஜனத்தொகையில் பெரும்பாலோர் மலாய்க்காரர்கள் (72.6%), மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர்கள் 15%.

| லிப்பிஸ்: 85,341 சதவீதம்(%) | |
|---|---|
| மலாய் | 72.6 |
| மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர் | 15 |
| சீனர் | 9 |
| இந்தியர் | 3.3 |
| மற்றவர்கள் | 0.1 |

**ஜெரண்டுட்** பஹாங் மாநிலத்திலேயே மிகப்பெரிய வட்டாரமாக வடக்கில் அமைந்துள்ளது. தாமான் நெகாரா எனப்படும் தேசிய பூங்காவுக்கு இதுவே முக்கியமான நுழைவாயிலாகும். மிக உயர்ந்த மலையான குனோங் தகான் மலையும் இங்குதான் உள்ளது. ஜனத்தொகை 82% மலாய்க்காரர்கள்.

**மத்தேயு 19:14**

இயேசுவோ: சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் என்றார்.

**துதிகீதம்**





ஒரு விசுவாசியான கேல்லி தன் வேலையிடத்தில் மிகவும் துக்கமாய் காணப்பட்டாள். அவளுடன் வேலை செய்யும் ஒருவன் அவளுக்கு ஆறுதல் சொல்லி உற்சாகம் ஊட்ட நினைத்தான். தன்னை மதம் மாற்ற இவ்விதம் செய்கிறான் என்று கேல்லிக்கு அவன் மீது சந்தேகம் வந்தது. அவர்கள் தொடர்ச்சியாய் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது, கேல்லி, திருசபையில் தான் பியானோ வாசிப்பதாக கூறினாள். அவள் அப்படி சொல்லியபோது, அந்த நபர் ஒரு பாடலை பாட முன்வந்தான். 'என் ஆண்டவரை சிலுவையில் அறையும்போது நீ அங்கிருந்தாயா?' என்ற பாடலை அவன் பாடியபோது கேல்லி ஆச்சரியப்பட்டாள். அது மாத்திரமல்ல அவன் அவளுக்காக ஜெபம் செய்யவும் முன்வந்தான். ஜெபிப்பதற்கு முன்பு தானும் கேல்லியும் ஒரே தேவனை ஆராதிப்பதை அவன் சுட்டிக்காட்டினான். கேல்லிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இச்சம்பவத்தை தன் பாஸ்டரிடம் கேல்லி சொன்னபோது "ஒரு உண்மைக் கிறிஸ்தவனே அப்படிப்பட்ட பாடலை பாட முடியும்" என்று சொன்னார். மேலும், தேவன் இந்த தேசத்தில் செய்து வருகிற இக்காரியத்திற்காக அவரை துதித்து மட்டுமன்றி, தானும் தன் சபையும் பிற இனத்தவர்களைக் குறித்து கொண்டிருந்த தவறான அபிப்பிராயத்திற்காக கண்ணீருடன் பாவ மன்னிப்பு கேட்டார்.




**ஜெபக் குறிப்புகள்**

- கிறிஸ்துவின் மேலுள்ள தங்களின் நம்பிக்கை குறித்து கேமரன் மலை விசுவாசிகள் தைரியத்தோடு அறிக்கை செய்ய ஜெபியுங்கள்.
- தங்கள் விசுவாசத்தினிமித்தம் துன்பங்கள் அனுபவிக்கிற ஜெரண்டுட் விசுவாசிகள் மனந்தளராமல் இருக்கவும் மகிழ்ச்சியுடன் இருக்கவும் ஜெபியுங்கள்.
- லிப்பிஸ் வட்டாரத்தில் விசுவாசிகளின் உபத்திரவத்தில் தேவன் மகிமைப்படவும் சுவிசேஷம் எல்லாருக்கும் சொல்லப்படவும் ஜெபியுங்கள்.
- பஹாங் மாகாண சுல்தானுக்காகவும் மந்திரி பெசாருக்காகவும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

உங்கள் விசேஷ தினங்களில் உங்கள் அண்டை வீட்டாரை, நண்பரை அழைத்து உபசரியுங்கள்.

# மண்டலம் 26. பஹாங்- ரவுப், தேமர்லோ & பெந்தோங்




| ரவுப்: 92,162<br>சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 58.5 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 4.8 |
| சீனர் | 30 |
| இந்தியர் | 6.4 |
| மற்றவர்கள் | 0.3 |

| தேமர்லோ: 157,562<br>சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 71.3 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 4.4 |
| சீனர் | 16 |
| இந்தியர் | 8 |
| மற்றவர்கள் | 0.3 |

18ம் நூற்றாண்டில் உருவான **ரவுப்** பட்டணம் பஹாங் மாகாணத்தின் மிக பழைய பட்டணமாகும். பிரேசர் மலை இங்குதான் உள்ளது. **தேமர்லோ** பட்டணம் இரண்டாவது பெரிய பட்டணமாகும். சுமார் 1200 காட்டு யானைகளின் சரணாலயமாக இப்பட்டணம் திகழ்கிறது மற்றும் காட்டு யானைகள் இங்கு பாதுகாக்கப்படுகிறது.

**பெந்தோங்** பட்டணம் சிலாங்கூர் பஹாங் எல்லையில் அமைந்துள்ளது. கெந்திங் மலை (2000மீ) இங்குதான் உள்ளது. உலகின் மிகப்பெரிய சூதாட்ட மையங்களில் ஒரு சூதாட்ட இடம் கெந்திங் மலையில் அமைந்துள்ளது. இது சட்ட பூர்வமான கசினோவாகும்.

| பெந்தோங் : 113,011<br>சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 54.2 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 3 |
| சீனர் | 33.4 |
| இந்தியர் | 9 |
| மற்றவர்கள் | 0.4 |

**மத்தேயு 7:7**
‘கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும்.



## ஜாமாவின் வெறுமை நிலை

40 வயது நிரம்பிய ஜாமா என்ற இந்தோனேசிய மாது 7 வருடங்களுக்கு முன்பு மலேசியாவுக்கு வந்தாள். ஒரு நாள் ஜாமா தான் வேலை செய்யும் இடத்தில் தன் மொழியை பேசுகின்ற மதுரா என்ற ஒரு பெண்ணைச் சந்தித்தாள். அந்தப் பெண்ணோடு நல்ல பழக்கமான போது ஜாமா தன்னுடைய விபச்சார பாவ வாழ்க்கையை அப்பெண்ணோடு பகிர்ந்து கொண்டாள். அப்படி வாழ்வது பாவமென்றும், அதை விட்டு விலக வேண்டும் என்றும் ஜாமாவுக்கு அப்பெண் சொன்னதோடு, அப்பாவம் இயேசுவால் மன்னிக்கப்பட வேண்டும் என்றும், சமாதானத்தோடு வாழ இயேசுவிடம் வரவேண்டும் என்றும் சொன்னாள். ஒரு சிலர் தொடர் சந்திப்புக்குப் பின், ஜாமா இயேசுவை ஏற்றுக்கொண்டாள். சில நாட்களுக்குப் பிறகு இப்பெண் இந்தோனேசியாவிலுள்ள ஜாமாவின் வீட்டுக்குச் சென்று ஜாமாவின் பிள்ளைகளையும் சந்தித்தாள். சில மாதங்களுக்குப் பிறகு ஜாமா இந்தோனேசியாவுக்கு சென்றுவிட்டாள். செல்வம் தேடி மலேசிய வந்த ஜாமா அதைவிட மேலான செல்வத்தோடு (இயேசு) வீடு திரும்பினாள்.






**ஜெபக் குறிப்புகள்**

- இங்குள்ள அந்நிய தொழிலாளர்களோடு கிறிஸ்துவ விசுவாசிகள் நட்பை வளர்த்துக் கொண்டு அவர்களுக்கு இயேசுவைக் குறித்து சுவிசேஷம் அறிவிக்க ஜெபியுங்கள்.
- தெமர்லோ வட்டார விசுவாசிகள் தங்கள் சமுகத்தில் தைரியத்தோடு விசுவாசத்தை பகிர்ந்து கொள்ள ஜெபியுங்கள்.
- ரவுப் வட்டார விசுவாசிகளின் குடும்பங்கள் இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்திட ஜெபியுங்கள்.
- பெந்தோங் விசுவாசிகள் அவர்களின் வட்டாரத்தில் ஜெப நடைபோட ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உங்கள் சாட்சிகளை சமூக ஊடகங்களில் பகிர்ந்துக் கொள்ளுங்கள்.

## மண்டலம் 27. பஹாங் - குவந்தான் மற்றும் மாரான்




| குவாந்தான் : 445,695 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 78 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 1 |
| சீனர் | 17.4 |
| இந்தியர் | 3.2 |
| மற்றவர்கள் | 0.4 |

பஹாங் மாகாணத்தின் தலைநகரமாக **குவந்தான்** நகரம் இருக்கிறது. முன்பு குவாலா லிபிஸ் தலைநகரமாக இருந்தபோது, 1995ம் ஆண்டில் பிரிடிஷ்காரர்கள் குவந்தான் நகரத்தை பஹாங்கின் தலைநகரமாக மாற்றினர். குவாந்தான் இப்போது முக்கிய தொலைதொடர்பு மையமாகவும் அதிக ஜனத்தொகை கொண்ட பட்டணமாகவும் திகழ்கிறது. செராத்திங், பாலோக், பெசாரா, தெலுக் செம்படாக் போன்ற கடற்கரைகள் இங்குதான் உள்ளன. இங்கிருந்து 25கி.மீட்டர் தூரத்தில் குவா சாராஸ் என்ற இடத்தில் புத்த கோவில் உள்ளது. இங்கு 30 அடி நீளமுள்ள தூங்கும் புத்த சிலை உள்ளது.

| மாரன்: 111,192 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 94.3 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 1.4 |
| சீனர் | 3 |
| இந்தியர் | 1 |
| மற்றவர்கள் | 0.3 |

**மாரான்** பட்டணம் பஹாங்கின் நடு மத்தியத்தில் உள்ளது. பெக்கான் மாவட்டத்தில் இருந்த மாரான் 1981ல் மாரான் மாவட்டமாக உருமாறியது.

**நீதிமொழிகள் 8:17**
"என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன். அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்".



**ஒரு நடை**

அதிகாலையில் பூங்காவில் நடப்பது சாதாரண மக்களுக்கு வழக்கமான காரியம். பல இன மக்கள் அங்கே நடப்பதை நாம் காணலாம். பல பாஷைகளால் (மலாய, சீனம், இந்திய, ஆங்கில) அங்கே ஒருவருக்கொருவர் வாழ்த்திக் கொள்வதை கேட்கலாம். இந்தக் கூட்டத்தில் ஒரு மேற்கத்திய மாதும் இருந்தாள். அவளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உறையாடுவார். தான் கற்று வருகிற புதிய பாஷையை பேசி பழக்கபடுத்துவதற்கு அது ஒரு அருமையான சந்தர்ப்பம்.

ஒரு நாள் அவளுடைய புதிய சிநேகிதி எம்மா கேள்வி ஒன்றைக் கேட்டாள். "உன்னுடைய மதம் என்ன?" அதற்கு அம்மாது "நான் இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறேன். அவரே என் பொக்கிஷம். கார் அல்ல, வீடல்ல, உலக ஆஸ்தியல்ல. இதெல்லாம் மதிப்பற்றது" என்றாள். முதல் சந்திப்பிலேயே மற்றவர்களின் வாழ்க்கையில் அதிக நாட்டம் காட்டி நுழைவது தன் பண்பாடல்ல என்று அறிந்த அந்த பெண்மணி, வேறு காரியங்களை குறித்து பேச ஆரம்பித்தாள். ஆனாலும், அடுத்த முறை சந்திக்கும்போது இதைக் குறித்து அதிகம் பேசலாம் என்ற ஒப்புதலோடு இருவரும் பிரிந்தனர்.





**ஜெபக் குறிப்புகள்**

- அண்டை அயலாரோடு நல்லுறவை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இயேசுவைக் குறித்து சொல்லவும் விசுவாசிகள் தொடர்ந்து பிரியாசப்பட ஜெபியுங்கள்.
- தங்கள் வட்டாரத்தில் உள்ள தங்கள் சமுதாயத்தினரோடு சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்ள மாரான் பட்டணத்தார் முன்வர ஜெபியுங்கள்.
- இயேசுவின் நாமத்தினால் தன் கண்களில் ஏற்பட்ட சுகத்தினிமத்தம் கேத்தி என்ற பெண் இயேசுவை இன்னும் ஆழமாக அறிந்துக் கொள்ள ஜெபியுங்கள்.


**செயல் திட்டம்**
விடுமுறை நாட்களை உங்கள் அயலார் கிராமத்தில் தங்கி கழிக்கலாம்.

# மண்டலம் 28. பஹாங்- பெக்கான், பெரா & ரொம்பின்

| பெரா: 90,304 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 60.4 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 7 |
| சீனர் | 27 |
| இந்தியர் | 5 |
| மற்றவர்கள் | 0.6 |

| பெக்கான்: 105,218 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 85.2 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 11.6 |
| சீனர் | 1.3 |
| இந்தியர் | 0.4 |
| மற்றவர்கள் | 1.5 |

| ரொம்பின்: 105,606 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 84 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 12 |
| சீனர் | 2.7 |
| இந்தியர் | 1 |
| மற்றவர்கள் | 0.3 |




பஹாங் ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் பட்டணம் **பெக்கான்**. நம் நாட்டின் இரண்டாவது பிரதமர் காலஞ்சென்ற துன் அப்துல் ராசக் ஹுசேன் அவர்களின் சொந்த ஊராகும். முன்னாள் பிரதமராகிய டத்தோ ஸ்ரீ நாஜீப் துன் ராசாக்கின் சொந்த ஊரும் இதுவே. இவர் தன் தந்தையாகிய துன் அப்துல் ரசாகிற்கு பிறகு 1976-ம் ஆண்டிலிருந்து அந்த மாவட்டத்தின் சட்டசபை உறுப்பினராக இருந்து வருகிறார்.

1992-இல் **பெரா** மாவட்டம் நிறுவப்பட்டது. இது ஒரு முக்கியமான நகரமாகும். இங்குதான் சுத்தமான நீரைக்கொண்ட பெராவின் ஏரி உள்ளது.

ஜோகூர் பஹாங் எல்லையில் அமைந்துள்ள பட்டணம் **ரொம்பின்**. தீயோமான் தீவும் இதுனுள் அடங்கும். உலகின் பெரிய அழகிய தீவுகளில் புலாவ் தீயோமான் தீவும் ஒன்றாகும். சுத்தமான தண்ணீர் உள்ள இந்த கடற்கறை ஆழ்கடல் நீச்சலுக்கு பிரபலமாகும். என்டாவ் ரொம்பின் தேசிய பூங்காவும் இங்குதான் உள்ளது.

**எபேசியர் 6:12**

"ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு."

## அன்பு ஒருக்காலும் தோற்பதில்லை

பென்னி ஓர் அறிவுக்கூர்மையான பையன். அவன் நன்றாக படிப்பான். அவனுக்கு அமெரிக்காவில் பயில உதவித்தொகை கிடைத்தது. ஆனால் அவனோ போதைப்பொருளுக்கு அடிமையானான். ஆதலால் அந்த உதவித்தொகை கொடுக்கப்படவில்லை. ஒரு வருடம் கழித்து அவன் வீதியிலே திரியக் காணப்பட்டான். கிறிஸ்துவ குழு ஒன்று அவனைக் கண்டு அவர்களது பாதுகாப்பில் வைத்து பராமரித்து வந்தனர். சில வேளைகளில், அவன் தூங்கி எழும்போது அவனருகில் இருக்கும் நபர்களை கண்டு வியப்படைவான். அவர்களும் அவனுக்காக தாங்கள் 24 மணி நேரமும் ஜெபித்துக் கொண்டே இருப்பதாக கூறுவார்கள்.

தன் சொந்த குடும்பதினரால்கூட இவ்வளவு நேசிக்கப்படாத பென்னி, இவர்களின் அன்பால் மிகவும் தொடப்பட்டவனாய் அவர்களிடம் உள்ளது தனக்கும் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். அவர்களும் சுவிசேஷத்தை அவனோடு பகிர்ந்து கொண்டனர். அவனும் இயேசுவுக்காக தன் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தான். இப்போது பென்னி தன் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களிடையே போதைப் பொருளின் அபாயத்தை விளக்கிச் சொல்லி வருகிறான்.








## ஜெபக் குறிப்புகள்

- போதை பொருளுக்கு அடிமையாகிக் கிடக்கும் அநேகருக்கு தன் சாட்சியின் மூலம் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள பென்னி முன் வர ஜெபியுங்கள்.
- பேன்னியின் மூலமாக அவனது குடும்பம் உறவினர்களும் இயேசுவை அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.
- பெக்கான் பேரா ரொம்பின் மாவட்டங்களில் உள்ள திருமண தம்பதிகள் நல்லுறவோடு வாழ ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

நம்முடைய அயலாருடைய காரியங்களுக்கு உண்மையாய் செவிமடுப்போம்.

## சிலாங்கூர்

தீபகற்ப மலேசியாவின் மேற்கு கடற்கரை பகுதியில் இந்த மாநிலம் அமைந்துள்ளது. சுமார் 7,960 சதுர கி.மீ பரப்பளவில் உள்ளது. மலேசியாவிலே அதிகமாகவே வளர்ச்சியடைந்த மாநிலமாக காணப்பட்டு வருகிறது. அதிகமாகவே முன்னேற்றம் அடைந்த கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் சிப்பாங்கில் அமைந்துள்ளது. போர்ட் கிள்ளான், நாட்டின் மிகப்பெரிய துறைமுகமாகும். ஷா ஆலாம் சிலாங்கூர் மாநிலத்தின் தலைநகரமாகும். நாட்டின் மிகப் பெரிய பள்ளிவாசல் இங்கே அமைந்துள்ளது.

சிலாங்கூர் மாநிலம் கண்ணைக் கவரும் காட்சிகள் நிறைந்த ஓர் நிலமட்டுமின்றி வண்ணமயமான பாரம்பரியத்தை கொண்ட வரலாற்று இடமாக திகழ்கிறது. பூமியில் வீணாக்கப்படாத மிக அழகிய வெப்ப மண்டல மலை காடுகளில் இது அடங்கும். இங்கு மில்லியன் கணக்கிலான மிருகங்கள் மற்றும் தாவர வகைகளை காணலாம்.

2010-ல் சிலாங்கூரின் ஜனத்தொகை 5,040,321 மட்டுமின்றி அதிகமான மக்கள் தொகையை கொண்ட மாநிலமாகவும் திகழ்கிறது. மலாய்க்காரர்கள் 55.8% சீனர்கள் 28.6% இந்தியர்கள் 13.6% ஆவர். பெரும்பான்மையினர் 57.4% இஸ்லாமியர்கள் ஆவர்கள், மற்றும் கிறிஸ்தவர்களுடைய எண்ணிக்கை 3.5% ஆகும். இம்மாநிலத்தில் 10,000 சீன முஸ்லீம்களும், 25,000 இந்தியர் முஸ்லீம்களும் வசிக்கின்றனர். ஏறக்குறைய 63,000 இஸ்லாமிய அல்லாதவர்கள் இம்மாநிலத்தில் வசிக்கின்றனர்.

பிரபலமான உள்ளூர் உணவுகளில் சாத்தே காஜாங், ரொட்டி சானாய் அடங்கும்.

சிலாங்கூரில் 9 நிர்வாக மாவட்டங்கள் உள்ளன. இவைகள் 4 பிரார்த்தனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

மண்டலம் 29: சபாக் பெர்னாம், கோல சிலாங்கூர்

மண்டலம் 30: கோம்பாக், உளு சிலாங்கூர்

மண்டலம் 31: பெட்டாலிங், கிள்ளான்

மண்டலம் 32: கோலா லாஙாட், சிப்பாங், உலு லாஙாட்



சிலாங்கூர் கொடி

**மக்கள் தொகை (2010)**

**மொத்தம்:** 5,040,321

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 55.8 |
| சீனர் | 28.6 |
| இந்தியர் | 13.6 |
| மற்றவர்கள் | 2 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 57.7 |
| புத்தம் | 25.6 |
| இந்து | 11.8 |
| கிறிஸ்துவம் | 3.5 |

# சிலாங்கூர்



# மண்டலம் 29. சிலாங்கூர் - சபாக் பெர்னாம் & கோல சிலாங்கூர்




**சபாக் பெர்னாம்** மாவட்டம், சிலாங்கூரின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ளது. இவ்விடம் குறிப்பாக நெல் விளைச்சல்களுக்கும் மீன்பிடிப்பதற்கும் முக்கியமான ஓர் இடமாக விளங்குகின்றது. முக்கிய பொருளாதார செம்பனை தோட்டமாகும். சுங்கை பெசார் கடற்கரை பகுதி சபா பெர்னாமின் முக்கிய நிர்வாக மையமாக உள்ளது. சுங்கை பெசாரில் அதிகமானோர் விவசாயிகள் மற்றும் மீனவர்களும் ஆவார்கள். செகின்சான் ஒரு சிறிய பகுதியாக இருந்தாலும் அநேகர் இக்கிராமங்களில் அடிக்கடி மீன் பிடிப்பதுமன்றி மலேசியாவிலே அதிகமான அரிசி உற்பத்தி செய்யக்கூடிய இடமும் இதுதான். பெரும்பான்மையினர் 75.8% மலாய்க்காரர்களும் 20% சீனர்கள் ஆவார்கள்.

**கோல சிலாங்கூர்** சிலாங்கூர் மாநிலத்தின் இரண்டாவது பெரிய மாவட்டமாகும். தஞ்சோங் காராங், கோல சிலாங்கூர் எனும் இரண்டு பிரிவுகளாக சிலாங்கூர் ஆறு கோலசிலாங்கூரைப் பிரிக்கிறது. உலகிலேயே மினுக்கும் பூச்சிகளுக்கு மிகப் பெரிய உறைவிடமாக திகழும் பட்டணம் கம்போங் குவந்தான் பட்டணமாகும். கோலசிலாங்கூர் அரச தலைப்பட்டணமாகும். டச்சுக்காரர்கள் விட்டுச் சென்ற அடையாளங்கள் இன்னும் இங்கு இருக்கின்றன. இங்கு மலாய்க்காரர் 74.6% இந்தியர்கள் 15.5% வசிக்கின்றனர்.

**1 யோவான் 4:18**
“அன்பிலே பயமில்லை: பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும் பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.”

**அநேக கேள்விகள்.**

இயேசு கிறிஸ்துவைக் குறித்து நாங்கள் என்ன சொல்லப் போகிறோம் என்பதை அறிய மே என்ற இளம் பெண் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தாள். அவள் மூன்று பக்கங்கள் நிறைந்த கேள்விகளோடு வந்திருந்தாள்!

“வேதாகமம் மாற்றி எழுதப்பட்டிருந்தால் அதை எப்படி நீங்கள் நம்பலாம்?”

“இயேசு எப்படி தேவனுக்கு மகனாக இருக்க முடியும்?”

“இயேசுவை எப்படி தேவன் என்று சொல்ல முடியும்?” தேவன் ஒருவர்தானே?”

“ இயேசு மரிக்கவில்லை என்று என்னுடைய புத்தகத்தில் உள்ளது: இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்று உனக்கு எப்படித் தெரியும்?”

இப்படியாக கேள்விகள் மேவிற்கு இருந்த போதும் அவள் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் எங்கள் ஜக்கியத்தில கலந்து கொள்வாள். ஆறு மாதங்களுக்கு பிறகு மே பல விலையுயர்ந்த கிறிஸ்துவ ஆவிக்குறிய புத்தகங்களை எங்களுக்கு கொடுத்தாள். பிறகு அவள் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதாக கூறி எங்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கினாள்.








**ஜெபக் குறிப்புகள்**

- சபாக் பெர்ணம் கோல சிலாங்கூர் வட்டார அயலாரிடம் தேவன் தரிசனம் மூலமாகவும் கனவு மூலமாகவும் பேச ஜெபியுங்கள்.
- அநேக அந்நியர்கள் தேவனைப்பற்றி அறிய கிறிஸ்தவர்களை நாடி வர ஜெபியுங்கள்
- புதிய விசுவாசிகளுடன் ஐக்கியமும் அன்பும் கிறிஸ்தவர்களிடம் வளர ஜெபியுங்கள்.
- சிலாங்கூர் சுல்தான்காகவும் மந்திரி பெசாருக்காகவும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உங்கள் அயலாருக்காக அவர்களுடை ஜெப நேரங்களில் ஜெபியுங்கள்.

## மண்டலம் 30. சிலாங்கூர் - கோம்பாக் & உலு சிலாங்கூர்




உலு சிலாங்கூர்: 189,836
சதவீதம் (%)

| | |
|---|---|
| மலாய் | 68.5 |
| சீனர் | 12.5 |
| இந்தியர் | 17 |
| மற்றவர்கள் | 2 |

கோம்பாக்: 629,971
சதவீதம் (%)

| | |
|---|---|
| மலாய் | 62 |
| சீனர் | 23.4 |
| இந்தியர் | 12.2 |
| மற்றவர்கள் | 2.4 |

கோலாலம்பூரின் வட பகுதியில் **கோம்பாக்** மாவட்டம் அமைந்துள்ளது. இந்த கோம்பாக் மாவட்டம் ரவாங் பத்து ஸ்தாப்பாக் உலுகிள்ளான் ஆகிய நான்கு வட்டாரங்களை உள்ளடக்கியுள்ளது. ரவாங் முக்கிய நிர்வாக நகரமாகும். அனைத்துலக இஸ்லாம் மலேசிய பல்கழைக்கழகம் இங்கு உளளது. ஆதிவாசிகள் நிறைய பேர் இவ்வட்டாரத்தில் வசிக்கின்றனர். இந்த பூர்வக்குடிமக்களின் பொருட்காட்சிசாலையும் இங்கு உள்ளது. உலகப் பிரசித்திப்பெற்ற சுற்றுலாத்தளமான, 272 படிகளை கொண்ட பத்துமலையும் மிகப் பெரிய முருகன் சிலையும் இங்குதான் உள்ளது.

**உலு சிலாங்கூர்** ஒரு பெரிய மாவட்டமாக சிலாங்கூர் மாநிலத்தில் அமைந்துள்ளது. சிலாங்கூர் நதி இங்கிருந்து ஆரம்பமாவதால் இந்த இடத்தின் பெயர் உலு சிலாங்கூர் என்றழைக்கப்பட்டது. குவாலா குபு பாரு முக்கிய நிர்வாக பட்டணமாகும். பத்தாங் காலி, உலுபெர்ணாம், உலு யாம் செரண்டா போன்ற பட்டணங்களும் இம்மாவட்டத்தில்தான் உள்ளன. குவாலா குபுவில் அநேக சுரங்கங்கள் இருந்தன. அதிகமான ஜனத்தொகையில் 68.5% மலாய்க்காரர்கள் முன்னனையில் வகிக்கின்றனர்.

**1 கொரிந்தியர் 7:17-19**
'தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியோ அவனவன் நடக்கக்கடவன்.

**தவறான கருத்து.**

தன் மதத்தை நன்கு அறிந்த ஒரு பாரம்பரிய குடும்பத்திலிருந்து வந்தவள் லில்லி. அவள் தன் வேலையிடத்தில் ஒரு கிறிஸ்தவளோடு சிநேகமாகி கிறிஸ்துவைப்பற்றி அறிந்து கொள்ள ஆவல் கொண்டாள். அந்த கிறிஸ்துவ சிநேகிதியும் அவளது அனுபவத்தையும் சாட்சியையும் பகிர்ந்து கொண்டாள். கிறிஸ்தவர்கள் ஒரே தேவனை மட்டும் நம்புவதைக் கண்டு லில்லி ஆச்சரியப்பட்டாள். கிறிஸ்துவ மதத்தைக் குறித்து தப்பான அபிப்பிராயம் கொண்டிருந்தாள் இவள்.

கிறிஸ்தவர்கள் ஒரே தேவனை வழிபடுவதைக் கண்டு லில்லி ஏன் ஆச்சரியப்பட்டாள்.
தேவனையும் கிறிஸ்துவத்தையும் நன்கு அறிந்திறாத மத போதனையாளர்கள் கிறிஸ்துவத்தைக் குறித்த தப்பான போதனைகளை அபிப்பிராயங்களையும் கைக்கொண்டிருப்பதினால் ஆச்சரியப்பட்டாள். லில்லியைப் போன்றவர்களிடத்தில், கள்ளபோதனைகளை குறித்து எச்சரிக்கிற இயேசுவின் உண்மையான ஊழியர்களினிமித்தம் தேவனுக்கு ஸ்தோத்திரம். மேலும்,
சமுக இணையத்தளத்தின் மூலம் அநேகர் சத்தியத்தை அறிந்துகொண்டுள்ளனர்.








**ஜெபக் குறிப்புகள்**

- கிறிஸ்தவர்கள் தங்கள் சாட்சிகளையும் சுவிசேஷத்தையும் தைரியத்தோடும் அன்போடும் பகிர்ந்து கொள்ள ஜெபியுங்கள்.
- தங்கள் இருதயத்தில் உள்ள பாவங்கள் வெளிப்புற கழுவுதலால் தொலையாது பாவம் என்ன என்பதை பிறருக்கு அறியச் செய்ய ஜெபியுங்கள்.
- பாவமன்னிப்பு இயேசுவின் இறப்பாலும் இரத்ததாலுமே கிடைக்கும் என்பதை கோம்பாக் மற்றும் உலுசிலாங்கூர் மக்கள் அறிந்துக் கொள்ள அவர்களின் மனக்கண்கள் திறக்கபட ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
பிறனை நேசிக்க கற்றுக் கொள்ளுங்கள் .

## மண்டலம் 31. சிலாங்கூர் - பெட்டாலிங் & கிள்ளான்




கிள்ளான்: 784,212
சதவீதம் (%)

| | |
|---|---|
| மலாய் | 48 |
| சீனர் | 28.7 |
| இந்தியர் | 21 |
| மற்றவர்கள் | 2.3 |

பெட்டாலிங்: 1,660,869
சதவீதம் (%)

| | |
|---|---|
| மலாய் | 51.4 |
| சீனர் | 35 |
| இந்தியர் | 11.6 |
| மற்றவர்கள் | 2 |


மலேசியாவிலும் சிலாங்கூரிலும் அதிக ஜனத்தொகை கொண்ட மாவட்டம் **பெட்டாலிங்** மாவட்டமாகும். ஏறக்குறைய 1.66 மில்லியன் மக்கள் இங்கு வசிக்கின்றனர். ஷா அலாம், பெட்டாலிங் ஜெயா மற்றும் சுபாங் ஜெயா என்ற மூன்று முக்கிய மாநகராட்சி இங்கு செயல்பட்டு வருகிறது. பெரிய நகரங்களான பெட்டாலிங் ஜெயா, புக்கிட் ராஜா, டாமான்சாரா, சுங்கை பூலோ, ஸ்ரீ டாமான்சாரா, சன் வேய் சுபாங், பூச்சோங், செர்டாங், காயு ஆரா, கின்ராரா, கோத்த டாமான்சாரா போன்ற நகரங்கள் இங்குதான் உள்ளன. ஷா அலாம், அழகாக கட்டமைக்கப்பட்ட ஒரு இஸ்லாமிய பட்டணமாகும். மலேசியாவின் மிகப்பெரிய பள்ளிவாசலும் இங்கேதான் உள்ளது. பல பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் இங்குள்ளன. அதுமட்டுமன்றி அநேக சபைகளும் இங்கு இயங்கி வருகிறது.

கப்பல் துறைமுகமான **கிள்ளான்** மாவட்டம் மலேசியாவிலேயே மிக முக்கியமான துறைமுகமாகும். இது சிலாங்கூரின் முக்கியமான வட்டாரமாகும். பண்டார் கிள்ளான், காப்பார், கிள்ளான் ஆகிய பட்டணங்கள் இதில் உள்ளன. கிள்ளான் அரச பட்டணமாகும். இங்கே சில சபைகள் உள்ளன.

**யோவான் 1:4**
''அந்திரேயா முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு மேசியாவைக் கண்டோம்'' என்று சொன்னான். மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம்.

## ஒரு திறந்த மனம்

ஒரு ஜெப நடையின்போது ஒரு தம்பதி ஒரு அயலான் நண்பனை சந்தித்தார்கள். அவன் தன்னை ''திறந்த மனம் கொண்டவன்'' என அறிவித்துக் கொண்டான். மதங்களைப் பொறுத்த மட்டில் எம்மதமும் சம்மதம் என்ற திறந்த மனம் தனக்குள்ளதாய் தெரிவித்தான். தன் பிள்ளைகளுக்கும் அவ்வாறே கற்பித்து வருவதாகவும் கூறினான். எல்லா மதங்களையும் கலாச்சாரங்களையும் அறிந்து புரிந்துக்கொண்டால் மற்றவர்களை குற்றப்படுத்தாமல் இருக்க முடியும் எனவும் கூறினான். எல்லாரிடமும் நேசமாக இருக்க வேண்டும் என்பது அவன் கொள்கை. அவனுடன் வேலை பார்க்கும் ஒரு விசுவாசி நண்பரோடு தங்களை மதங்களைக் குறித்து கலந்து பேசுவதாக கூறினான். சில கிறிஸ்துவ ஒளிநாடாக்களையும் படங்களையும் பார்த்ததுண்டு என ஒப்புக்கொள்ளவும் செய்தான். புதிய ஏற்பாடு ஒன்று அவனுக்கு கொடுக்கப்பட்டபோது அதை அவன் வாங்க மறுத்தான். எனினும் மறுவாரத்தில் 'இயேசு' என்ற ஒரு ஒளி நாடாவை கொடுத்தபோது வாங்கிப் பார்க்க ஒப்புக்கொண்டான்.








## ஜெபக் குறிப்புகள்

- புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்ட அயலார்கள் இப்பூமிக்கு உப்பாகவும் ஒளியாகவும் இருக்க ஜெபியுங்கள்.
- சந்தை வெளியிலும் வேலையிடத்திலும் கிறிஸ்துவை அறிக்கை செய்ய பல வாய்ப்புகள் கிடைக்க ஜெபியுங்கள்.
- பெட்டாலிங் கிள்ளான் வட்டாரங்களில் வீட்டுக் கூட்டங்கள் அதிகரிக்க ஜெபியுங்கள்.
- மாநிலத் தலைவர்கள் வளங்களை சமசரியாக பகிர்ந்து கொடுக்க ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உங்கள் அயலாரை நேசிக்க உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுத் தாருங்கள்.

## மண்டலம் 32. சிலாங்கூர் - கோலா லாஙாட், சிப்பாங் & உலு லாஙாட்




**கோலா லாஙாட்** மாவட்டம் சிலாங்கூரின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. தெலுக் டத்தோக், பந்திங், ஜுக்ரா, மோரிப் பட்டணங்களை உள்ளடக்கியுள்ள வட்டாரம் கோலா லாஙாட் வட்டாரமாகும். மோரிப் கடற்கரை இங்குதான் உள்ளது.

**சிப்பாங்** மாவட்டம் சிலாங்கூரின் தென்பகுதியில் அமைந்துள்ளது. கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையம் சிப்பாங் வட்டாரத்தில் அமைந்துள்ளது. இதே வட்டாரத்தில்தான் 1999-ம் ஆண்டு போர்மிலா ஒன் என்ற வாகன பந்தய சுற்று சாலை அமைக்கப்பட்டது.

**உலு லாஙாட்** மாவட்டம் சிலாங்கூரின் கிழக்கு பகுதியல் கோலாலும்பூரை ஒட்டி அமைந்துள்ளது. காஜாங், செராஸ், அம்பாங், செமினி, உலு லங்காட் போன்ற பட்டணங்கள் உலு லங்காட் வட்டாரத்தில் உள்ளது. இது சிலாங்கூரில் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட மாவட்டமாகும். ஏறக்குறைய 1 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் இங்கே வசிக்கின்றனர். ஜனத்தொகை: மலாய்காரர்கள் 53.9%, சீனர்கள் 33.3% ஆகும்.

**மத்தேயு 25: 42-43**
பசியாயிருந்தேன் நீங்கள் எனக்கு போஜனம் கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன்; நீங்கள் என் தாகத்தை தீர்க்கவில்லை. அந்நியாயிருந்தேன் நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை. வஸ்திரமில்லாதிருந்தேன்; நீங்கள் எனக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலில் அடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை.

**மதம் மாற்றுதல் சட்டத்துக்கு முரணானது**

உபத்திரவப்படுவதற்கு நீங்கள் தயாரா? உங்கள் விசுவாசத்திற்கென்று நீங்கள் பாடுகள் அனுபவிக்க தயாரா? ஒரு மதத்தினரிடமிருந்து இன்னொரு மதத்தினரிடம் நற்செய்தியை கூறுவது சட்ட விரோத செயலாகும். ஆதலால் நாம் ஏன் இப்படிப்பட்ட சவாலை சந்திக்க வேண்டும்? ஏன் நாட்டின் அமைதியை கெடுக்க வேண்டும்? கலகத்தை கொண்டுவர வேண்டும்? பேசாமல் மற்றவர்களைப்போல் நாமும் அரசாங்கத்தை எதிர்க்காமல் வாழ்ந்து விடலாமே என்று பல விசுவாசிகள் இருப்பினும் நற்செய்தியை பரப்புவதற்கு பல தடைகள் உள்ள நாட்டிலே துணிவுடன் சுவிசேஷம் சொல்லி விசுவாசத்துக்காக துன்பப்பட துணிவுண்டா? இதற்கு பயமே நமக்கு எதிராய் நிற்கிறது.பொதுவாக கிறிஸ்தவர்கள் சுவிசேஷம் சொல்லாமல் இருப்பதற்கு பயமே தடையாயிருக்கிறது. ஒருவர், “நான் கிறிஸ்துவுக்காக பாடுபட இன்னும் ஆயத்தமாகவில்லை” என்று கூறினார். அப்படியென்றால், உலகெங்கும்போய் சுவிசேஷம் அறிவியுங்கள் என்று சொன்ன இயேவின் வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டாமா? மனிதருக்கு பயப்படுவதைக்காட்டிலும் தேவனுக்கு பயப்படுவதே மேல் என்று அப்போஸ்தலர்கள் கூறினார்களே. நித்திய ஜீவனில் பிரவேசிகக வேண்டிய ஒரு ஆத்துமாவின் விலைக்கிரயம்தான் என்ன? தேவன்தாமே நம்முடைய பயத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி நற்செய்தி அறிவிக்க நம்மை தைரியப்படுத்துவாராக.








**ஜெபக் குறிப்புகள்**

- இயேசுவின் உன்னதமான வல்லமையின் செயல்கள் இந்த ஜனங்களுடைய வாழ்க்கையில் காணப்பட ஜெபியுங்கள்.
- இயேசுவை அறிகின்ற அறிவினால் இந்த ஜனங்கள் பொல்லாத ஆவியின் பயத்திலிருந்து விடுதலையாக்கப்பட ஜெபியுங்கள்.
- திருச்சபைகள் வளர்ந்து இங்குள்ள மக்களை ஆதாயப்படுத்த ஜெபிக்கவும். குறிப்பாக கோலா லாஙாட், சிப்பாங், உலு லாஙாட் மக்களுக்காக ஜெபியுங்கள்.
- சிலாங்கூரின் முதல் அமைச்சருக்காகவும், அவருடைய குழுவிற்காகவும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உங்களுக்குத் தெரியாத ஒரு அயலாருக்கு உணவு வாங்கிக்கொடுத்து, அவருடன் உங்கள் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள்

# நெகிரி செம்பிலான்

நெகிரி செம்பிலான் மாகாணம் 6,644 சதுர கி.மீ அளவைக் கொண்டது. பிரசித்திப்பெற்ற போர்ட் டிக்சன் கடற்கறை இங்குதான் உள்ளது. நெகிரி செம்பிலான், சுங்கை ஊஜோங், நானிங், ரெம்பாவ், ஜெலுபு, ஜோஹோல், கிள்ளான், ஜெலாய், உலு பஹாங், செகாமட் என்ற ஒன்பது வட்டாரங்களை உள்ளடக்கிய மாநிலமாகும். பிறகு கிள்ளான் சிலாங்கூருக்கும், ஜெலாய் மற்றும் உலு பஹாங், பஹாங், மாகாணத்திற்கும் கொடுக்கப்பட்டது. ஆக தற்போது 7 வட்டாரங்களுடன் நெகிரி செம்பிலான் திகழ்கின்றது.

மினாங்காபாவ் மக்கள் அதிகம் வசிக்கும் இடம் நெகிரி செம்பிலான். நெகிரி செம்பிலானின் தலைநகரம் சிரம்பானாகும். இது மினாங்காபாவ் கலாச்சாரத்தின் தனித்துவத்தை பிரதிபலிக்கும். இது ஒரு பிஸியான மற்றும் நவீன நகரமாகும்.

தலைநகரம் சிரம்பான்: இங்கு 7 நிர்வாக வட்டாரங்கள் உள்ளன. 3 ஜெப மண்டலங்களாக கீழ்க்கண்டவாறு பிரித்துள்ளோம்.

மண்டலம் 33 : ஜெலுபு & ஜெம்போல்

மண்டலம் 34 : சிரம்பான் & கோலப்பிலா

மண்டலம் 35 : போர்ட் டிக்சன், ரெம்பாவ் & தம்பின்



நெகிரி செம்பிலான் கொடி

**மக்கள் தொகை (2010)**


**மொத்தம்:** 963,157

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 59.4 |
| சீனர் | 23.2 |
| இந்தியர் | 15.2 |
| மற்றவர்கள் | 2.2 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 60.6 |
| புத்தம் | 22 |
| இந்து | 13.7 |
| கிறிஸ்துவம் | 2.2 |


மேற்கு மலேசியா
West Malaysia

# மண்டலம் 33. நெகிரி செம்பிலான் - ஜெலுபு & ஜெம்போல்




| ஜெலுபு: 37,287 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 62.7 |
| சீனர் | 25.7 |
| இந்தியர் | 4.7 |
| மற்றவர்கள் | 6.9 |

**ஜெலுபு** நெகிரி செம்பிலான் மாநிலத்தின் இரண்டாவது பெரிய மாவட்டமாகும். இது ஒரு மலரும் விவசாய தொழிற்சாலை வட்டாரமாகும். குவாலா கெலுவாங் இவ்வட்டாரத்தின் முக்கிய பட்டணமாகும். மலாய்காரர்களுக்கு ஒதுக்கப்பட்ட காட்டு நிலப்பகுதி மத்தியில் இந்த சிறு பட்டணம் அமைந்துள்ளது. ஜனத்தொகை : மலாய்க்காரர்கள் 62.7% , சீனர்கள் 25.7%

**ஜெம்போல்** இந்த மாநிலத்தின் பெரிய வட்டாரமாகும். பண்டார் ஶ்ரீ ஜெம்போல் (பண்டார் பாரு செர்த்திங்) ஜெம்போலின் மிக முக்கியமான நகரமாகும். சா'பா பண்டிதரின் வீடு இங்குள்ள புகிட் கொர்டாஸ் கிராமத்தில் உள்ளது. நாட்டின் பொருளாதாரத்திலும், அரசியல் ஈடுபாட்டிலும், சமூக செயலிலும் அக்கறை பொண்டு பல காரியங்களை செய்ததால் இவர் பண்டிதர் என்று அழைக்கப்பட்டார். பாரம்பரிய முறையில் கட்டப்பட்ட வீடுகள் இங்கு அதிகம். இவைகள் இன்னும் மிக கவனமாக பராமரிக்கப்பட்டு காக்கப்படுகின்றன. ஜனத்தொகை: மலாய்காரர்கள் 66.7%, சீனர்கள் 17.3% மற்றும் இந்தியர்கள் 12.9%.

| ஜெம்போல்: 112,354 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 66.7 |
| சீனர் | 17.3 |
| இந்தியர் | 12.9 |
| மற்றவர்கள் | 3.1 |

**மாற்கு 16:17**

விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்: நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.

**நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருத்தல்**





ரேச்சல் தன் கிறிஸ்துவ நண்பர் மூலம் சுவிசேஷத்தை கேட்டு இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒரு புதிய கிறிஸ்தவள். அவளுக்கு அநேக கேள்விகள் இருந்தன. தான் மற்ற கிறிஸ்துவர்களைப் போல உடை அணிவதா? அல்லது தன் பழைய மதத்தின் முறைமையை கடைப்பிடிப்பதா என்ற குழப்பம்.

இயேசுவை ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவர்களே மற்றவர்களுக்கு வழிக்காட்டியாக இருக்க வேண்டும். இயேசுவால் குணமாக்கப்பட்டவர்கள் அனைவரும் அவரை பிரசித்திபடுத்தினார்களே. அதுபோல இயேசு நமக்கு என்ன செய்தார் என்பதை சாட்சிகளின் மூலம் மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும்.

மற்ற மதத்திலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களை நம்முடைய சபைக்கோ அல்லது ஐக்கியத்திற்கோ அழைத்துவரவேண்டும் என்று நினைப்பது சரியாக இருதாலும் எல்லா வேளைகளிலும் அது ஞானமான முடிவாயிருக்காது. சுவிஷேத்தை பரப்புவதில் தேறின கிறிஸ்தவர்கள் மும்முரம் அடைதல் வேண்டும். அதே சமயம் புதிய கிறிஸ்தவர்களை வழிநடத்தும்போது நிதானித்து நடக்க வேண்டும். காரணம் அவர்கள் தங்கள் சொந்த ஜனத்திற்கும் சுவிசேஷம் சொல்ல வேண்டுமே.




**ஜெபக் குறிப்புகள்**


- ரேச்சல் மற்றவரிடம் இயேசுவைக் குறித்து சொல்லும்போது தொடர்ந்து அவள் அவளுடைய விசுவாசத்தில் பெலப்பட ஜெபியுங்கள்.
- சிரம்பான் பட்டணத்திலுள்ள குடும்பத் தலைவர்கள் தங்கள் வீட்டையும் உள்ளதையும் நற்செய்திக்காக திறக்க ஜெபியுங்கள்.
- சிரம்பான், கோலப்பிலா நகரங்களில் மலாய் மொழி வேத புத்தகங்கள் கிடைத்திட ஜெபியுங்கள்.
- ஜெலுபு மற்றும் ஜெம்போல் பட்டணத்திலுள்ள விசுவாசிகள், சமுதாய தேவைகளை அறிந்து செயல்பட ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

காப்பிக் கடைக்குச் சென்றால் அங்கு பார்ப்போரிடம் அன்பாய் பேசி உரையாட முயலுங்கள்.

# மண்டலம் 34. நெகிரி செம்பிலான் - சிரம்பான், கோலப்பிலா

| கோலப்பிலா: 64.120 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 76.9 |
| சீனர் | 14.3 |
| இந்தியர் | 5.8 |
| மற்றவர்கள் | 3 |




| சிரம்பான்: 514,909 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 55.3 |
| சீனர் | 26 |
| இந்தியர் | 17 |
| மற்றவர்கள் | 1.7 |

**சிரம்பான்** நெகிரி செம்பிலான் மாநிலத்தின் தலைநகரம். இந்த மாவட்டத்தில் சிரம்பான் 2, நீலாய் போன்ற பட்டணங்கள் அடங்கும். சிரம்பானிலிருந்து 4 கி.மீ தொலைவில் துணைக்கோள் பட்டணமாக சிரம்பான் 2 வடிவமைக்கப்பட்டுள்ளது. மினாங்கபாவ் கலாச்சாரம் மிகவும் அதிகமாய் காணப்படும் நகரம் இது. மிகவும் சுறுசுறுப்பான நவீன பட்டணமும் இதுவே. இந்த மாநில செயலகக் கட்டிடம் வியக்கூடிய இந்த மினாங்காபாவ் கலாச்சார அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. மேலோங்கி நிற்கும் அதன் கூர்மையான கூரை ஒரு எருதின் கொம்புகளுக்கு ஒப்பாக இருக்கிறது. இந்த கலாச்சாரத்தைக் குறித்து மேலும் அறிந்துக்கொள்ள மாநில பொருட்காட்சிசாலை அங்கு இருக்கிறது. மலாய்க்காரர்கள் 53.3%, சீனர்கள் 26%, இந்தியர்கள் 17% ஜனத்தொகை உள்ளது.

**கோலப்பிலா** மாவட்டம், இந்த மாநிலத்தின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. இப்பட்டணம் ஓர் அரச பட்டணமான ஸ்ரீ மெனாந்தியையும் உள்ளடங்கியுள்ளது. ஸ்ரீ மெனாந்தி அரச பொருட்காட்சிசாலை முன்பு அரண்மனையாக இருந்தது. பல அழகிய வேலைபாடுகள் கொண்ட கட்டடங்கள் இங்கு இருக்கின்றன.

**1 கொரி 10: 31**
ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.

எஸ்தர் ஒரு பாலர் வகுப்பு ஆசிரியை. அவளுக்கு சில குடும்ப பிரச்சனைகள் இருந்தன. அவற்றை தன் சிநேகிதி சாராவிடம் பகிர்ந்து கொண்டாள். சாரா அவளுக்கு நற்செய்தியைப் பகிர்ந்துகொண்டு ஒரு வேதாகமத்தையும் கூடவே கொடுத்தாள். இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின் எஸ்தருக்கு சமாதானம் கிடைத்தது.

எஸ்தரும் தன்னைப் போலவே பிரச்சனையில் இருந்த மேரி என்ற தன் சிநேகிதியிடம் நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டாள். தன்னை நோக்கி ஒரு பெரிய கரம் வருவதை மேரி தன் கனவில் கண்டாள். மேரி தன் சிநேகிதி சாலியிடம் நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டாள். சாலி மேரி எஸ்தர் மூவரும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு கிராமத்தில் நற்செய்தியைக் கூறினார்கள்.

பிறகு அந்தக் கிராமத்து பெண்களையும் பிள்ளைகளையும் அழைப்பித்து ஐக்கியம் கொள்ள ஆரம்பித்தனர். அதில் அநேகர் தனித்து வாழும் தாய்மார்கள் ஆவர்.

சாரா வேதாகமத்திலிருந்து ஒரு சிறு பகுதியை எஸ்தரோடு வாசித்து, அதைக்குறித்து கற்றுத் தருவாள். எஸ்தரும் அந்த வசனங்களையே தன் கிராம பெண்களோடு பகிர்ந்து கொள்வாள். பல இன்னல்கள் பல தொல்லைகள் வந்தாலும் தொடர்ந்து தன் ஊழியங்களை இவர்கள் அந்த மக்களிடையே செய்து வருகின்றனர்.







**ஜெபக் குறிப்புகள்**


- தங்களைச் சூழ்ந்துள்ள தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் தவிக்கும் நெகிரி செம்பிலான் பெண்களுக்காக ஜெபியுங்கள்.
- தங்கள் குடும்பத்துக்கு ஆதரவாக வேலை செய்துகொண்டே குடும்பத்தையும் பராமரிக்கும் பெண்கள் அனுபவிக்கும் வேதனைகள் நீங்க அவர்களுக்காக ஜெபியுங்கள்.
- இந்த வட்டாரத்தில் உள்ள ஆண்கள், தங்கள் மனைவிகளைத் தள்ளி விட்டு குடும்பத்தை நிர்க்கதியாக்குவது நிறுத்தப்பட ஜெபியுங்கள். மனைவிகளிடம் அன்பு செலுத்த ஜெபியுங்கள்.
- யாங்டி பெர்த்துவான் பெசார் மற்றும் மந்திரி புசாருக்காக ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உன் வேலையிடத்துக்கு நீ காரில் செல்லும் போது உன் அயலாரையும் உடன் அழைத்துச் செல்ல முன்

## மண்டலம் 35. நெகிரி செம்பிலான் - போர்ட் டிக்சன், ரெம்பாவ், தம்பின்

| போர்ட் டிக்சன்: 110,617 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 50.2 |
| சீனர் | 26 |
| இந்தியர் | 21 |
| மற்றவர்கள் | 2.8 |

| ரெம்பாவ்: 41,325 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 84 |
| சீனர் | 5.4 |
| இந்தியர் | 8.7 |
| மற்றவர்கள் | 1.9 |




| தம்பின்: 82,545 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 60 |
| சீனர் | 23.4 |
| இந்தியர் | 14.5 |
| மற்றவர்கள் | 2.1 |

**போர்ட் டிக்சன்** மிகவும் பிரசித்திப் பெற்ற கடற்கரை நகரம் போர்ட் டிக்சன். சிரம்பானிலிருந்து 32கி.மீ, தலைநகரத்திலிருந்து 60கி.மீ தூரத்தில் இருக்கிறது. நம் நாட்டின் புகழ்பெற்ற சுற்றதளங்களில் இந்த கடற்கறை ஒன்றாகும். கடல் சம்பந்பட்ட பல விளையாட்டுகள் இங்கு நடைபெறும். ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்தபோது இங்கிருந்து நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டு, சிறிய துறைமுகமாக உருவாக்கப்பட்டது. இங்கே மலாய்க்காரர்கள் 50.2% சீனர்கள் 26% மற்றும் இந்தியர்கள் 21% வாழுகின்றனர்.

**ரெம்பாவ்** நெகிரி செம்பிலானின் சிறிய மாவட்டம் இது. எருதின் கொம்புகளின் அமைப்பைக் கொண்ட பெண்களின் பாரம்பரிய உடைகள் மற்றும் அடாட் பெபாதே என்று சொல்லக்கூடிய இந்த ஜனங்களின் கலாச்சாரத்தைக் குறித்து இங்கே காணலாம். அவர்களின் கைவேலைகளாகிய கைவினை பொருள்கள் இன்றும் நம்மை வியக்கத்தக்கவை. அரசர்களின் பழங்கால வரலாறு பற்றிய தொல்பொருட்காட்சிசாலையும் இங்குள்ளது.

**தம்பின்** மலாக்கா எல்லையில் அமைந்துள்ள மாவட்டம். இதன் அருகில் புலாவ் செபாங் என்ற பட்டணம் உள்ளது. 1922-இல் கட்டி முடிக்கப்பட்ட கெமாஸ் இரயில் நிலையம், மலேசியாவின் கிழக்கு, வடக்கு தென் பகுதிகளை இணைக்கும் முக்கிய நிலையமாக இருக்கிறது. இங்கே மலாய்க்காரர்கள் 60% சீனர்கள் 23.4% மற்றும் இந்தியர்கள் 14.5% வாழுகின்றனர்.

**யோவான் 14:6**
அதற்கு இயேசு “ நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்றார்.

## காணமுடியா ஆதாரம்







ஒரு இளம் பெண் தன் தோழியின் வேதத்திலிருந்து, “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது” என்று வாசித்தாள். இதைப் படித்தப் பின்பு தன் விசுவாசத்தின் மேல் அவளுக்கு சந்தேகம் வர ஆரம்பித்தது. அவ்வாறே அவள் பயணமும் தொடர ஆரம்பித்தது.

மற்றொரு மனுஷன் தன் சிநேகிதனால் கொடுக்கப்பட்ட வேதத்தை நள்ளிரவில் வாசித்தான். வேதவசனங்களை வாசிக்க வாசிக்க, அந்த வசனங்கள் ஜீவனுள்ள வார்த்தைகள் என்பதை உணர்ந்து, இன்னும் அதிகமாக வாசிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுள் எழுந்தது.

இருவருமே பின்னர் இயேசுவின் மேல் தங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்திக் கொண்டனர். இத்தகைய சாட்சிகளை நாம் நிறைய கேட்பதில்லையென்றாலும் இப்படிப்பட்ட காரியங்கள் நடந்துக்கொண்டுதான் இருக்கிறது. தேவனுடைய வசனம் என்றுமே செய்யாமல் வெறுமனே திரும்புவதில்லை. வேதத்தை கையில் வாங்கி வைத்திருந்தாலும் பலர் அதை விசுவாசிப்பதில்லை. ஆனால், இவர்களுக்கோ அது உண்மையான கடவுளின் வார்த்தை. பல கட்டுகளுக்குள் வாழ்ந்த அவர்களை இந்த சத்தியமே விடுவித்தது.



**ஜெபக் குறிப்புகள்**

- நம்முடைய அயலார்கள் தேவனுடைய வார்த்தையை வாசித்து மாற்றமடைய ஜெபியுங்கள்.
- பல இன்னல்களை அனுபவிக்கும் இவ்வட்டார பெண்களுக்காக ஜெபியுங்கள்.
- மந்திரங்களை நம்பும் மக்கள் இயேசு ஒருவரே வழியென்றும் தேவனுக்கும் மனிதனுக்கும் அவர் ஒருவாரே மத்தியஸ்தர் என்பதை அறிந்துக்கொள்ள ஜெபியுங்கள்.
- நெகிரி செம்பிலான் மாநிலத்தை ஆளுகிற தலைவர்களுக்காக ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
சமூக நிகழ்ச்சிகளில் உங்கள் அயலகத்தாரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

## மலாக்கா

சரித்திரப் புகழ் வாய்ந்த மலாக்கா மாநிலம் 1652 ச.கி.மீ அளவைக் கொண்டது. பரமேஸ்வரா என்ற நாடோடி இளவரசனால் 1400ம் ஆண்டு கட்டப்பட்டது. அவன் பிறகு இஸ்லாத்துக்கு மாறி இஸ்லாம் அரசை ஸ்தாபித்தான். சுல்தான் மன்சூர் ஷா (1456-1477) அவர்கள் ஆண்டபோது மலாக்கா மிகவும் வலிமையான மாநிலமாக இருந்தது. ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக, பெருளாதார மையமாக, அரசியல் பிறப்பிடமாக மலாக்கா விளங்கி வந்தது. போர்த்துகீசியர் 1511ம் ஆண்டு மலாக்காவை கைப்பற்றினர். 1641ம் ஆண்டு டச்சு வசமானது. 1824ம் ஆண்டு பிரிட்டிஷ் வசமானது. இந்த ஆட்சியாளர்களின் விட்டுச் சென்ற அடையாளங்கள் இன்றும் அம்மாகாணத்தில் காணப்படுகிறது.

மலாக்காவின் ஜனத்தொகை 786,957 (2010ல்) மலாய்க்காரர்கள் 65.8%, சீனர்கள் 26.4%, இந்தியர்கள் 6.2% ஆவர். போர்த்துகிசீயர், பாபா-நோன்யா வம்சங்களும் இங்குள்ளனர். இவர்கள் சீனா தேசத்திலிருந்து வணிகம் செய்ய வந்த சீனர்கள் மற்றும் மலாய்காரர்களின் கலப்பு திருமணத்தால் உருவான சமுதாயமாகும். இம்மாநிலத்தின் பெரும்பான்மையான சமயம் இஸ்லாம் 66.5%, கிறிஸ்துவம் 2.9% மட்டுமே.


மலாக்கா மலேசியாவின் வரலாற்று மாநிலமாகும். 2008-ஆம் ஆண்டில், ‘யுனேஸ்கோ’ என்ற அமைப்பினால் சரித்திரம் புகழ் வாய்ந்த பட்டணமாக மலாக்காவை அறிவிக்கப்பட்டுள்ளது.

பல மேற்கத்திய கலாச்சாரங்களை உள்ளடக்கிய மலாக்கா பல சுவையான உணவு வகைகளுக்கு பிரபலமாக இருக்கிறது. குறிப்பாக, பாபா-நோன்யா உணவு வகைகள், சாத்தே, சிக்கன் ரைஸ் பால் போன் உணவுகள் குறிப்பிடதக்கவை.
மலாக்கா மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

மண்டலம் 36 : அலோர் காஜா

மண்டலம் 37 : ஜாசின்

மண்டலம் 38 : மத்திய மலாக்கா



மலாக்கா கொடி

**மக்கள் தொகை (2010)**

**மொத்தம்:** 786,957

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 65.8 |
| சீனர் | 26.4 |
| இந்தியர் | 6.2 |
| மற்றவர்கள் | 1.6 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 66.5 |
| புத்தம் | 24.6 |
| இந்து | 5.5 |
| கிறிஸ்துவம் | 2.9 |

# மலாக்கா



## மண்டலம் 36. மலாக்கா - அலோர் காஜா




**அலோர் காஜா** மலாக்காவில் வடக்கில் உள்ளது. இது மலாக்காவின் பிரதான பட்டணம். மலாக்கா மாநகரத்திலிருந்து சுமார் 25 கி.மீ தூரத்தில் உள்ளது. அலோர் காஜாவில் மொத்தம் 31 பகுதிகள் உள்ளன : அயேர் பாபாஸ், பெலிங்பிங், பெரிங்கின், பெரிடு, டுரியான் துங்கால், காடேக், கேலேமாக், குவாலா லிங்கி, குவாலா சுங்கை பாரு, லென்டு, மாச்சாப் மற்றும் பல இடங்கள் உள்ளன.

| மொத்தம்: 176,176<br>சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 76.7 |
| சீனர் | 14.4 |
| இந்தியர் | 7.8 |
| மற்றவர்கள் | 1.1 |

இங்கு பரம்பரை கலச்சாரம் என்ற ஒரு பொருட்காட்சி சாலை இருக்கிறது. முன்பு இதனை அலோர் காஜா வட்டார பொருட்காட்சி சாலை என்று அழைக்கப்படும். இதில் அலோர் காஜாவின் சரித்திரம், மலாக்கா மலாய்க்காரர்களின் பாரம்பரியமும், காலச்சாரமும் சம்பந்தப்பட்ட காரியங்கள் வைக்கப்பட்டுள்ளன. மலாய்க்காரர்களின் பாரம்பரிய திருமண காரியங்களின் விவரங்கள் இங்கு உள்ளன.

டச்சுக்கார்களின் கோட்டை. இக்கோட்டை குவாலா லிங்கி என்ற இடத்தில் ஒரு மலையின் மேலே இருக்கிறது. இதை சரித்திர நினைவு சின்னமாக பழஞ்சுவடி காப்பக சட்டம் 1976-ல் பதிவு செய்யப்பட்டது. டச்சு மற்றும் பூகிஸ் மக்கள் இதனை ஒரு சிறிய யுத்தத்திற்கு பிறகு ஒன்றாக சேர்ந்து கட்டினார்கள், ஆனாலும் இதை கட்டிய பிறகு டச்சு மக்கள் இந்த கேட்டையை விட்டு சென்றுவிட்டார்கள்.

**மத்தேயு 21: 13**
“என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.”

**திருமணம் ?**





சோப்பியா, தோம் இருவரும் திருமணம் செய்யவிருக்கிறார்கள். ஆனால் இதில் ஒரு பிரச்சனை. தோம், சோப்பியாவின் மதத்திற்கு மாற வேண்டும். ஒரு வேலை சோப்பியா மதம் மாறினாலும், அது சட்டத்திற்கு விரோதமானது.
அவர்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் என்ன செய்வீர்கள்?
திருமணத்தினாலும் மற்ற காரியங்களினாலும் அநேக மக்கள், விடுதலை இல்லாமல் சமய வேறுபாடோடு ஒத்துழைப்புமில்லாமல் பல துன்பங்களை நாட்டில் அனுபவிக்கிறார்கள். மிகக் குறைந்த மக்களே விடுதலையை அனுபவிக்கிறார்கள், ஆனால் பெரும்பாலோர் அப்படி இல்லாமல் இருக்கிறார்கள். சேர்வதற்கு விடுதலை உண்டு, ஆனால் விட்டு வர முடியாது. விடுதலைக்கு ஒரே வழிதான் உண்டு. பிரச்சனை மக்களோ அல்லது மதமோ இல்லை. இந்த மதத்திற்கும் அரசியல் அமைப்புக்கும் பின் இருக்கிற பார்க்க முடியாத அதிகாரம்தான் இதற்கு காரணம். இவைகள் விடுதலைக்கும், சத்தியத்திற்கும் தடையாக உள்ளன. இது வான மண்டலத்திலுள்ள, அந்தகார பொல்லாத ஆவிகளோடுள்ள போராட்டம்.



**ஜெபக் குறிப்புகள்**

- பிற மதத்தவர்களை திருமண செய்ய எண்ணம் கொண்டுள்ள அலோர் காஜா மக்களின் தீர்வுக்காக ஜெபியுங்கள்.
- அலோர் காஜாவில் உள்ள ஊழியர்கள் அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் செய்திட ஜெபியுங்கள்.
- அலோர் காஜாவியுள்ள சபைகள் பயமில்லாமல் ஆத்தும ஆதாயம் செய்யும்படி ஜெபியுங்கள்.
- மலாக்காவை அரசாளும் மாநில ஆட்சியாளர்களுக்கும் மற்றும் முதல் அமைச்சருக்கும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
சுற்றியுள்ள அயலகத்தாரின் பிள்ளைகளின் படிப்பிற்கு உதவி செய்.

## மண்டலம் 37. மலாக்கா - ஜாசின்







| மொத்தம்: 130,719<br>சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 75 |
| சீனர் | 13 |
| இந்தியர் | 11 |
| மற்றவர்கள் | 1 |

**ஜாசின்** மாவட்டம் மலாக்காவின் தென்- ஜெகூர் பகுதியில் உள்ளது. இப்பகுதி மிக முக்கியமான பட்டணமாகவும், மாவட்ட ஆட்சி மையமாக விளங்குகின்றது. காலஞ்சென்ற முன்னால் துணை பிரதமர் துன் அப்துல் கபார் பாபா பல ஆண்டுகளாக இங்கே சட்ட மன்ற உறுப்பினராக இருந்தார்.

20 பகுதிகள் ஜாசின் மாவட்டத்தில் உள்ளன. ஆயேர் பானாஸ், பாதாங் மலாக்கா, புகிட் சேங்கே, சாபாவ், சின் சின் போன்ற பகுதிகள் அவற்றுள் அடங்கும்.

டிமாங் அப்துல் கஹானி காட்சியகம் பாரம்பரிய வீடாக 1831ஆம் ஆண்டில் கிராமத்து தலைவர் அப்துல் மஸ்ஜிட் கட்டினார். இங்கு ஆரசாங்க கூட்டங்களும் சமுதாய காரியங்களும் பேசப்படும். கிராமத்து தலைவர் அப்துல் மஜிட், டிமாங் அப்துள் கஹானி, கிராமத்து தலைவர் மாட் நாத்தார் என்ற மூன்று தலைமுறையினர் இந்த வீட்டில் குடியிருந்தார்கள்.

**ரோமர் 15:21**
நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்.

## இரகசியம்






ஹென்றி தன்னுடைய குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். தகப்பனார் மரித்தப் பிறகு இவர் குடும்பத் தலைவராக மாறினார். ஹென்றி தன்னுடைய நண்பர் ஒருவரோடு அங்குள்ள மக்களின் வாழ்க்கையை பற்றி பேச தொடங்கினார். பெரும்பாலான மக்கள் ரொம்ப இரகசியமாக இருக்கிறார்கள். எல்லாருக்கும் இரகசியம் இருக்கிறது என்பது இவரின் கருத்து. எனக்குள்ளும் இரகசியங்கள் உள்ளது என்று ஹென்றி கூறினார்.

மற்றவர்களை பார்க்கிலும் தான் வித்தியாசமாக இருப்பதாக கூறினார். அவர் சொன்ன காரியங்கள்; ‘‘நான் பதிலை தேடுகிறேன். நான் ஒரு மத நம்பிக்கையுள்ளவன். ஆனால் எந்த பதிலும் என் மதத்தில் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. எங்களுடைய புனித நூலுக்கு முன்பு கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்தை வாசித்தபோது எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் தொடர்ச்சியாக பதிலை தேடுவேனானால் ஒரு நாள் நிச்சயம் எனக்கு பதில் கிடைக்கும் என நம்பிக்கை இருக்கிறது. என்னுடைய இந்த இரகசியத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம்’’.

கர்த்தர் ஹென்றி போன்ற மக்களிடம் தம்மை வெளிப்படுத்துகிறார். தேவனை முழு இருதயத்தோடு தேடுகிறவர்கள், அவரை கண்டடைவார்கள்.




## ஜெபக் குறிப்புகள்

- ஹென்றியைப்போல் சத்தியத்தை தேடுகிறவர்கள் இரட்சகராகிய இயேசுவை கண்டடைய ஜெபியுங்கள்.
- ஜாசின், மலாக்காபோன்ற பகுதிகளில் இருக்கின்ற விசுவாசிகள் விழிப்புணர்வோடு சமுக சேவையில் பங்கேற்கவும், மற்றும் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.
- விசுவாசிகள் வேறு விதத்தில் சுவிசேஷத்தை கையாள ஜெபியுங்கள்.
- தலைவர்கள் சமுக சேவைகளின் முக்கியத்துவத்தை புரிந்துக் கொள்ள ஊக்கமாய் ஜெபியுங்கள்.

## செயல் திட்டம்

நம்முடைய அயலார்கள் தங்கியிருக்கும் அனாதை மற்றும் முதியோர் இல்லத்தை சந்திக்கலாம்.

## மண்டலம் 38. மலாக்கா - மலாக்கா தெங்கா







**மலாக்கா தெங்கா,** மலாக்காவின் நடு மையத்தில் உள்ளது. இது மலக்காவின் தலைநகரம் மட்டுமின்றி, முக்கியமான பட்டணமாகவும் விளங்குகின்றது. இதில் மலாக்கா பட்டணமும், புகிட் பாரு, ஆயேர் கெரோ, ஆயேர் மோலேக், பாது பெரெண்டாம் மற்றும் பண்டார் ஹிலீர் போன்ற பட்டணங்கள் அடங்கும். சுற்றுலா பயணிகளுக்கு ஒரு முக்கியமான இடமாக விளங்குகின்றது.

| மொத்தம்: 480,062 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 59.2 |
| சீனர் | 34.3 |
| இந்தியர் | 4.3 |
| மற்றவர்கள் | 2.2 |

ஹாவா மோசா (1511-ல் போர்த்துக்கீசியரால் கட்டப்பட்டது), மலக்காகாவின் கிறிஸ்துவின் திருச்சபை - Christ Church, ஸ்தாட்டஸ்-Stadthuys, புக்கிட் சீனா, கம்போங் கிளிங் மசுதி, பரிசுத்த ஃபிரான்சிஸ் சேவியர் திருச்சபை - Sr Francis Xavier Church, பாபா மற்றும் ஞோஞ்சா (Baba and Nyonya) பாரம்பரிய அருங்காட்சியகம், மற்றும் ஜொங்கர் தெரு- Jonker Street ஆகியவைகள் முக்கிய சுற்றுலா மையமாக இருக்கின்றன.

**மத்தேயு 16: 18**
மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

**அன்பின் மொழிகள்**



ஒவ்வொரு வாரமும் நாங்கள் மொழி ஆசிரியர்களோடு பேசி, சக ஜனங்களோடு பேச எங்கள் மொழி வளங்களை மேம்படுத்திக் கொள்கிறோம். மலேசியாவில் உள்ள அநேக மொழிகள் மற்றும் கலாச்சாரங்களை கற்றுக்கொண்டால், மற்றவர்களோடு தொடர்புகொள்ளவும், சுவிசேஷம் சொல்ல வாய்ப்புகள் கிடைக்கும். குறிப்பாக தேசிய மொழியை கற்றுக்கொள்வதும் அயலார்களின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் கற்றுக் கொள்ளுதலும் அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க உதவியாயிருக்கும். அவைகள் நமக்கொரு உறவு பாலமாக அமையும். மொழி ஆசிரியரிடத்தில் பேசும்போது எப்படியாவது அவருக்கு சுவிசேஷத்தை அறிவித்து விட வேண்டும் என சந்தர்ப்பங்களை எதிர்பார்ப்பேன்.



இவர்களோடு இணைந்து, சிறுவர்கள் வேதாகமத்திலிருந்து கதைகள், ஒரு சில வேளைகளில் எங்கள் சாட்சிகளைகூட, எப்படி அவர்கள் மொழியில் சொல்வது என்பதை இவர்கள் மூலம் கற்று கொள்வதுண்டு. ஆனபடியினால் கிறிஸ்மஸ் மற்றும் ஈஸ்டர் காலங்களில் இந்த பண்டிகையின் அர்த்தத்தை மற்றவரிடம் அவர்களுடைய தாய் மொழியில் பகிர்ந்து கொள்வது மிகச் சிறந்த காரியமாக அமையும். இதனால், ஒரு சில மொழி ஆசிரியர்கள் இரட்சிப்புக்குள் வந்தாலும் இன்னும் அநேகர் வர வேண்டியிருக்கிறது. அவர்களில் எல்லாரும் பொறுமையாக இக்காரிங்களைக் குறித்து கேட்பதில்லை.



**ஜெபக் குறிப்புக்கள்**

- மொழியை கற்றுக் கொள்ளும் ஊழியர்கள், தங்களுடைய ஆசியர்களுக்கு கிறிஸ்துவின் தாக்கத்தை ஏற்படுத்த ஜெபிப்போம்.
- மலாக்கா தெங்கா மக்கள் தங்களுடைய மூட நம்பிக்கையிலிருந்து விடுப்பட ஜெபிப்போம்.
- இயேசுவின் திரைப்படத்தின் மூலமாக சாட்சி பகிரவும், இதன் மூலமாக வாலிபர்கள் சத்தியத்தை வழியையும் அறிந்துக் கொள்ள ஜெபிப்போம்.
- கிறிஸ்தவ வரலாறு மற்றும் பாரம்பரியம் மலாக்கா தெங்காவில் பாதுக்காக்கப்பட ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**
நம் அயலானை குறித்து குறை பேசுகின்ற பழக்கத்திலிருந்து மனம் திரும்புவோம்.

# ஜோகூர்

தீபகற்ப மலேசியாவில் தென்பகுதியில் அமைந்துள்ள ஜோகூர் மாநிலம் மூன்றாவது மிகப் பெரிய மாநிலமாகும். இதனுடைய பரப்பளவுெ 18,987 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதனுடைய தலைநகரம் ஜோகூர் பாருவாகும். மலேசியாவின் அதிக வளர்ச்சியான மாநிலங்களில் ஒன்றாகும். இங்கு பலவகை உற்பத்தி பொருட்கள், விவசாயம், வர்த்தகம் மற்றும் சுற்றுலா போன்றவை அடங்கும். 2010-ல் மக்களின் தொகை 3,076,384 ஆகும்.

ஜனத்தொகை, மலாய்க்காரர்கள் 57%, சீனர்கள் 34%, இந்தியர்கள் 7% ஆவர். பல்வகை கலாச்சாரங்களும், பல இன பாரம்பரியங்களும் நிறைந்த ஓர் அழகிய கலையாக இந்த மாநிலம் திகழ்கிறது. இங்கு இஸ்லாமியர் 58% வசிக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்களோ 3.3% மட்டுமே இருக்கிறார்கள். சீன முஸ்லிம்கள் தொகை 4000 மற்றும் இந்திய முஸ்லிம்கள் தொகை 8,400 ஆகும். ஜோகூர் மக்கள் தங்களை ஜோகூரியன் என்று பெருமை பாராட்டிக்கொள்வார்கள். ஜோகூர் பாரு தீபகற்ப மலேசியாவின் மட்டுமல்ல, ஆசியா கண்ட நிலப்பகுதியின் தென்பகுதி முனையாகும். இங்கிருந்து 2 முக்கிய பாலங்கள் சிங்கப்பூர் நாட்டை இணைக்கிறது. இது மாநிலத்தின் முக்கிய நிர்வாகமும்கூட.

இங்கு அன்னாசி பழம், ரப்பர் மரம், தென்னை மற்றும் செம்பனை தோட்டங்கள் என பரந்த இயற்கைவளம் கொண்ட இடமாக திகழ்கின்றது. அதுமட்டுமன்றி, இங்கு மீனவ கிராமங்களும் இருக்கிறது. இந்த மாநிலத்தில் அழகான தீவுகள், சுத்தமான கடல்கள் மணல் கடற்கரைகள் மற்றும் உள் நீச்சள்களுக்கு சிறந்த இடமாக விளங்குவதுமின்றி பிரபலமான உணவுகளுக்கும் சிறந்த இடமான திகழ்கின்றது. லக்சா ஜோகூர், மீ பண்டோங், பிரியாணி மற்றும் பல.

ஜோகூரில் 10 மாவட்டங்கள் இருக்கின்றன. இந்த புத்தகத்தில் இந்த 10 மாவட்டங்கள் 4 ஜெப மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

மண்டலம் 39 : சிகாமட், லேடாங் (தங்காக்), மூவார்

மண்டலம் 40 : குளுவாங், மெர்சிங் & கோத்தா திங்கி

மண்டலம் 41 : பத்து பஹாட் & பொந்தியான்


மண்டலம் 42 : ஜோகூர் பாரு & கூலாய்

**மக்கள் தொகை (2010)**

**மொத்தம்:** 3,076,384

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| மலாய் | 57 |
| சீனர் | 34 |
| இந்தியர் | 7 |
| மற்றவர்கள் | 2 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 58 |
| புத்தம் | 31 |
| இந்து | 6.4 |
| கிறிஸ்துவம் | 3.3 |




ஜோகூர் கொடி

# ஜோகூர்



## மண்டலம் 39. ஜோகூர் - சிகாமட், லேடாங் (தங்காக்), மூவார்.




| சிகாமட்: 179,342 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 55.5 |
| சீனர் | 33.8 |
| இந்தியர் | 8.8 |
| மற்றவர்கள் | 1.9 |

| லேடாங்/தங்காக்: 129,280 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 59 |
| சீனர் | 35 |
| இந்தியர் | 4.8 |
| மற்றவர்கள் | 1.2 |

| மூவார்: 233,779 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 58.7 |
| சீனர் | 38 |
| இந்தியர் | 2.5 |
| மற்றவர்கள் | 0.8 |

**சிகாமாட்** - இந்த மாவட்டம் ஜோகூர் மாநிலத்தின் வடக்கில் உள்ளது. கோலாலம்பூருக்கும், ஜோகூர்பாரு மற்றும் சிங்கப்பூருக்கும் இடையே அமைந்துள்ள பட்டணம். செம்பனை, ரப்பர் மற்றும் விவசாயத்தில் அதிகமான வளர்ச்சியை இங்கு காணலாம். ருசியான டுரியான் பழங்கள் இங்கு கிடைக்கும். புதிய பழைய காலச்சாரங்கள் கலந்துள்ள பட்டணமாகும்.

**தங்காக் (லேடாங்)**- இந்த வட்டாரம் ஜோகூர் வடப்பகுதியில் மாத்திரமல்ல சரியாக மூவார் பட்டணத்தின் வட பகுதியில் அமைந்துள்ளது. மூவார் நதி இந்த வட்டாரத்தை மூவாரிலிருந்து பிரிக்கிறது. 9/6/2008 அன்று ஜோகூர் சுல்தான் இந்த வட ஜோகூர் பகுதியை 10-வது மாவட்டமாக அதிகாரபூர்வமாக திறந்து வைத்து அதற்கு லேடாங் மாவட்டம் என்று பிரகடனம் செய்தார். பிறகு 2015-இல் தங்காக் மாவட்டமாக பெயர் மாற்றப்பட்டது. இங்கு ஜோகூரின் மிக உயர்ந்த மலையாகிய லேடாங் மலை இருக்கிறது. அதின் உயரம் 1276 மீட்டர்.

**மூவார்** - மூவார் ஆற்றின் அருகில் உள்ளது. மகா ராணி பட்டணம் என்று அழைக்கப்படுகிற அரசபட்டணமாகும். இந்த மாநிலத்தின் மலாய் கலாச்சாரத்திற்கு புகழ்பெற்ற பட்டணமாகும். மீ பண்டோங், அசாம் பெடாஸ் போன்ற உணவு வகைகள் இங்கு பிரபலம்.

சகரியா 4: 10
அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்?

## கூடைப்பந்து



வெளிநாட்டினர் ஒரு குழுவாக வந்து கூடைப்பந்து பயிற்சியை நடத்தினார்கள். ஒரு நாள் ஜேன் அந்த பயிற்சி இடத்திற்கு தன்னை அழைத்த தோழியோடு வந்திருந்தாள். ஜேன் அயலக மதத்தை சார்ந்தவள் என்பது தோழிக்கு தெரியும். அவர்கள் அவளிடம் இயேசுவை பற்றியும், ஏன் இயேசு சிலுவையில் மரித்தார் என்பதையும் அவளிடம் பகிர்ந்துக்கொண்டார்கள். இயேசுவைக் குறித்து அளிக்கப்பட்ட விளக்கம் தெளிவாக இருந்ததாலும், இயேசு கொடுக்கிற இரட்சிப்பு எல்லாருக்கும் உண்டு என்பதாலும், இயேசுவை விசுவாசிப்பதின் பின் விளைவுகளை தெரிந்தும் ஜேன் இயேசுவை ஏற்றுக்கொண்டாள்! தன் விசுவாசத்தில் வளர்ந்து ஜேன் கிறிஸ்துவ வாலிப பெண்ணாக வாழ தொடங்கினாள். இது தன்னுடைய தாயாருக்கு பிரச்சனைகளை கொண்டு வந்தது. ஆனால் தேவன் அவர்களை இந்நாள் வரையிலும் பாதுக்காத்து வருகின்றார்.







**ஜெபக் குறிப்புகள்**

- சிகாமட், லேடாங், தங்காக், மூவார் விசுவாசிகள் நம்முடைய அயலாருக்கு சுவிஷேசம் சொல்ல ஜெபிப்போம்.
- விசுவாசிகள் திட நம்பிக்கையாகவும், ஞானமாகவும் சாட்சிகளை பகிர்ந்து கொள்ள ஜெபிப்போம்.
- இங்குள்ள விசுவாசிகள் வாழ்கையில் பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதலை பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஜோகூர் சுல்தானுக்காகவும், மந்திரி பெசாருக்காகவும் ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**
நம்முடைய அண்டை அயலாரோடு வருடத்திற்கு ஒரு முறையாவது குடும்ப நாள் ஒன்றை திட்டமிடுவோம்.

# மண்டலம் 40. ஜோகூர் - குளுவாங், மெர்சிங் & கோத்தா திங்கி

| குளுவாங்: 262,398 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 54.4 |
| சீனர் | 34.2 |
| இந்தியர் | 9.5 |
| மற்றவர்கள் | 1.9 |




| மெர்சிங்: 64,094 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 83.5 |
| சீனர் | 11.3 |
| இந்தியர் | 1.1 |
| மற்றவர்கள் | 4.1 |

| கோத்தா திங்கி: 176,302 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 84.4 |
| சீனர் | 11 |
| இந்தியர் | 3.3 |
| மற்றவர்கள் | 1.3 |

**குளுவாங்** ஜோகூர் மாநிலத்தில் மத்தியில் அமையப்பட்ட மாவட்டம் மற்றும் பட்டணமாகும். காப்பிக்கு பிரசித்திப் பெற்றது. 1938ல் குளுவாங் இரயில் நிலையத்தில் புகழ்பெற்றது இரயில் காப்பியாகும். இப்பட்டணம் தொன்மை வாய்ந்த கரிம விவசாய துறையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. மலேசியாவில் மிகப் பெரிய காய்கறி பண்ணை என கருத்தப்படும் 'சென்சின்' கரிம காய்கறி பண்ணை பொது மக்களுக்காக கல்வி மற்றும் பொழுது போக்கு இடமாக அமைந்துள்ளது.

**மெர்சிங்** வடகிழக்கில் அமையப் பெற்ற மாவட்டம் மற்றும் பட்டணமாகும். இது ஒரு மீனவை பட்டணமாகும். மெர்சிங்கின் கிழக்கு கடற்கரையான 'செரிபுஅட் அர்சிபெலகோ' எனும் தீவு 64 எரிமலைத் தீவுகளைக் கொண்டுள்ளது. மணல் நிறைந்த பூலாவ் பெசார், பூலாவ் சீபு, பூலாவ் திங்கி போன்ற தீவுகள் ஜோகூர் மாநிலத்தில் சுற்றுலா தளமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. மலாய்காரர்கள் அதிகமாக வாழும் பகுதியாகக் கருதப்படுகிறது (83.5%).

**கோத்தா திங்கி** ஜோகூரின் தென்கிழக்கில் அமையப் பெற்ற மாவட்டம் மற்றும் பட்டணமாகும். ஜோகூர் சுல்தான் ஆட்சி செய்யப்பட்ட இடமானதால் சரித்திரப் புகழ்பெற்ற இடமாக கருதப்படுகிறது. புகழ்பெற்ற சுல்தான் மாமுட் மங்காட் டி ஜுலாங் என்பவரின் கல்லறை இங்கு தான் உள்ளது. இந்த கல்லறை தான் மலாக்கா சுல்தான் வழி வந்த இறுதி பழைய ஜோகூர் சுல்தான் இராஜியம். 1699-இல் இவர் படுகொலை செய்யப்பட்டார். கோத்தா திங்கி நீர் வீழ்ச்சி பிரசித்திப் பெற்ற ஈர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ளது. டெசாரு கடற்கரை நீண்ட மணல் நிறைந்த கடற்கரைக்குப் பெயர் பெற்றது. மலாய்க்கார மக்கள் தொகை அதிகமுள்ள ஓர் இடம் (84.4%).

**எரேமியா 17:8**

அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்.

நம் நாட்டின் சட்டத் திட்டத்தின்படி ஹரியை திருமணம் செய்த ஜேன் தன் கணவரின் மதத்தைப் பின்பற்றினார். பக்தி வைராக்கியமாக தன் கணவரின் மதத்தைப் பின்பற்றிய அவருக்கு மனதில் சமாதானம் இல்லை. ஒரு நாள் அவரின் தோழி அவரை திருச்சபைக்கு வரும்படி அழைத்தார். ஆனால், சட்டத்திட்டத்தினால் அவருக்கு திருச்சபைக்குச் செல்ல பயம் ஏற்பட்டது. அவரின் தோழி "பேட்டி" சுவிஷேசம் சொல்லவும் திருச்சபைக்கு அழைக்கவும் தவறவில்லை. ஒரு நாள் "பேட்டியுடன்" வீட்டுச் சந்திப்பு கூட்டத்திற்குச் செல்ல வாய்ப்பு கிட்டியது; ஆண்டவருடைய பிரசன்னத்தையும் உணர்ந்தார். துதிதொழுகை மற்றும் ஜெபத்தின்போது அக்கூட்டத்தை நடத்திய தலைவர் ஜேனை முன் அழைத்தார். அவரை நடுவில் அமர வைத்து அனைவரும் சுற்றி நின்று ஜேனுக்காக ஜெபித்தனர். இதுவரை பெற்றிராத ஓர் அனுபவத்தை அந்நாளிலே அவர் பெற்றார். தன் தலையில் ஒரு தெய்வீக வல்லமை அமர்வதை உணர்ந்தார். கூட்டத்தில் இருந்த ஒருவர் இயேசுவின் கரம் ஜேனின் தலையில் வைத்ததைப்போல தான் தரிசனம் கண்டதாகக் கூறினார். அப்போதுதான் ஜேன் தன் தலையில் இயேசு கை வைத்ததை புரிந்துக்கொண்டார். அந்த அனுபவத்திற்குப் பின் அவர் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வீட்டுக் கூட்டங்களுக்குச் செல்ல ஆரம்பித்தார். தன் கணவரும் இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவனிடம் ஜெபித்து வருகிறார்.








**ஜெபக் குறிப்புகள்**

- விசுவாசிகள் தங்கள் அயலாரை வீட்டிற்கு அழைத்து அவர்களுக்காக ஜெபிக்க ஜெபியுங்கள்.
- இயேசுவுக்காய் உபத்திரவப்படுகிற ஒவ்வொரு கோத்தா திங்கி விசுவாசிகள் இறுதி வரை இயேசுவுக்காய் நிற்க ஜெபியுங்கள்.
- குளுவாங், மெர்சிங் மற்றும் கோத்தா திங்கி பிள்ளைகள் இயேசுவின் வழியை அறிந்துக் கொள்ள ஜெபியுங்கள்.
- விசுவாசிகளின் சுற்றுப் புறத்தில் வாழுகிற மக்கள் இயேசு நமக்காக சிலுவையில் மரித்தார் என அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.
- ஜோகூர் சுல்தானுக்காகவும் அவர் குடும்பத்துக்காகவும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

சக அண்டை அயலாரை பாராட்ட கற்றுக் கொள்வோம்.

## மண்டலம் 41. ஜோகூர் - பத்து பஹாட் & பொந்தியான்

| பத்து பஹாட் : 398,014 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 66.2 |
| சீனர் | 31 |
| இந்தியர் | 1.7 |
| மற்றவர்கள் | 1.1 |




| பொந்தியான்: 144,324 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 69 |
| சீனர் | 29 |
| இந்தியர் | 1 |
| மற்றவர்கள் | 1 |

**பத்து பஹாட்** மக்கள் தொகையில் இரண்டாவது இடம் வகிக்கும் மாவட்டமாகும். பெங்காராம் பட்டணம் இம்மாவட்டத்தின் தலைப் பட்டணம் ஆகும். ஜோகூர் மாநிலத்திலே தொழில் மயத்தில் இராண்டாவது நிலையில் உள்ளது. நெகிளி, ஜவுளி, உத்திரம், உணவு பதனீடு, தட்டுகள் மற்றும் மின்னு போன்ற தொழில் துறை இதில் அடங்கும். இப்பட்டணம் ஜவுளி உற்பத்தியில் மலேசியாவிலே பெரிய பட்டணமாகும்.

**பொந்தியான்** ஜோகூரின் வடமேற்கில் அமைந்துள்ள மாவட்டமாகும். பொந்தியான் என்பது பொந்தியான் பெசார் மற்றும் பொந்தியான் கெச்சில் என இரண்டு பட்டணங்களின் பெயராகும். தலைபட்டணமான பொந்தியான் கெச்சில், மீன் பிடி கிரமமாக கடல் உணவுக்கு மிகவும் பிரசித்திப் பெற்று தற்போது பட்டணமாக மாற்றப்பட்டது. பொந்தியான் சிங்கப்பூர் மக்கள் அடிக்கடி வந்துச் செல்லும் இடம். குகுப் மீன் பிடிக்க மற்றும் சுவையான கடல் உணவுகளைக் கொண்ட குக்குப் கிராமமாகும். இவ்விடத்திலுள்ள தஞ்ஜோங் பியாய் எனும் இடம் ஆசியா நிலப்பகுதியின் தெற்கின் முக்கிய முனையாகக் கருதப்படுகிறது. பூகிஸ் மற்றும் ஜாவா வம்சா வழியில் உள்ள மலாய்க்காரர்களின் பட்டணமாகும். ஹொக்கியான் பேச்சுவழக்குக் கொண்ட சீனர்கள் வசிக்கும் பகுதியாகும். ரமாடான் மற்றும் ஷாவால் போன்ற மாதங்களில் பிறை நிலா பார்ப்பதற்கான ஆய்வுமையமான இடமாகும். பொந்தியான் எனும் சொல் பெர்ஹெந்தியான் எனும் சொல்லிலிருந்து பிறந்ததாகக் கருதப்படுகிறது. நிறுத்தம் என்பது இதன் பொருள். அதாவது இவ்விடம் வணிகர்கள் பயன்படுத்திய இடமாகும். அத்தோடு 1960ல் இந்தோனேசியா - மலேசியாவின் மோதலில் கடற்படையினர் தரை இறங்கும் இடமாகவும் இருந்து வந்துள்ளது.

**1 பேதுரு 4:13**
கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.

ஆறு ஆண்டுகள் ஆன்மீகப் பள்ளிகளில் பயின்ற நேன்சிக்கு உடன் பிறந்தவர்கள் மொத்தம் 9 பேர்கள். அக்கல்வி கற்றல் முறைமையில் இருந்ததால் அக்கல்வி அவர் மனதைத் தொடவில்லை. பள்ளிப் படிப்பை முடித்து கோலாலம்பூருக்கு வேலைத் தேடிச் சென்றாள். எலிஸ் அவளுடைய சக தோழி ஓய்வு நேரங்களிலெல்லாம் வேதாகமத்தை வாசிப்பாள். நேன்சி, எலிஸ் தவறான பாதையில் செல்வதாகக் கருதினாள். அதனால், அவள் புனித புத்தகத்திலுள்ள கதைகளை தன் தோழியுடன் பகிர்ந்து கொண்டாள். அவளது புனித நூலையும் வேதாகமத்தையும் அவர்கள் ஒப்பிட ஆரம்பித்தனர். பிறகு, அவள் இணையத்தின் வழி மத்தேயு எனும் ஓர் ஆடவருடன் தன் புனித புத்தகத்தையும் வேதாகமத்தையும் கலந்துரையாட ஆரம்பித்தாள். ஒருநாள் வேதாகமத்தை தானே வாசித்தால்தான் சரியாக அறிந்துகொள்ள முடியும் என்ற எண்ணம் அவள் மனதில் உதித்தது. நேன்சியிடமிருந்து ஒரு வேதாகமத்தைப் பெற்று, அதனையும் தன் புனித நூலையும் வாசிக்கத் தொடங்கினாள். அவளுடைய புனித புத்தகத்தைக் காட்டிலும் வேதாகமம் வாசிப்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் சுலபமாக இருப்பதை உணர்ந்தாள். மெய்யானதை அறிந்துகொள்ள ஆண்டவரிடம் ஜெபிக்க ஆரம்பித்தாள். இறுதியில் மெய்யான தேவனையும் சத்தியத்தையும் அறிந்து கொண்டாள்.








## ஜெபக் குறிப்புகள்

- திருச்சபையும், தனிப்பட்ட நபர்களும் அயலகத்தாரோடு நல்ல உறவு கொண்டு கிறிஸ்துவை அறிவிக்க ஜெபியுங்கள்.
- பத்து பாஹாட் & பொந்தியான் அயலாரின் மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பும் கரிசனையும் வெளிப்பட ஜெபியுங்கள்.
- உபத்திரவத்தின் மத்தியிலும் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் வளர ஜெபியுங்கள்.
- மாநிலத் தலைவர்கள் வளங்களை மக்களின் நலனுக்கு உபயோகப்படுத்திட ஜெபியுங்கள்.

## செயல் திட்டம்

சக அண்டை அயலார் செய்த நற்பணியை பாராட்ட கற்றுக் கொள்வோம்.

## மண்டலம் 42. ஜோகூர் - ஜோகூர் பாரு & கூலாய்




**ஜோகூர் பாரு** ஜோகூரின் தலைநகரம். இப்பட்டணம் தஞ்ஜோங் புத்தரி அல்லது இஸ்கண்டர் புத்ரியாக அறியப்பட்டிருந்தது. 1,265,545 (2010) மக்கள் தொகையைக் கொண்ட தீபகற்ப மலேசியாவின் தெற்கு நகரமாகும். மலேசியாவின் இரண்டாவது பெரிய நகரமாகும். 1866லிருந்து ஜோகூர் சுல்தானுக்கு தலைப்பட்டணமாய் இருக்கிறது. இந்தோனேசியா - மலேசியா - சிங்கப்பூர் நாடுகளின் முக்கோண வளர்ச்சிக்கு முக்கிய தளமாக உள்ளது. இப்பட்டணம் சிங்கப்பூருடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது எனலாம், காரணம் நாணய மதிப்பு அதிகம் கொண்டுள்ளதால் சிங்கப்பூர் மக்கள் ஷாப்பிங், பொழுது போக்கு மற்றும் சாப்பாடு போன்றவற்றிக்காக இப்பட்டணத்தை நாடி வருகின்றனர். அத்தோடு இப்பட்டணத்தில் வாழும் மக்கள் மலேசியாவைக் காட்டிலும் அதிக ஊதியம் கிடைப்பதால் சிங்கப்பூரில் வேலை செய்கின்றனர். சீனா நாடும் பெரும் அளவில் இப்பட்டணத்தில் குறிப்பாக இஸ்கண்டார் பட்டணத்திலும் கட்டுமான திட்டங்களிலும் முதலீடு செய்கின்றனர். ஜோகூர் பாருவிற்கு செல்லும் போது சுல்தான் அபு பாகார் அரச அருங்காட்சியகம், சுல்தான் அபு பாகார் பள்ளிவாசல், சுல்தான் இப்ராஹிம் கட்டடம், ஜோகூர் கலைக்கூடம், ஜோகூர் சீன சரித்திர அருங்காட்சியகம், டாஙா வளைகூடா மற்றும் லேகோ லேன் மலேசியா நிச்சயம் சுற்றிப் பார்க்க வேண்டிய தளங்களாகும்.

| ஜொகூர் பாரு: 1,265,545 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 49.6 |
| சீனர் | 37.4 |
| இந்தியர் | 10 |
| மற்றவர்கள் | 3 |

| கூலாய்: 223,306 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 49.6 |
| சீனர் | 37.6 |
| இந்தியர் | 10.8 |
| மற்றவர்கள் | 2 |

**கூலாய்** மாவட்டம் அம்மாநிலத்தின் ஒன்பதாவது மாவட்டமாக 2008ல் அறிவிக்கப்பட்டது. 2015ம் ஆண்டு சுல்தான் இப்ராஹிம் இப்னி அல்மார்ஹும் சுல்தான் இஸ்கண்டார் கூலாய்ஜெயா என பெயரிடப்பட்ட அப்பட்டணத்தை மீண்டும் கூலாய் என பெயரிட ஆணையிட்டார். கூலாய் பட்டணம் ஜோகூர் பாருவிலிருந்து 30கி.மீ தூரத்தில் அமைந்துள்ள பட்டணமாகும். செனாய் ஜோகூர் அனைத்துலக விமான நிலையம் இங்குதான் அமைந்துள்ளது.

**யோசுவா 24:15**
“நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்”

நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த சாரா வெளிநாட்டில் மூன்றாம் நிலைகல்வியைக் கற்றிருந்தாள். அவள் கீழ்ப்படிகிற மகள். அவள் பெற்றோர் பாரம்பரியத்தையும் ஆன்மிகத்தையும் கடைப்பிடிப்பவர்கள். உடன் பிறந்தவர்களில் இவள்தான் ஆன்மிகத்தில் அதிக நாட்டமுள்ளவள். ஒருநாளில் ஐந்து முறை தொழுகை செய்தல், மத ஆசிரியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் மத புனித நூலைப் படித்தல் என்பதை வழக்கமாக கொண்டவள். அவருடைய பெற்றோர் மத ஆசிரியர்களை வீட்டுக்கு அழைத்து மத காரியங்களைப் போதிக்கச் சொல்வர். தான் வணங்கும் கடவுள் சிறந்தவர் என்று அறிந்திருந்தாள். ஆனாலும் தன் கடவுள் மிக தூரத்தில் இருப்பதாகவும் மக்களை தண்டிக்கிறவர் என கருதினாள். அப்பொழுதுதான் அவள் உண்மை கடவுளைத் தேட ஆராம்பித்தாள். இறுதியில் அவள் தேவன் அன்பானவர், நம் பின்னனியைப் பொருட்படுத்தாமல் நம்மை நேசிப்பவர் என்பதை உணர்ந்தாள். கடவுள் தூரத்தில் இல்லை; எல்லா நேரங்களிலும் நம்மோடு இருப்பவர். தேவனோடு எந்த நேரத்திலும் உறவாடலாம்; ஏதாவது சடங்குகளைச் செய்து தான் தேவனை நெருங்க முடியும் என்றில்லை என்பதை அறிந்துக் கொண்டாள்.








**ஜெபக் குறிப்புகள்**

- சாராவைப் போன்று ஜோகூர் மாவட்டத்தில் உள்ள அயலார்கள் தேவனின் அன்பை உணர ஜெபிப்போம்.
- ஜோகூர் மாவட்டத்தில் உள்ள விசுவாசிகள் தேவனிடமிருந்து சிறப்பான பெலத்தைப் பெற்றுகொள்ள ஜெபிப்போம்.
- சிங்கப்பூர் சென்று பணிப்புரியும் தொழிலாளர்கள் புதிய வழிகளில் ஆண்டவரின் சுவிஷேசத்தை அறிந்துகொள்ள ஜெபிப்போம்.
- இயேசு மீண்டும் வந்து உயிருள்ளவர்களையும் மரித்தவர்களையும் நியாயத்தீர்ப்பார் என்ற வெளிப்படுத்துதலுக்காகவும் அவரே நம்பிக்கை என்பதையும் புரிந்துக்கொள்ள ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**
சக அண்டை அயலாருக்கு முன்மாதிரியாக இருங்கள். அவர்களை நன்மைக்கு ஊக்குவிங்கள்.

# கூட்டரசுப் பிரதேசம்

கூட்டரசுப் பிரதேசம் கோலாலம்பூர், புத்ரா ஜெயா மற்றும் லாபுவானை உள்ளடக்கியது; மலேசியா அரசாங்கத்தினால் நேரடியாக ஆட்சி செய்யப்படுகிறது. கோலாலம்பூர் மலேசியாவின் தலைநகரம் ஆகும். புத்ரா ஜெயா நிர்வாக நகரம் மற்றும் லாபுவான் சர்வதேச நிதி நிலையமாக உள்ளது. கோலாலம்பூரும் புத்ரா ஜெயாவும் சிலாங்கூர் மாநிலத்தில் அமைந்துள்ளது. லாபுவான் சபாவில் அமைந்துள்ள ஒரு தீவாகும். இக்கூட்டரசுப் பிரதேசத்தின் அதிகார வரம்பு கூட்டரசுப் பிரதேச அமைச்சின் அமைச்சர் தெங்கு அட்னான் தெங்கு மன்சோரின் கீழ் உள்ளது.




கோலாலம்பூர் கொடி

முதலாம் தேதி பிப்ரவரி 1974ல் கோலாலம்பூர் முதல் கூட்டரசுப் பிரதேசமானது. இரண்டாவதாக லாபுவான் 16 ஏப்ரல் 1984ல் கூட்டரசுப் பிரதேசமானது. புத்ரா ஜெயா மத்திய அரசான கோலாலம்பூருக்கு மாற்றாக திட்டமிடப் பட்ட ஒரு நகரமாகும். இது 1 பிப்ரவரி 2001 மூன்றாவது கூட்டரசுப் பிரதேசமாக அமையப் பெற்றது.



லாபுவான் கொடி

2010-ல் கோலாலம்பூரின் மக்கள் தொகை 1,517,998 ஆகும். மலேசியாவில் மிகவும் பிரசித்திப் பெற்ற மாநகரமாகும். மலேசியா குடிமக்களல்லாதவர்களின் எண்ணிக்கையை இதாடு சேர்த்தோமானால் 1,674,621 ஆக உயர்கிறது. (2010). 44.7% மக்கள் மலாய்க்காரர்கள்; 43% மக்கள் சீனர்கள்; 10.3% மக்கள் இந்தியர்கள் ஆவர். இம்மாநகரத்தின் முக்கிய மதம் இஸ்லாம் (46%), கிறிஸ்தவர்களின் மக்கள் தொகை 4.8%. அதிகமான சீனர்களும் இந்தியர்களும் கிறிஸ்தவர்கள் ஆவர். இதைத் தவிர 3,800 மக்கள் சீன இஸ்லாமியர்களும் 7700 மக்கள் இந்திய இஸ்லாமியர்களாகவும் உள்ளனர்.



புத்ரா ஜெயா கொடி

புத்ரா ஜெயாவின் மக்கள் தொகை 70,744 (2010) மட்டுமே. அதிகமானோர் அரசாங்க ஊழியர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் ஆவர். 96.8% மக்கள் மலாய்க்காரர்கள், 0.7% சீன மக்கள் மற்றும் 1.2% மக்கள் இந்தியர்கள் ஆவர். இஸ்லாம் முக்கிய மதமாகும் (97.7%). கிறிஸ்தவர்கள் 0.8% மட்டுமே. இவர்கள் மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர்

லாபுவானின் மக்கள் தொகை 74,764 (2010). 40% மக்கள் மலாய்க்காரர்கள் ஆவர். மலாய்க்காரர்கள் அல்லாதவர் 43.6%. 13.4% மக்கள் சீனர்கள் மற்றும் 0.9% இந்தியர்கள். இஸ்லாம் முக்கிய மதமாகும் (75%). கிறிஸ்தவர்களின் மக்கள் தொகை 12%. 500 சீன முஸ்லீம்களும், 200 இந்திய முஸ்லீம்களும் லாபுவானில் வாழ்கின்றனர்.

இந்த மூன்று கூட்டரசுப் பிரதேசங்களும் மூன்று மண்டலமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மண்டலம் 43 : கோலாலம்பூர்

மண்டலம் 44 : புத்ரா ஜெயா

மண்டலம் 45 : லாபுவான்

**மக்கள் தொகை (2010)**


| | கோலாலம்பூர் 1,517,998 | புத்ரா ஜெயா 70,744 | லாபுவான் 74,764 |
|---|---|---|---|
| **இனக்குழுக்கள்** | **%** | **%** | **%** |
| மலாய் | 44.7 | 96.8 | 40 |
| சீனர் | 43 | 0.7 | 13.4 |
| இந்தியர் | 10.3 | 1.2 | 0.9 |
| மற்றவர்கள் | 2 | 1.3 | 2.1 |
| மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர் | n/a | n/a | 43.6 |
| **மதங்கள்** | **%** | **%** | **%** |
| இஸ்லாம் | 46 | 97.7 | 75 |
| புத்தம் | 38 | 0.4 | 10 |
| இந்து | 8.5 | 0.9 | 0.4 |
| கிறிஸ்துவம் | 4.8 | 0.8 | 12 |

# கூட்டரசுப் பிரதேசம்



# மண்டலம் 43. கூட்டரசுப் பிரதேசம் - கோலாலம்பூர்

| மொத்தம்: 1,517,998<br>சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 44.7 |
| சீனர் | 43 |
| இந்தியர் | 10.3 |
| மற்றவர்கள் | 2 |







**கோலாலம்பூர்** மலேசியாவின் தலைநகரமும் மிக பெரிய நகரமுமாகும். 1.5 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டது. மலாய் மொழியில் சேறு சங்கமிக்குமிடம் என்று பொருள்படும். 1857ல் தோற்றுவிக்கப்பட்டது. தகர தொழில் சாதாரண வியாபார பதிவாக இருந்த ஓரிடம். சீன வணிகர்கள் மற்றும் வர்த்தகர்கள் அதிகமாக குடியிருந்த காலம். யாப் ஆ லோய் என்பவர் கோலாலம்பூரின் ஆரம்பக் கால வளர்ச்சிக்கு காரணகர்த்தராவார். 1896ல் கோலாலம்பூர் மலாய்காரர்களில் மைய இடமாகவும் பல்லின மக்கள் வாழும் இடமாகவும் உள்ளது. பெட்டாலிங் ஸ்ரிட், கம்போங் பாரு, சௌக்கிட் மற்றும் லிட்டில் இந்தியா போன்ற இடங்கள் சீன, மலாய், இந்திய கலாச்சார மற்றும் உணவுகளுக்குப் புகழ்ப் பெற்ற நகரமாகும்.

31 ஆகஸ்ட் 1957ல் துங்கு அப்துல் ரஹ்மான் மலாயாவின் சுதந்திர நாளாக டாத்தாரான் மெர்டெக்காவில் பிரகடனப்படுத்தினார். கோலாலம்பூரின் இருண்ட நேரமாக கருதப்பட்ட 13 மே 1969-இல் நடந்த சீன - மலாய் இனத்தவர் மத்தியில் ஏற்பட்ட மதக் கலவரமாகும். நூற்றுக்காணக்கான உயிர்களை பழி வாங்கியது இச்சம்பவம். கூட்டரசு பிரதேசமாக கோலாலம்பூர் 1974ல் அறிவிக்கப்பட்டது. 1999ல் புத்ரா ஜெயா நிர்வாக தலைநகரமாக உருவெடுத்தது. ஆனாலும் கோலாலம்பூர் நிதி மற்றும் வணிக மையமாக உள்ளது. இன்று பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரம் (452மீ) அனைத்துலக அளவில் நவீன மலேசியாவின் அடையாளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கூர்ந்து கவனித்தால் இந்நகரம் புதிய பழைய கலவையாக வெளிப்படுகிறது.

நாடாளுமன்றமும் தேச அரண்மனையும் இங்கு அமைந்துள்ளது. பெரிய மற்றும் பழமை வாய்ந்த பல்கலைக்கழகமான மலாயா பல்கலைக்கழகம் கோலாலம்பூர் பெட்டாலிங் ஜெயா எல்லையில் அமைந்துள்ளது. புக்கிட் பிந்தாங், புடு, ஜின்ஜாங், கெப்போங், டாமன்சாரா, செகம்பூட், பங்சார், செபுத்தே, ஸ்தாபாக், கம்போங் பாரு, வங்சா மாஜு, பண்டார் துன் ராசாக், ஸ்ரீ பெட்டாலிங், புக்கிட் ஜாலில், மற்றும் சுங்கை பெசி சில முக்கிய இடங்களாகும்.

**நீதிமொழிகள் 22:6**
“பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடந்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்”

எலிஸின் பெற்றோர் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். ஜெப வீட்டுக்கு தலைவராக இருந்த அவரின் தந்தை அவரை தம் மத கட்டுபாடுக்குள் வளர்த்தார். திருமண வயது வந்ததும் அவருடைய பெற்றோர் அவர்களின் விருப்பத்திற்கேற்ப தம் மகளுக்கு வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்தனர். சில காலத்திற்குப் பின், அந்த ஆடவர் அவரை திருமணம் செய்துகொள்ள வாக்கு கொடுத்தார். ஆனாலும் பின்பு அந்த ஆடவரின் முடிவில் மாற்றம் ஏற்பட்டது. இது எலிஸ்க்கு பேரடியாக இருந்தது. அவருக்குள் நிறைய கேள்விகளை எழுப்பியது. தன் பெற்றோர்களும் எலிஸை குறை கூறினர். ஆனால், உண்மையில் திருமணம் நின்று போனதற்கான காரணம், அந்த ஆடவர் அவர்களின் மதப்படி ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்ணை திருமணம் செய்துகொள்ளலாம் எனும் மரபுக்கு அவள் எதிர்ப்பு தெரிவித்ததே ஆகும். இவ்வித கடுமையான சூழ்நிலையில் எலிஸ் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரோடு உறவில் களி கூற ஆரம்பித்தாள்.








**ஜெபக் குறிப்புகள்**

- ஏலிஸ்சை போல் சுய மதிப்பை தேடுகிறவர்கள் இயேசுவுடன் நல்லுறவு கொண்டு சுய மதிப்படைய ஜெபிப்போம்.
- கோலாலம்பூரில் உள்ள அயலார் இயேசுவின் நற்செய்தி அறிந்து அதற்கு மறுமொழி கொடுக்க ஜெபிப்போம்.
- கோலாலம்பூரில் வாழும் விசுவாசிகள் தாங்கள் செய்யும் வேலையின் மூலமாக வழி தவறிச் சென்றவர்களை சென்றடைய ஜெபிப்போம்.
- நடுத்தர மற்றும் உயர் தரத்தில் உள்ளவர்கள் ஏழை நகர் புறத்திலுள்ளவர்களுக்கு உதவி செய்ய ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**
அயலாருக்கு பிள்ளைகளை பார்த்துக் கொள்ள உதவி தேவைப்பட்டால் உதவ முன் வாருங்கள்.

## மண்டலம் 44. கூட்டரசுப் பிரதேசம் - புத்ரா ஜெயா




| மொத்தம்: 70,744 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 96.8 |
| சீனர் | 0.7 |
| இந்தியர் | 1.2 |
| மற்றவர்கள் | 1.3 |

**புத்ரா ஜெயா** 1995ம் வருடத்தில் உருவாக்கப்பட்டது. அதன் பின்பு 2001ம் வருடத்தில் மூன்றாவது கூட்டரசு பிரதேசமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இது நாட்டின் நிர்வாக தலைநகரமாகும். இவைகள் ஒரு அறிவு பூர்வமாக தோட்ட நகரமாக அமைக்கப்பட்டது. இதன் சுற்றுபுறங்கள் அனைத்துமே செயற்கை குளங்களாகும். இந்த நகரமானது பிரமாண்டமாகவும் கண்ணைக் கவரக் கூடிய அழகிய பாலங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. 1999ம் வருடத்தில் அரசாங்கத்துக்குரிய கட்டடங்களும் மற்ற அமைச்சு துறைகளின் அலுவலங்களும் இங்கு மாற்றப்பட்டது. பிரதம மந்திரி, முக்கியமான மந்திரிகள் அவர்களுடைய அலுவலகங்கள், மலேசியாவின் இஸ்லாமிய பாரம்பரிய வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் கட்டிடங்கள் இஸ்லாமிய பாரம்பரியத்தின் கலை வடிவங்களாக அமைக்கப்பட்டிருக்கிறது. புத்ரா ஜெயா மசூதி 308 அடி உயரமாக கட்டப்பட்டு இந்த கட்டிடங்கள் பிரமாண்டமான பாலங்களோடும் குளங்களோடும் இணைக்கப்பட்டுள்ளது. அதோடு கூட பல வகையான பூக்கள், பனி பொழியும் நிலமாகவும் இவைகள் அனைத்தும் நதிகளை சுத்தமாக வைப்பதற்கு துணையாக இருக்கிறது. புத்ரா ஜெயாவின் இரட்டை பட்டணம் என எண்ணப்படும் சைபர் ஜெயா அதிகமாக தொழில் மையங்களின் கட்டிடங்களோடும் அமைக்கப்பட்டுள்ளது.
இந்த நகரத்தில் 70 ஆயிரம் ஜனங்கள் மட்டுமே இருக்க 96.8 சதவீதம் மலாய்க்காரர்கள் ஆவர். இவர்கள் அரசாங்கத்தில் பணிபுரிகிற ஊழியக்காரர்களும் மற்றும் அவர்கள் குடும்பத்தினருமே இங்கு வாழ்கிறார்கள்.

**ரோமர் 9:31-32**

"நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை இடறுதற்கான கல்லில் இடறினார்கள்.

**பெலசாலியான மனுஷன்**





ஏன்டி என்ற ஒரு வாலிபன் ஒரு செல்வமும் கல்வியறிவுள்ள குடும்பத்திலிருந்து வந்தவன். மற்ற அயலாரைப் பார்க்கிலும் இந்த குடும்பத்தினர் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்ந்தார்கள். ஆனால் ஒரே நாளிலே எல்லாம் மாறினது. அதின் காரணம் அவன் பிசாசின் பிடியில் அகப்பட்டான். இதினிமித்தம், அவன் குடும்பம் பாதிக்கப்பட்டது, சுற்றுப்புறத்தாருக்கு இது ஒரு அதிர்ச்சியாயிருந்தது.

அவர்கள் வீட்டில் வேலை செய்யும் பணிப்பெண்தான் இதற்கு காரணம். ஏன்டியின் தாய் அவளை மிகவும் வேதனைப்படுத்தியதால், அதை தாங்க முடியாத, அப்பணிப்பெண் ஒரு மந்திரவாதியிடம் சென்று அந்த தாயின்மேல் ஒரு பில்லி சூனியத்தை செய்து வைத்தாள். எனவே பிசாசின் கிரியைகளின் நிமித்தம் அந்த தாய் மிகவும் பாதிக்கப்பட்டாள். ஏன்டி, தன் தாய் வேதனைப்படுவதை பார்க்க முடியாமல், அந்த பிசாசுகள் தன் தாயை விட்டு தனக்குள் வர கட்டளையிட்டான். அவைகளும் கீழ்ப்படிந்து அவனுக்குள் புகுந்தது.

குடும்பத்தினர் கூறியது, ஏன்டி இந்த பிசாசுகளின் கிரியைகளின் நிமித்தம் அதிக பெலன் கொண்டவனாய் அறைகளில் காணப்பட்ட மிகவும் கனமான அலமாரிகளை மிகவும் லேசாக தூக்கி எறிவான். அவன் மோட்டார் சைக்கிளைவிட வேகமாக ஓடுவான். பள்ளியிலும் அதிக உபத்திரவமான செயல்களை வெளிப்படுத்தினான். இறுதியாக வேறொரு மந்திரவாதி மூலமாக விடுதலைப் பெற்றான். ஆனாலும் இந்த பிசாசு மீண்டும் வந்து விடுமா என்ற அச்சம் இன்னமும் இருக்கிறது

தயவு செய்து, ஏன்டி போன்ற ஆண்களும் பெண்களும் இப்படிப்பட்ட வலையில் சிக்கிக் கொள்ளாதபடி, அவர்கள் இரட்சிக்கப்படவும் இயேசுவின் வல்லமை அவர்களை காத்துக்கொள்ளவும் ஜெபிப்போம்.




**ஜெபக் குறிப்புகள்:**

- விசுவாசிகள் அயலாரின் பயத்தை அறிந்து அதற்கேட்ப சுவிசேஷத்தை சொல்லி பயத்தை மேற்கொள்ள ஜெபிப்போம்.
- மலேசியா நாட்டின் மந்திரிகளும் தலைவர்களும் தேவ ஞானத்தோடும் உண்மையோடும் தங்கள் பணிகளை செய்ய ஜெபிப்போம்.
- அநேக விசுவாசிகள் சுவிசேஷத்தை புத்ரா ஜெயாவுக்கு எடுத்து செல்ல ஜெபிப்போம்.
- நம் தேசத்து ராஜாவுக்கும் பிரதம மந்திரிக்கும் நாம் தொடர்ந்து ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**

525 திட்டங்களை திருச்சபையிலும் ஜீவிய குழுக்களில் செயல்படுத்துவதற்காக நீங்கள் அனுசரணையாளர்களாக இருப்பீர்களாக.

## மண்டலம் 45. கூட்டரசுப் பிரதேசம் - லாபுவான்




**லாபுவான்** கூட்டரசு பிரதேசம் கிழக்கு மலேசியாவின் சபா மாநிலத்தில் அமைந்துள்ளது. இந்த நகரமானது 1990ம் வருடத்திலிருந்து இன்று வரைக்கும் பணத்தைக் கையாளக் கூடிய, பணத்தைக் பரிமாறிக் கொள்ளுகிற அதோடு கூட தொழில் நிறுவனங்களும் பணத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு ஸ்தலமாக அமைந்து வருகிறது. அதுமட்டுமன்றி எண்ணை எரிவாயு உற்பத்தி செய்கிற ஒரு பகுதியாக அமைந்து வருகிறது.

1846ம் வருடத்தில் இந்த பகுதியை, புருணை சுல்தான் பிரிட்டீஷ் அரசாங்கத்திற்கு இந்த தீவை எரிவாயின் பொருட்களையும், எண்ணையும் நிலக்கரி கப்பல் மூலமாக கொண்டு செல்வதற்கு விட்டுக் கொடுக்கப்பட்டது. 115 வருடங்களாக பிரிட்டீஷ் தலைமையிலே இன்னும் இவைகள் பராமரிக்கப்பட்டு வந்தது. இரண்டாம் உலக போரின்போது ஜப்பானியர்கள் மூன்று வருடங்களாக இதை ஆளுகை செய்த காலகட்டத்தில்தான், இவைகள் தடை செய்யப்பட்டது. 1963ம் வருடத்தில் லாபுவான் தீவானது கூட்டரசு மலேசியாவோடு முறையாக இணைக்கப்பட்டது. இப்பொழுது இந்த தீவுகள் ஓர் அமைதி இடமாகவும் கண்ணைக் கவரக் கூடிய கடல் எல்லையாகவும், சுற்றுலா துறையினர் தங்கள் நினைவுப்பரிசுப் பொருட்கள் வாங்குவதற்கு இந்த இடங்கள் மிகவும் முக்கியமாயிருக்கிறது. அதோடு கூட இந்த லாபுவான் வரலாற்றையும், கலாச்சாரத்தையும் கவரக்கூடிய பார்க்கக்கூடிய அருங்காட்சி மையம் இங்கே அமைந்துள்ளது.

லாபுவான் 74,764 ஆயிரம் ஜனங்கள் வாழக்கூடிய ஸ்தலமாகவும் மலாய்க்காரர்கள், மலாய்க்காரர் அல்லாத பூமி புத்திரர்கள், சீனர்கள் மற்றும் பல தேசத்தினர் வாழ்ந்து வருகிற ஸ்தலமாகவும், வேலை செய்கிற இடமாகவும் அமைந்திருக்கிறது.

**லூக்கா 23: 34**
அப்பொழுது இயேசு : பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அரியாதிருக்கிறார்களே என்றார்.





அயலார் மதத்தினரான ஷேரன், தேவ பக்கியுள்ளவளாய் தன் மார்க்கத்தின் புனித புத்தகங்களை வாசிப்பவளாக காணப்பட்டாள். அவள் பாலர் பள்ளியில் பணிபுரிந்து வந்தாள். ஒரு நாள் அவள் பள்ளியில் மயங்கி கீழே விழுந்து விட்டாள். பிறகு, ஒரு நாள் அவளுடைய கிறிஸ்தவ தோழி அவளை மற்றொரு கிறிஸ்தவ சிநேகிதி நத்தாலியிடம் அறிமுகப்படுத்தினாள். ஒரு வாரமாக ஷேரன சாப்பிடவோ, தூங்கவோ முடியாமலிருந்தாள். திருமண வாழ்க்கையிலும் அவளுக்கு போராட்டங்கள் இருந்தது.

இந்த இரு சிநேகிதிகளும் ஷேரனை சந்தித்து அவளுக்காக ஜெபித்தனர். அந்த இரவிலே அவளால் சாப்பிடவும் தூங்கவும் முடிந்தது. பிறகு ஷேரன் நத்தாலியோடு வேத ஆராய்ச்சியில் ஈடுபட்டாள். ஒரு நாள் ஷேரன் சில பிரச்சனைகளினாலே பாதிக்கப்பட்டபோது, நத்தாலி அவளுக்காக ஜெபிக்கும்போது ஷேரன் சரீரத்திலிருந்து ஏதோ ஒன்று வெளியே வந்தது என்று கூறினாள். அது என்ன என்று கேட்டபோது, தன்னிலுள்ள கசப்பு விட்டு நீங்கியது என்றாள்.

இவர்கள் மதிய உணவு நேரங்களில் சந்திக்கும்போது, வேதாகமத்தில் உள்ள காரியங்களைக் குறித்து கற்றுக்கொண்டனர். பிறகு ஷேரன் கற்றுக் கொண்டதை வீட்டில் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுப்பாள். ஒரு நாள் விசுவாசிகளின் கூட்டத்தில் யார் இந்த இயேசு என்று கேட்டபோது, ஷேரன் இயேசுவே ஆண்டவர் என்று கூறினாள். அவ்வேளை தொடங்கி, ஷேரன் பல காரியங்களில் குறிப்பாக சோதனையான சூழ்நிலைகளிலும் தன் விசுவாசத்தில் வளர்ந்தாள்.



**ஜெபக் குறிப்புகள்**

- ஷேரனைபோல் லாபுவானில் வசிக்கிற அயலார் நண்பர்களை நேசித்து, விசுவாசிகள் ஒரு உணவு ஐக்கியத்திற்கு அவர்களை அழைத்து அவர்களோடு தேவனுடைய நற்செய்தியை பகிர்ந்து கொள்ள ஜெபிப்போம்.
- இன்னும் அநேக விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையை இந்த அயலாரிடத்திலே எடுத்து செல்ல ஜெபிப்போம்.
- இந்த அயலாரின் குடும்பங்களின் இருதயத்தை பரிசுத்த ஆவியானவர் இலகுப்படுத்த ஜெபிப்போம்.
- லபுவானில் காணப்படும் சமூகநல பிரச்சனைகளை இங்குள்ள நிர்வாகம் சீரமைக்க ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**
இந்த 525 திட்டங்களை உங்கள் நேரம், பணம், தாலந்து அல்லது ஜெபத்தின் மூலமாகவும் தாங்குவதற்கு பங்காளிகளாக இருப்பீர்களாக.

இந்த சபா நகரமானது மலேசியா நாட்டிலே இரண்டாவது பெரிய மாநிலமாக இருக்கிறது. இதின் பரப்பளவு 73,619 சதுர கிலோ மீட்டர். பெரும்பாலான நிலப்பகுதி காடாகும். சூறாவளி காற்றுப் பாதையில் இந்த நகரமானது ‘காற்றுக்கு கீழே அமைந்திருக்கிற நிலம்’ என்று அழைக்கப்படுகிறது. உலகத்திலேயே அநேக காட்டு மிருகங்கள் வாழ்ந்து வருகிற இடங்களில் இந்த நகரமும் ஒன்று.

இதிலே 4101மீட்டர் உயரம் கொண்ட கினாபாலு மலையானது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உயரமான மலையாக சொல்லப்பட்டு வருகிறது. இந்த காட்டிலிருக்கிற வித்தியாசமான பாதைகள் மலையேறுவதற்கு, நீர் அருவிகளும், குளங்களும், பாய்ந்து குளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. கடலுக்கடியில் நீச்சல் செய்வதற்கும் சிறந்த இடமாகும்.


சபாவின் தலைநகரம் கோத்தா கினாபாலு (அபி அபி), பிரிட்டிஷ் காலத்தின்போது ஜெசல்டன் என்றழைக்கப்பட்டது. இரண்டாம் உலக போரின்போது முற்றிலும் அழிக்கப்பட்டு, இப்போழுது இந்த நகரம் மீண்டுமாய் உயிர்ப்பிக்கப்பட்டு சுற்றுலா ஸ்தலமாக அமைந்துள்ளது.

2010ல் இந்த சபா நகரத்தின் மொத்த ஜனங்களின் கணக்கெடுப்பு 2,316,963. மலேசிய குடியுரிமையல்லாதவர்களை சேர்த்தால், 3,206,742 ஆகும். நம் நாட்டிலேயே இந்த மாநிலத்தில்தான் மற்ற தேசத்தார் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த நகரத்தில் 32 வகை கலாச்சார குழுவினர் 80 வித்தியாசமான மொழிகள் பேசக்கூடியவர்களாக இங்கே இருக்கிறார்கள். 24.5% கடசான்/டுசுன், 19.4% பாஜாவ், 8% மலாய், 4.4% முருட், 28.5% மற்ற பூமி புத்திரர், 12.8% சீனர், 0.3% இந்தியர் ஆவர்.

இஸ்லாம் இந்த நகரத்திலே ஒரு முக்கியமான மதமாக இருக்கிறது இவர்கள் 58% மற்றும் கிறிஸ்தவர்கள் 31.5 % ஆவர். மலேசியாவிலே இரண்டாவது அதிக கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வருகிற நகரமாயிருக்கிறது. 9600 சீன முஸ்லிம்கள் இங்கு வசிக்கிறார்கள். சபா 5 பிரிவுகளாக இருக்கிறது. ஆனாலும் இந்த புத்தகத்தில் 3 ஜெப மண்டலங்களாக பிரித்துள்ளோம்.

மண்டலம் 46 : மேற்கு கரை எல்லை
மண்டலம் 47 : மத்திய எல்லை & தாவாவ் பகுதி
மண்டலம் 48 : கூடாட் பகுதி & சன்டாகான் பகுதி




சபா கொடி


**மக்கள் தொகை (2010)**
**மொத்தம்:** 2,316,963

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| கடசான் / டுசுன் | 24.5 |
| பாஜாவ் | 19.4 |
| மலாய் | 8 |
| முருட் | 4.4 |
| மற்ற பூமி புத்திரர் | 28.5 |
| சீனர் | 12.8 |
| இந்தியர் | 0.3 |
| மற்றவர்கள் | 2.1 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 58 |
| புத்தம் | 8.3 |
| இந்து | 0.1 |
| கிறிஸ்துவம் | 31.5 |


East Malaysia
கிழக்கு மலேசியா

# மண்டலம் 46. சபா - மேற்கு கரை எல்லை




| மேற்கு கரை எல்லை: 892,457 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 10.8 |
| கடசான் / டுசுன் | 35.7 |
| பாஜாவ் | 21.5 |
| முருட் | 0.7 |
| மற்ற பூமி புத்திரர் | 13.5 |
| சீனர் | 16 |
| இந்தியர் | 0.4 |
| மற்றவர்கள் | 1.4 |

இந்த பகுதி வடமேற்கு சபாவின் பாகங்களாக இருக்கிறது (ஏறக்குறைய 10.3 சதவீதத்திற்குரிய எல்லை). இந்த பகுதி சபாவின் ஏறக்குறைய 30 சதவீத ஜனத்தொகை கொண்டுள்ளது. இந்த பகுதிகள் மாகாண ரீதியில் பிரிக்கப்பட்டுளளது. ரானாவ், கோத்தா பேலுாட், துவாரான், பனாம்பாங், பாப்பார் மற்றும் மாநில தலைநகரமாகிய கோத்தா கினாபாலு.

**கோத்தா கினாபாலுவில்** 452,058 ஜனங்கள் வசிக்கிறார்கள். தலைநகரில் வசிப்பவர்களின் எண்ணிக்கையை சேர்த்தால் 628,725 ஆகும். இது ஒரு பெரிய சுற்றுலாதளமாக அமைந்துள்ளது. போர்னியோ மற்றும் சபாவுக்கு உல்லாச யாத்திரை செய்பவர்களுக்கு இது ஒரு திறந்த வாசலாக இருக்கிறது. கினாபாலு உல்லாச தோட்டம் இந்த பட்டணத்திலிருந்து 90 கிலோ மீட்டர் துாரத்தில் இருக்கிறது. மேலும் பட்டணத்தின் உள்ளேயும் வெளிப்புறத்திலும் சுற்றுலா கண்காட்சி ஸ்தலங்கள் ஏராளம் உண்டு. மற்றும் கோத்தா கினாபாலு ஒரு பெரிய இயந்திர தொழில் மையமாகவும், வியாபார ஸ்தலமாகவும் கிழக்கு மலேசியாவுக்கு அமைந்துள்ளது. கோத்தா கினாபாலு துறைமுகம் சபா மாநில பகுதியில் ஒரு கப்பல்துறையாக அமைந்துள்ளது. அந்த கடற்கரை நீளம் 1,440 கிலோ மீட்டர். அந்த துறைமுகம் சபாவின் கடல் போக்குவரத்து மையமாக அமைந்துள்ளது.

**அப்போஸ்தலர் 4:19**
பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குப் செவிக்கொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்கு செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ....

பிரன் என்னும் ஒரு பெண்மணி, விவாகரத்து செய்து மற்றொரு பட்டணத்தில் குடிபுகுந்தாள். அவள் சிறு பிள்ளைகளை பராமரிக்கும் ஸ்தலத்தில் வேலை செய்யும்போது, ஒரு கிறிஸ்தவ பெண்ணோடு சிநேகிதமானாள். அந்த சகோதிரியோடு தன் பிரச்சனைகளை பகிர்ந்துக்கொண்டாள். அந்த சகோதிரி இவளை ஒரு சபைக்கு அழைத்து சென்றாள். பிரன் மற்றும் அவளுடைய மூன்று பிள்ளைகளும் அவளுடைய சகோதிரி ஊழாவோடு இயேசு என்ற படக்காட்சியை பார்த்தார்கள். பிறகு பிரன், தன் விசுவாசத்தை கர்த்தர்மேல் வைத்தாள்.

ஒரு நாள் அவர்கள் நடு ஜாமம் ஒரு மணி அளவில் தாங்கள் வசித்த அதே இடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு மாறி செல்ல வேண்டியிருந்தது. அவர்கள் தங்கள் பொருட்களை எடுத்துக் கொண்டிருக்கும்போது, ஊழா யாரோ அவர்களை பின்தொடர்வதை உணர்ந்தாள். அவள் பயத்தில் அழுதாள். அது ஒரு பிசாசு என்று தன் சகோதிரியிடம் கூறினாள். ஆயினும், அவள் கடைசி பொருட்களை எடுத்துக் கொண்டு திரும்பி பார்க்கும்போது, ஒரு வெள்ளையுடை தரித்த ஒரு அழகான தேவதுாதனைக் கண்டாள். அந்த தேவ துாதன் அவர்களை அதிகாலை ஒரு மணி தொடங்கி காலை ஆறு மணிவரை அவர்களை பாதுகாத்துக் கொண்டான்.

அதின் பிறகு, அந்த கிறிஸ்தவ தோழி, அவளை இல்ல சபைக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். அவர்கள் சீஷர்களாக்கப்பட்டு விசுவாசத்தில் வளர்ந்தார்கள். அவர்களுடைய பயணம் லேசாகயில்லை. ஆனால், அதிகாரிகளின் மத்தியிலும் குடும்பத்திலும் எதிர்ப்பு வந்தது. இருந்தபோதிலும், பிரனும் அவள் குடும்பமும் புதிதாக கண்டுபிடித்த விசுவாசத்தில் தளராமல் நிலைத்திருந்தார்கள். இவர்கள் மற்ற குடும்பத்தினரையும் இந்த இல்ர சபைக்கு இயேசுவை அறியும்படி அழைத்து வந்தார்கள்.








**ஜெபக் குறிப்புகள்**

- பிள்ளைகள் மத்தியில் வித்தியாசமான முறையைக் கையாண்டு பரிசுத்த பாரத்தோடு ஊழியம் செய்ய கர்த்தர் ஊழியக்காரர்களை அனுப்ப ஜெபிப்போம்.
- கர்த்தர் தாமே இந்த பிள்ளைகள் இருதயத்தையும் வாழ்க்கையும் தொட்டு அவரிடம் அவர்கள் சேர்க்கப்பட ஜெபிப்போம்.
- விசுவாசிகள் இந்த அயலாரிடத்தில் ஊழியம் செய்யவும், மற்றும் மீன் பிடிப்பவர்களின் கிராமத்திற்க்கு சென்று, ஜெப நடை செய்யவும் ஜெபிப்போம்.
- யாங் டி பெர்த்துவ நெகெரிகாகவும் (கவனர்) பிறகு சபா தலைமை மந்திரிக்காகவும் ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**

மருத்துவமனையில் இருக்கும் நம்முடைய அயலாரை சந்தித்தல்.

## மண்டலம் 47. சபா - மத்திய எல்லை மற்றும் தாவாவ் பகுதி




| மத்திய எல்லை: 364,600 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 8.6 |
| கடசான் / டுசுன் | 35.8 |
| பாஜாவ் | 3.8 |
| முருட் | 25 |
| மற்ற பூமி புத்திரர் | 18.6 |
| சீனர் | 6 |
| இந்தியர் | 0.2 |
| மற்றவர்கள் | 2 |

| தாவாவ் பகுதிள: 498,619 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 4.9 |
| கடசான் / டுசுன் | 3.8 |
| பாஜாவ் | 32.9 |
| முருட் | 0.7 |
| மற்ற பூமி புத்திரர் | 43.6 |
| சீனர் | 11.2 |
| இந்தியர் | 0.3 |
| மற்றவர்கள் | 2.6 |

இந்த **சபாவின் உட்புற மாவட்டம்** தென்மேற்கு பகுதியில் சரவாக் மாநிலத்தின் எல்லையில் அமைந்துள்ளது. இது சபாவின் 24.9% பரப்பளவையும் 14.7% சபாவின் மொத்த ஜனத்தொகையும் கொண்டுள்ளது. இந்த வட்டாரத்தில் காணப்படுகிற சிறிய பட்டணங்கள் - பியோ போர்ட், கோலாபண்யு, சிபிதாங், தெனோம், நாபாவான், கேனிங்கவ், தம்புனான். கடற்கரை பகுதிகளில் புருனை மலாய்காரர்களும் கடாசான் மக்களும் வசிக்கிறார்கள். ஆகையால், உட்புற பகுதிகளின் கிழக்கில் உள்ள கோரோக்கா பகுதியில் அநேக கடாசான்- டுசுன் சார்ந்த சிறுக் குழு மக்கள் வசிக்கிறார்கள்.

**தாவாவ்** பகுதி சபாவின் 24.9% பரப்பளவையும் 14.7% சபாவின் மொத்த ஜனத்தொகையும் கொண்டுள்ளது. இந்த பகுதி சில முக்கியமான நகரங்களை அடக்கியுள்ளது. உதாரணத்திற்கு, தாவாவ், லகாட் டாத்து, குனாக், செம்பூர்னா ஆகும். முக்கிய பூர்வீக குழுவினர்கள் பாஜாவ், சுலுக், யிடாவான், திடோங். சுதேசி குழுவினரும் சிறுபான்மையினருமான கலப்பு மலாய் குழுவினர் மலாய் அரபியர், மலாய் புக்கிஸ், மலாய் ஈபான், மலாய் ஜாவா, மலாய் பான்ஜார், கோகோஸ் அல்லது புலாங்கான் ஆவர். சுதேசி குழுவினர் லூான் பாவாங் மற்றும் லூன் டாயோ.

**1 யோவான் 4:4**
பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்: ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.





ஷேலி, பிரானுடைய 14 வயது இளமையான சகோதிரி. ஷேலி ஒரு இல்ல சபைக்கு செல்லும் ஒரு விசுவாசி. இவள் ஒரு மாற்றான் தாயின் மகள். இந்த மாற்றான் தாயின் மகளோடு இல்ல சபையில் கலந்துக் கொண்டு, வேத ஆராய்ச்சி குழுவிலும் கலந்துக் கொள்வாள். ஒரு கூட்டத்தில் பரிசுத்த நற்கருணை பகிர்ந்துக்கொண்டோம். அப்போழுது ஷேலியிடத்தில் போஜன பந்தி பாத்திரம் அவளிடத்தில் வந்தபோது, அவள் இயேசு கிறிஸ்துவை அறியும் வரை அதை எடுக்கக்கூடாது என்றார்கள்.

சில நாட்களுக்கு பிறகு, நாங்கள் அந்த குடும்பத்தை சந்தித்த போது, நான் ஏன் இயேசுவை நம்ப வேண்டும் என்று ஷேலி கேட்டாள். பிறகு நாங்கள் சுவிசேஷத்தை சுருக்கமாக அவளிடம் பகிர்ந்துக்கொண்டோம்.

மறு வாரத்தில் வீட்டுக் கூட்டத்திற்கு ஷேலி வந்தபோது, நாங்கள் மாற்கு 1-ஆம் அதிகாரத்தில், ஜெப ஆலயத்தில் ஒருவனிடத்திலிருந்து இயேசு பிசாசைத் துரத்திய பகுதியை வாசித்தோம். இயேசு யார் என்று அவளிடத்தில் கேட்டபோது, அவள் மன உறுதியோடு இயேசுவே ஆண்டவர் என்றாள். அந்த குழுவின் தலைவர் உடனே சுவிசேஷத்தை அவளிடம் விவரித்து சொல்லி, அவளை இரட்சணிய பாதையில் நடத்தினார்.



**ஜெபக் குறிப்புகள்**

- உள்ளான கிராம பகுதிகளில் வசிக்கும் மக்கள் மத்தியிலே இயேசுவின் பிறப்பின் நற்செய்தியைக் பகிர்ந்து கொள்ளும் விசுவாசிகளுக்காய் ஜெபிப்போம்.
- தாவாவ் மக்கள் வேதத்தை வாசிக்கும்போது தேவனுடைய வார்த்தையை அவர்கள் புரிந்துக் கொள்ள ஜெபிப்போம்.
- இந்த மக்கள் விசுவாசத்துக்குள் வர இன்னும் அதிகமான கை பிரதிகள், புத்தகங்கள் எழுதப்பட்டு அவர்களுக்கு கொடுக்கப்பட ஜெபிப்போம்.
- மக்களின் உரிமைகளுக்காக வாதாடுகிற நேர்மையும், உண்மையுமான தலைவர்கள் எழும்ப ஜெபிப்போம்.

**செயல் திட்டம்**

பெண்கள் அல்லது தாயார் தினத்தன்று வேலையிடத்தில் அல்லது தங்கும் விடுதிகள் உள்ள சுத்தம் செய்யும் பணிப்பெண்களுக்கு பூக்களை வாங்கி கொடுத்து அவர்களோடு நற்புறவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

## மண்டலம் 48. சபா - குடாட் பிரிவு (குடாட், கோத்தா மாருடு, பிட்டாஸ்)

## சண்டாகான் பிரிவு (சண்டாக்கான், பலுராரான், கின்னாபாத்தாங்கான், தோங்கோட்)

| குடாட் பிரிவு: 180,733 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 2.5 |
| கடசான் / டுசுன் | 28.8 |
| பாஜாவ் | 18 |
| முருட் | 0.2 |
| மற்ற பூமி புத்திரர் | 45.6 |
| சீனர் | 4 |
| இந்தியர் | 0.1 |
| மற்றவர்கள் | 0.8 |

| சண்டாகான் பிரிவு: 380,554 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 7.1 |
| கடசான் / டுசுன் | 13 |
| பாஜாவ் | 12.6 |
| முருட் | 0.4 |
| மற்ற பூமி புத்திரர் | 45 |
| சீனர் | 17.9 |
| இந்தியர் | 0.3 |
| மற்றவர்கள் | 3.7 |




**குடாட்** சபா மாநிலத்தின் வட எல்லையில் இருக்கின்றது. இதனுடைய மொத்த பரப்பளவு 6.3 சதவீதம், அதோடுகூட மொத்த மக்களின் ஜனத்தொகை 7 சதவீதம் மட்டுமே. இந்த குடாட்டின் முக்கியமான நகரம்: குடாட், கோத்தா மாருடு, பிட்டாஸ்.

குடாட் - இந்த நகரத்தின் மொத்த ஜனத்தொகை 83.123 ஆயிரம், அவர்களுடைய போக்குவரத்து இந்த எல்லைக்குள்ளேயே அமைந்திருக்கிறது. துறைமுக வழியாகவும், விமான சேவை மூலமாகவும் அவர்களின் வியாபாரத்தின் செயல்பாடுகள் நடந்து வருகிறது.

**சண்டாக்கான்** பகுதியானது சபா மாநிலத்தின் மையப்பகுதியை இணைக்கிற ஒரே வடக்கிழக்கு பகுதியாகும். இந்த சபா எல்லை பகுதியானது 38.3 சதவீத பரப்பளவையும் 19.4 சதவீதம் சபாவின் மொத்த ஜனத்தொகையும் கொண்டுள்ளது. இந்த பகுதியில் சண்டாக்கான், பலுராரான், கின்னாபாத்தாங்கான், தோங்கோட் ஆகிய பட்டணங்கள் அமைந்திருக்கிறது. கோத்த கினாபாலுவுக்கு அடுத்து இரண்டாவது பெரிய துறைமுகமாக சண்டாக்கான் துறைமுகம் இருக்கிறது. வெட்டுமர தொழிலுக்கு முக்கிய வாசலாக அமைக்கப்பட்டுள்ளது.

**1 கொரிந்தியர் 15: 55-57** மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**பரலோகத்திற்கு நிச்சயமின்மை**

ஹெர்மன் ஒரு அயலகத்தார் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். அவனுடைய பெற்றோர்கள் விசுவாசத்தில் பலமில்லாதவர்கள், ஆனாலும் அவர்கள் ஹெர்மன் மதத்தில் மிக உறுதியாக இருக்க வேண்டுமென நினைத்தனர். ஹெர்மனின் ஆசையெல்லாம் பரலோகத்திற்கு போகவேண்டுமென்பதே. அவன் போய்ச் சேருகிற இடத்தை அதாவது பரலோகமா அல்லது பாதாளமா என்பதனை அவனின் நல்ல கிரியைகளும் ஆண்டவருமே நிர்ணயிகக்கூடும் என அவன் அறிந்திருந்தான். அவன் போதுமான நல்ல கிரியைகள் செய்யவில்லையென அறிந்திருந்தான், அதோடு ஆண்டவரின் அனைத்து கட்டளைகளையும் பின்பற்ற சாத்தியமேயில்லையென நன்கு தெரிந்திருந்தான். ஆகவே இறுதியாக அவன் போய்ச் சேருகிற இடத்தை அடைவோமா அடையமாட்டோமா என்கிற ஒரு அச்சம் அவனுள் இருந்துகொண்டேயிருந்தது. காரணம் அவனுடைய மதத்தில் பரலோகத்தில் சேர்வோமா என்கிற நிச்சயம் அருளப்படவில்லை. ஒவ்வொரு காரியமும் ”ஆண்டவருடைய சித்தமாயிருந்தால்“ என்றே காணப்பட்டது.







**ஜெபக் குறிப்புகள்**

- சபா அயலார்கள் கிறிஸ்து அருளுகிற நித்திய உறவுகளை விரும்புகிறவர்களாயிருக்க ஜெபியுங்கள்.
- புண்ணியத்தினால் நித்திய உறவுகளை பெற இயலாது என்பதனை சண்டாக்கான், குடாட் அண்டைக்காரர்கள் காண ஜெபியுங்கள்.
- மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதனை பார்க்காமல் விசுவாசிகள் தங்கள் நாவுகளைத் திறந்து விசுவாசத்தை பகிர்ந்துக்கொள்ள ஜெபியுங்கள்.
- நீதியோடும் நேர்மையோடும் அரசாளுகிற அதிகாரிகளை சபாவில் தேவன் எழுப்ப ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

உங்கள் வாழகத்தில் வேலை செய்யும் காவலாளிகளுக்கு, துப்புரவு செய்யும் ஆண் தொழிலாளிகளுக்கு நன்றி அட்டை கொடுங்கள்.

## சரவாக்

**சரவாக்** மாநிலம்தான் மலேசியாவிலேயே மிகம் பெரிய மாநிலம். 124,450 கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. வடமேற்கு போர்னியோவில் அமைந்திருக்கும் இது 800 கிலோமீட்டர் தென்சீன சமுத்திர கடலோர முகப்பாய்க் காணப்படுகிறது. சரவாக் ''இருவாய்க்குருவி நிலம் என்றும் அழைக்கப்படுகிறது. காரணம் இக்குருவிகள் அதிகமாக வசிக்கும் இருப்பிடமாக சரவாக் காணப்படுகிறது. இங்கு அநேக ஆறுகள் காணப்படுகிறது, விசேஷேமாக ரெஜாங் ஆறு (590 கிமீ நீளம்) மலேசியாவிலேயே மிகப் பெரிய ஆறு.

இதன் தலைநகரம் கூச்சிங், அன்பாக ''பூனை நகரம்'' என்று அழைக்கப்படும். இது ஆறுகளின் படர்ந்த கரையோர பகுதியில் காணப்படுகிறது. இது ''வெள்ளை ராஜாக்கள்'' அதாவது ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது என்று சொல்லப்படுகிற அளவிற்கு அங்குள்ள தோற்றங்கள், கட்டடங்கள் இருக்கின்றன. ஜேம்ஸ் புருக் என்ற ''வெள்ளை ராஜா'' 1841 காலந்தொட்டு சரவாக்கை ஆண்டு, அவர் ஆட்சிபுரிந்த ராஜவம்சத்தை சரவாக் இன்றும் பிரதிபலித்துக் காண்பிக்கிறது.
சரவாக்கின் மக்கள்தொகை 2,354,048 (2010). மிகக்குறைவான மக்கள்தொகை, அதாவது 1 கிலோமீட்டர் சுற்றளவுக்கு 19 பேர்களே வசிக்கிறார்கள் எனக் கணக்கிடப்படுகிறது. இபானியர்கள் 30.3% மலாய்க்காரர்கள் 24% பிடாயு இனத்தவர்கள் 8.4%, மற்ற சிறுபான்மையரும் கூட இங்கு வாழ்கிறார்கள். மெலானாவுஸ் 5.2% மற்றும் சீனர்கள் 24.5%. பிசாயா கடாயான், காயன், கெஞ்ஞா, கெலாபிட், மற்றும் பூனான் இனத்தவர்கள்.

சரவாக்கில் மாநிலத்தில் மாத்திரம்தான் அதிக அளவில் கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள் 44%. இஸ்லாமியர்கள் 30%, புத்த மதத்தினர் 14%. சரவாக்கில் அதிகமானோர் எண்ணிக்கையிலான காணப்படும் கிறிஸ்தவ ஜனங்கள் இபானியர்கள் மற்றும் பிடாயு இனத்தவர்கள். மற்றும் பிற இனத்து மண்ணின் மைந்தர்கள். இஸ்லாமியர்கள் பெரும்பாலோர் மலாய், மற்றும் மெலானாவ் இனத்தைச் சேர்ந்தவர்கள். சரவாக்கில் கிட்டத்தட்ட 4,000 சீன இஸ்லாமியர்கள் உண்டு. சரவாக் சமையல் கலையிலும் பேர் போனது உதாரணத்திற்கு சரவாக் லக்சா, கோலோக் மீ, மற்றும் சரவாக் மிளகு.
சரவாக்கில் 12 பிரிவுகள் உண்டு. புத்தக்திற்காக இவைகளை நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

**மண்டலம் 49:** கூச்சிங் பிரிவு (கூச்சிங், பாவு, லுண்டு), சமாராஹான் பிரிவு (சமாராஹான், ஹாசாஜெயா, சிமுன்ஜன்) & செரியன் பிரிவு (செரியன், தெபெடு).
**மண்டலம் 50:** ஸ்ரீ அமான் பிரிவு (ஸ்ரீ அமான், லுபோக் ஹந்து) பெத்தோங் பிரிவு (பெத்தோங், செராத்தோக்) & சரிக்கேய் பிரிவு (சரிக்கெய் , மெராடோங், ஜுலாவ், பாக்கான்)
**மண்டலம் 51:** சிபு பிரிவு (சிபு, கனோவிட், செலாங்காவ்) முக்கா பிரிவு (முக்கா, டாலாட், டாரோ, மாத்து) & பின்துலு பிரிவு, (பின்துலு தாத்தாவ்)
**மண்டலம் 52:** காப்பிட் பிரிவு (காப்பிட் பெலாகா, சோங்) மிரி பிரிவு (மிரி, மாருடி) & லிம்பாங் பிரிவு (லிம்பாங், மாவாஸ்)




சரவாக் கொடி

**மக்கள் தொகை (2010)**
**மொத்தம்:** 2,354,048

| **இனக்குழுக்கள்** | **%** |
|---|---|
| இபான் | 30.3 |
| மலாய் | 24 |
| பிடாயு | 8.4 |
| மெலானாவ் | 5.2 |
| மற்ற பூமி புத்திரர் | 6.6 |
| சீனர் | 24.5 |
| இந்தியர் | 0.3 |
| மற்றவர்கள் | 0.7 |

| **மதங்கள்** | **%** |
|---|---|
| இஸ்லாம் | 30 |
| புத்தம் | 14 |
| இந்து | 0.15 |
| கிறிஸ்துவம் | 44 |


East Malaysia
கிழக்கு மலேசியா

## மண்டலம் 49. சரவாக் - கூச்சிங் பிரிவு (கூச்சிங், பாவு, லுண்டு), சமாராஹான் பிரிவு (சமாராஹான், ஹாசாஜெயா, சிமுன்ஜன்) & செரியன் பிரிவு (செரியன், தெபெடு).




| கூச்சிங் பிரிவு: 692,922 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 34 |
| இபான் | 10.6 |
| பிடாயு | 18 |
| மெலானாவ் | 0.6 |
| மற்ற பூமி புத்திரர் | 1.3 |
| சீனர் | 34.5 |
| இந்தியர் | 0.5 |
| மற்றவர்கள் | 0.5 |

| சமாராஹான் பிரிவு: 156,980 சதவீதம்(%) | |
|---|---|
| மலாய் | 57 |
| இபான் | 23.2 |
| பிடாயு | 4 |
| மெலானாவ் | 0.6 |
| மற்ற பூமி புத்திரர் | 1.6 |
| சீனர் | 12.8 |
| இந்தியர் | 0.3 |
| மற்றவர்கள் | 0.5 |

| செரியன் பிரிவு: 89,837 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 12.4 |
| இபான் | 16.6 |
| பிடாயு | 60.4 |
| மெலானாவ் | 0.2 |
| மற்ற பூமி புத்திரர் | 0.6 |
| சீனர் | 9.4 |
| இந்தியர் | 0.2 |
| மற்றவர்கள் | 0.2 |

**கூச்சிங் பிரிவு**, பலதரப்பட்ட இனங்கள் ஒரே பாத்திரத்தில் கலந்த கலவைப்போல் இருக்கிறார்கள். கூச்சிங் சரவாக்கின் தலைநகரம். இது வியாபாரம், சுற்றுலா, வர்த்தகம், சேவைத்துறைகள் மற்றும் கல்வி மையங்கள் நிறைந்தது. மலாய்க்காரர்கள் மற்றும் சீனர்கள் நகரத்தின் மையப்பகுதியில் வசிக்கின்றனர். சரவாக் முழுவதுமே எடுத்துக்கொண்டால் இபானியர்களும் சீனர்களுமே அதிகம் காணப்படுகிறார்கள். கூச்சிங் பிரிவுதான் சரவாக்கிலேயே அதிகமான மலாய்க்காரர்களைக் கொண்டுள்ளது.

**சமாராஹான்** பிரிவில் 4 மாவட்ட நிர்வாக அமைப்புகளுண்டு. சமாராஹான், ஹாசாஜெயா, செரியன், சிமுன்ஜன். மொத்த மக்கள் தொகை 156,980. இங்கு பல இனத்தவர்கள் கலந்து வாழ்கிறார்கள். பெரும்பாலும் இபானியர்கள், மலாய்க்காரர்கள், பிடாயு இனத்தவர்கள், மற்றும் சீனர்கள்.

**செரியன்** மக்கள் தொகை 89,837. பிடாயு இனத்தவர்கள் 60%. மற்ற முக்கிய இனத்தவர்கள் இபானியர்கள், சீனர்கள், மலாய்க்காரர்கள். செரியன் பட்டணம் விசேஷமாக விழாக்காலங்களில் சுறுசுறுப்பான பட்டணம். காவாய் மற்றும் கிறிஸ்மஸ் காலங்களின்போது பிடாயு இனத்தவர்கள் தீபகற்ப மலேசியாவிலிருந்தும் மற்ற பட்டணங்களிலிருந்தும் வந்து, கடைகள் மற்றும் விற்பனைக்கூடங்களைில் நிறைந்து காணப்படுவார்கள். இந்த பட்டணம் டூரியான்களுக்கு விசேஷம். சரவாக்கிலேயே மிகச்சிறந்த டூரியான்கள் இங்குதான் கிடைக்கும்

**மத்தேயு 22:37-39** ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இரண்டாவது உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக'' என்பதே

ஹரிஸ் பரலோகம் போவான் என்பதில் அவனுக்கு நிச்சயமில்லை. அவனுக்கு 20 வயது இருக்கும்போது அவனது நண்பண் இயேசுவைப்பற்றி அவனிடம் கூறினான். அவனுடைய நண்பனோடு அவன் விவாதித்தான். பிறகு மேலும் இயேசுவைத் தெரிந்துக்கொள்ள அவனோடு ஒரு சபைக்குச் சென்றான். உண்மையிலேயே இயேசு கடவுளென்றால் தனக்கு ஒரு அடையாளத்தைக் காண்பிக்கும்படிக்கு அவன் இயேசுவிடம் வேண்டினான். ஒரு முறை கடற்கரையில் இருக்கும்போது அவன் இருதயத்தில் ஏவப்பட்டு தன் சிநேகிதனின் வேதத்தைப் புரட்டி, எரேமியா 1:5 திருப்பினான். ''நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன். நான் உன்னை பரிசுத்தம் பண்ணி ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்'' இந்த வார்த்தை அவன் இருதயத்தை தொட்டது. இந்த வார்த்தையைப் படித்த பின்னர் ஆனந்தக்கண்ணீர் விட்டான், காரணம் அவன் வாழ்நாளில் ஆண்டவரை அநுபவித்ததில்லை. ஆண்டவருடைய வார்த்தை ஜீவனுள்ளதாய் அவனிடத்தில் வந்தது. அவன் இருதயம் சமாதானம் பெற்றதுடன் ஆனந்த மகிழ்ச்சியடைந்தது.








**ஜெபக் குறிப்புகள்**

- இயேசுவை அறியாமல் மரித்துக் கொண்டிருக்கும் கூச்சிங் ஜனங்களுக்கு, கூச்சிங், செரியன் திருசச்சபைகள் இயேசுவை அறிவிக்க எழும்பும்படி இன்றே ஜெபியுங்கள்.
- சரவாக்கிலே ஜனங்கள் ஆண்டவரை அறியும்படிக்கு புதிய ஏற்பாடு அவர்களின் கைகளில் கிடைக்கப்பெறும்படிக்கு மொழிப்பெயர்ப்பு முடிவுற்றதற்காக நன்றி செலுத்துங்கள்.
- எச் ஐ வி நோயினால் அவதியுறும் சமராஹான் மக்கள் இயேசுவை விசுவாசிக்கவும் தங்கள் வெட்கத்தை விட்டு நீங்கும்படியும் ஜெபியுங்கள்.
- சரவாக் கவர்னருக்காகவும் தலைமை மந்திரிக்காகவும் ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உங்கள் அயலார் வீட்டுக் நிகழ்வுகளில் பங்கு கொள்ளுதல்

## மண்டலம் 50. சரவாக் - ஸ்ரீ அமான் பிரிவு (ஸ்ரீ அமான், லுபொக் ஹந்து), பெத்தோங் பிரிவு (பெத்தோங், செராத்தோக்) & சரிக்கேய் பிரிவு (சரிக்கேய், மெராடோங், ஜூலாவ், பக்கான்)







| ஸ்ரீ அமான் பிரிவு: 93,823 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 19 |
| இபான் | 68 |
| பிடாயு | 0.7 |
| மெலானாவ் | 0.2 |
| மற்ற பூமி புத்திரா் | 0.6 |
| சீனா் | 11.2 |
| இந்தியா் | 0.1 |
| மற்றவா்கள் | 0.2 |

| பெத்தோங் பிரிவு: 107,422 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 51.3 |
| இபான் | 42.6 |
| பிடாயு | 0.4 |
| மெலானாவ் | 0.3 |
| மற்ற பூமி புத்திரா் | 0.3 |
| சீனா் | 4.9 |
| இந்தியா் | 0.05 |
| மற்றவா்கள் | 0.15 |

| சரிக்கேய் பிரிவு: 116,335 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 12.4 |
| இபான் | 52.8 |
| பிடாயு | 0.7 |
| மெலானாவ் | 4.9 |
| மற்ற பூமி புத்திரா் | 1 |
| சீனா் | 27.6 |
| இந்தியா் | 0.2 |
| மற்றவா்கள் | 0.4 |

**ஸ்ரீ அமான் பிரிவின்** மொத்த மக்கள்தொகை 93,823. கலப்பு கலாச்சாரத்தைக் கொண்ட மக்கள், இபானியா்கள், மலாய்க்காரா்கள் மற்றும் சீனா்கள். ஸ்ரீ அமான் பிரிவு சரவாக்கிலேயே அதிக விவசாயத்தை கொண்ட நிலம். இந்தப் பிரிவு 2 தேசிய பூங்கா, நீண்ட வீடு சுற்றுலா, குறிப்பாக கலாச்சார சுற்றுலா, சுற்றுலா சூழல், மற்றும் உள்ளூா் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது.

**பெத்தோங் பிரிவு** பாரம்பரியப் பிரகாரமாகப் பாா்த்தால் இபானின் தாய்வீடு. சாரிபாஸ் இபான் நீண்ட வீட்டுக்கு பிரபலமானது. அதோடு இபான் கலாச்சாரத்திற்கு மையமாக இருக்கிறது. மலாய்க்காரா்களும் சீனா்களும் அதிமாக இருக்கிறாா்கள். அதோடு அதிகமான கிராமங்கள் பெத்தோங் மற்றும் சாரதோக்கில் இருக்கிறது.

**சரிக்கேய் பிரிவின்** மொத்த மக்கள் தொகை 116,335. மக்கள் தொகையில் பெரும்பாலோா் இபான், மெலானாவ், மலாய், பிடாயு, மற்றும் சீன ஆதிக்கம் அதிகம். மேம்பட்ட இனரீதியில் கலப்பு உள்ளது. பெரும்பான்மை மக்கள் சரிக்கேய் நகரத்தில் வாழ்கிறாா்கள். சரிக்கேய் வரலாற்றை 19ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரைக் காணலாம். பல வரலாற்று நிகழ்வுகள் ஆதாரங்களாக உள்ளன. உதாரணமாக ராஜா ஜேம்ஸ் புருக் முதலில் 1845ம் ஆண்டு சரிக்கேய்க்கு விஜயம் செய்தாா்.

**உபாகமம் 31:8**
கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர். அவர் உன்னோடே இருப்பார். அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை.

**அலெக்ஸ்** ஞானஸ்நானம் பெற்று ஒரு வருடம் கழித்து அவரது சகோதரர் அவரது அறையில் ஒரு வேதாகமத்தைக் கண்டுபிடித்து அதை அவரது தகப்பனிடத்தில் காட்டினார். அவரது தந்தை மிகவும் கோபமுற்றவராகி அலெக்ஸை உதைத்து, வீட்டை விட்டு உடனடியாக வெளியேற உத்தரவிட்டார். அவர் அலெக்ஸின் அடையாள அட்டையை எடுத்து வைத்துக்கொண்டு நீ இனி எனது மகனே இல்லையெனக் கூறினார்! வீட்டைவிட்டு வெளியேறின அலெக்ஸ் சில விசுவாசிகளுடன் தங்கினார். நான்கு மாதங்களுக்கு பின்னர் ஆண்டவர் அவரது தந்தையின் மனதை மிருதுவாக்கவே, அவனது தகப்பனார் அலெக்ஸை வீட்டிற்கு வர கேட்டுக் கொண்டார். அலெக்ஸ் தனது தந்தையுடன் ஒப்புரவாகி அவர் வீட்டில் தங்கத் திரும்பினார். பின்னர் அலெக்ஸ் ஒரு விசுவாசியைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு ஆண்டவர் ஒரு மகளையும் ஆசீர்வதித்துக் கொடுத்தார். ஒரு சில ஆண்டுகளுக்கு பிறகு அவர்கள் இருவரும் முழு நேர ஊழியஞ்செய்ய ஆண்டவரால் அழைக்கப்பட்டனர். இப்போது உண்மையாய் ஆண்டவரின் சேவையைச் செய்து வருகிறார்கள். ஆண்டவருக்கே மகிமை.








**ஜெபக் குறிப்புகள்**

- ஸ்ரீ அமான் பிரிவில் விசுவாசிகள் அண்டை மக்களோடு நல்ல உறவை ஏற்படுத்தவும், வளமுடன் வாழவும் ஜெபியுங்கள்.
- குடும்ப உறுப்பினர்கள் அல்லது மற்ற பிரியமானவர்களை இழந்து வாழும் பெத்தோங் மக்கள், துயரத்தின் வாயிலாக உண்மைத் தேவனைத் தெரிந்துகொள்ள ஜெபியுங்கள்.
- சரிக்கேயில் வாழும் கணவர்மார்கள் தங்கள் முதல் மனைவியுடன் உண்மையாக இருக்க ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
அண்டை வீட்டு மக்களிடம் இன்னும் யாராவது ஆசிர்வதிக்கும்படியான மக்கள் இருக்கிறார்களாவென கேளுங்கள்.

## மண்டலம் 51. சரவாக் - சிபு பிரிவு (சிபு, கனோவிட், செலாங்காவ்), முக்கா பிரிவு ((முக்கா, டாலாட், டாரோ, மாத்து) & பின்துலு பிரிவு (பின்துலு, தாத்தாவ்)




| சிபு பிரிவு: 284,023 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 9.4 |
| இபான் | 40 |
| பிடாயு | 0.7 |
| மெலானாவ் | 5.3 |
| மற்ற பூமி புத்திரா் | 1.4 |
| சீனா் | 42.5 |
| இந்தியா் | 0.3 |
| மற்றவா்கள் | 0.4 |

| முக்கா பிரிவு: 103,478 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 6.2 |
| இபான் | 19.8 |
| பிடாயு | 0.5 |
| மெலானாவ் | 64.5 |
| மற்ற பூமி புத்திரா் | 2.8 |
| சீனா் | 6 |
| இந்தியா் | 0.08 |
| மற்றவா்கள் | 0.12 |

| பின்துலு பிரிவு: 186,703 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 11.4 |
| இபான் | 50.3 |
| பிடாயு | 1.3 |
| மெலானாவ் | 10.2 |
| மற்ற பூமி புத்திரா் | 8 |
| சீனா் | 18 |
| இந்தியா் | 0.2 |
| மற்றவா்கள் | 0.6 |

**சிபு பிரிவு** இனப்பிரிவாக அநேக இபான், சீனா், மவாய்க்காரா்கள் மற்றும் மெலானாவ் இனத்தைச் சோ்ந்தவா்களைக் கொண்டுள்ளது. சிபு பிரிவு 3 வட்டாரமாக பிரிக்கப்பட்டுள்ளது அது சிபு, கனோவிட் மற்றும் செலாங்காவ். இங்கு வருமானம் மலைகாடுகளில் நிறைந்திருக்கும் மரக்கட்டைகளின் வாயிலாகக் கிடைக்கிறது. சுற்றுலாதுறை மற்றும் சுற்றுலா சூழல் வாயிலாகவும் நிதி திரட்டப்படுகிறது

**முக்கா பிரிவு** நான்கு நிா்வாக மாவட்டங்களைக் கொண்டிருக்கிறது. முக்கா, டாலாட், மாத்து, டாரோ. இது கலப்பான ஒரு கலாச்சாரம். இங்கு அதிகமாக மெலானாவ், மலாய், இபான் மற்றும். சீனா்களின் ஆதிக்கம் அதிகம். மேலானாவ் மக்கள் மீன் பிரியா்கள். இவா்களுடைய பாரம்பரிய உணவில் மீன் காணப்படுகிறது, உதாரணமாக உமாய். மெலானாவ் மக்கள் அதிகமாக வாழ்கிற பட்டணம். முக்காவ் கொடுக்ககூடிய ஒரு சிறப்பான காரியம் என்னவென்றால் மெலானாவ் கலாச்சாரம்.

**பிந்துலு** இபான், சீனா், மெலானாவ், மலாய், ஓராங் உலு மற்றும் கெடாயான் மக்களைக் கொண்டது. அநேக இபானியா்கள் பிந்துலு போன்ற இடங்களில் பரந்து கிடக்கிறாா்கள். விசேஷமாக தாத்தாவ், செபாவு போன்ற இடங்களாகும். எரிபொருள் மற்றும் வாயு தொழிற்சாலைகள் வருமானம் ஈட்டக்கூடியதாக இருக்கிறது. அதிகமாக 20% பிந்துலு மக்களும், எரிவாயு வலிமை காரணமாக வெளிநாட்டு தொழிலாளா்களையும் கொண்டுள்ளது.

**மத்தேயு 5:16**
இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது.

**குறைத்தலும் அதிகரித்தலும்.**

புதிதாக குடியேறிய ஒரு நபர், 2 போதகர்கள் அவர்களின் நம்பிக்கையும் பிற இனத்தவரின் நம்பிக்கையையும் குறித்து பேசிக்கொண்டிருப்பதை கேட்டார். இவர்கள் கொண்டிருக்கும் வெளிப்படையான தன்மையை குறித்து ஆச்சரியப்பட்டார். இயேசு கிறிஸ்துவுக்கு தன்னை ஒப்புக்கொடுத்த ஒருவரின் சாட்சியைக் கேட்டு அவருடைய கண்களில் கண்ணீர் வடிந்தது. இப்படிப்பட்ட ஒரு வெளிப்படைத் தன்மையை அவர் பார்த்ததேயில்லை. அவரின் நம்பிக்கையில், இதற்கு எதிர்மறையாய் இருக்கும். சந்தேகங்கள் அவருக்குள் எழும்பி ''ஏன் ஆண்டவரே என்னை இங்கே வைத்தீர்'' என்று கேட்கும் அளவிற்கு அது இருந்தது.

ஆண்டவர் அவரிடம் கூறியது, ''கவலைப்படாதே, நான் என் வழியிலே இந்த மக்கள் மூலமாய் உன்னை பயன்படுத்துவேன்'' என்றார். அந்த வார்த்தை, இந்த மக்களுக்குச் சேவை செய்ய அதிக சமாதானத்தைக் கொடுத்தது.








**ஜெபக் குறிப்புகள்**


- சிபு பிரிவில் காணப்படும் அயலாரிடம் சரியான முறையில் தொடர்பு வைக்க விசுவாசிகளுக்காக ஜெபியுங்கள்.
- நான்கு பெண்களை மணக்க ஆண்களுக்கு சட்டப் பூர்வமாக அனுமதி வழங்கப்படுவதாலே பிந்துலு பகுதியில் காணப்படும் மனைவிமார்களுக்கு பாதுகாப்பு இல்லை. அதற்காக ஜெபியுங்கள்.
- சிபு மற்றும் முக்கா பெண்கள் தங்களுக்கு ஆண்டவர் பாதுகாப்பு கொடுப்பவர் அவர்களைக் கைவிடாதவர் என்று உணர ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**

பயணிக்கும்போது வேண்டுமென்றே பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டி அயலாரின் பக்கத்தில் உட்கார வகைத் தேடுங்கள்.

## மண்டலம் 52. சரவாக் - காப்பிட் பிரிவு (காப்பிட் பெலாகா, சோங்) மிரி பிரிவு (மிரி, மாருடி) & லிம்பாங் பிரிவு (லிம்பாங், லாவாஸ்)




| காப்பிட் பிரிவு: 106,833 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 3.5 |
| இபான் | 63.8 |
| பிடாயு | 0.5 |
| மெலானாவ் | 1.1 |
| மற்ற பூமி புத்திரர் | 24.7 |
| சீனர் | 5.9 |
| இந்தியர் | 0.1 |
| மற்றவர்கள் | 0.4 |

| மிரி பிரிவு: 332,308 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 17.9 |
| இபான் | 32.7 |
| பிடாயு | 1.3 |
| மெலானாவ் | 2.9 |
| மற்ற பூமி புத்திரர் | 18.7 |
| சீனர் | 25.6 |
| இந்தியர் | 0.4 |
| மற்றவர்கள் | 0.5 |

| லிம்பாங் பிரிவு: 83,384 சதவீதம் (%) | |
|---|---|
| மலாய் | 31.6 |
| இபான் | 16 |
| பிடாயு | 0.6 |
| மெலானாவ் | 0.5 |
| மற்ற பூமி புத்திரர் | 38.6 |
| சீனர் | 12 |
| இந்தியர் | 0.1 |
| மற்றவர்கள் | 0.6 |

**காப்பிட் பிரிவுதான்** சரவாக்கிலேயே மிகப்பெரிய பிரிவு. 86% நிலம் காடு நிறைந்ததாயிருக்கிறது. இங்கு விவசாயம், காட்டு வலம், செம்பனை, நெல். ரப்பர், வாழை மற்றும் மிளகு வருமானத்தைக் கொடுக்கிறது

**மிரி பிரிவு** காப்பிட் பிரிவுக்கு அடுத்து பெரியது. இங்கு இபான், சீனர், மலாய், மெலானாவ், காயான், கென்ஞா, லுன் பாவாங், மற்றும் கெலாபிட் இனத்தவர்கள் வாழ்கிறார்கள். எரிபொருள் உற்பத்தி காரணமாக அதிக வெளிநாட்டு வேலையாட்களும் இங்கு உண்டு.

**லிம்பாங் பிரிவு** புருணை டாருல்சலத்தை இரண்டாகப் பிரிக்கிறது. லிம்பாங் பாரம்பரியமான மலாய், லுன் பாவாங், சீன மற்றும் ஓராங் உலு மக்களைக் கொண்டது. பெரும்பாலான லிம்பாங் மற்றும் லாவாஸ் மக்கள் கடலோர பகுதிகளில் குவிந்துள்ளனர்.

**சங்கீதம் 107:20**
அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.

ஒரு கிறிஸ்மஸ் தினத்தன்று இஷ் என்கிற ஒரு மனிதன் எங்கள் வீட்டிற்கு வந்து, பொது விடுமுறையைக் குறித்து வினவினார். ஏன் அவ்வளவு ஆர்வமாக இருக்கிறீர்களென்று கேட்க, அவர் நினைவுகூர்ந்தவரை கிறிஸ்மஸ் மிகவும் வசீகரிக்கிற ஒரு பெருநாள் என்றார். கிறிஸ்மஸ் அவர் நம்பிக்கைக்குரிய ஒரு பெருநாளாக இல்லாவிட்டாலும் அது மிகவும் விசேஷமும் சந்தோஷமும் நிறைந்தது என்றார்.

வித்தியாசமான கிறிஸ்மஸ் பாரம்பரியங்களைக் குறித்து அவர் கேட்க நான் கிறிஸ்துவைக் குறித்து பகிர்ந்துக்கொண்டேன். அவர் மிகவும் ஆர்வமாக இருந்தபடியால் என்னோடு வேதாகமத்தைச் சேர்ந்து வாசித்துப்பின் சம்பாஷித்தோம். ஒரு மாதத்திற்குப்பிறகு அவரை ஒரு உள்புறமான உணவுக்கடையில் சந்தித்து பேசும்போது லுக்கா சுவிசேஷத்தின் இரண்டு அதிகாரத்தைக் கொடுத்தேன். இவர் ஆர்வமாக கேட்ட கேள்விகள் எனக்கு மிகவும் சந்தோஷத்தை அளித்தது.







**ஜெபக் குறிப்புகள்**

- அதிகமாக சரவாக் அயலார் மக்கள் இயேசுவின்மேல் தாகம் கொள்ளவும் தேவன் அவர்கள்மேல் வைத்த அன்பினை அவர்கள் அறிந்துக் கொள்ளும்படிக்கும் ஜெபியுங்கள்.
- சரவாக் மக்கள் அமெரிக்காவுக்கு பயில செல்லும்போது அமெரிக்க மாணவர்கள் சரவாக்கியர்களிடம் சுவிசேஷம் பகிர்ந்துக்கொள்ள ஜெபியுங்கள்.
- படிப்பை முடித்து மலேசியா திரும்பும் மாணவர்கள் வேதத்தையும், தேவனையும் குறித்து நன்கு புரிந்து கொண்ட ஒரு பக்குவத்தில் திரும்ப ஜெபியுங்கள்.

**செயல் திட்டம்**
உங்கள் அயலார் நண்பரை விசேஷித்த கொண்டாட்டங்களுக்கு, நிகழ்ச்சிகளுக்கு அழைத்து செல்லுங்கள்.

# APPENDIX

# இணைப்புக் குறிப்புகள்

## அட்டவனை 1
## மொத்த மக்கள் தொகை - இனக்குழுக்கள்
## 1911-2010 (எண், ‘000)

| இனக்குழுக்கள் | 1911 | 1921 | 1931 | 1947 | 1957 |
|---|---|---|---|---|---|
| மலாய் | 1, 220.8 | 1, 386.0 | 1, 575.3 | 2, 427.8 | 3, 125.5 |
| சீனர் | 695.0 | 857.6 | 1, 285.2 | 1, 884.5 | 2, 333.8 |
| இந்தியர் | 239.8 | 439.5 | 572.7 | 530. 6 | 696.2 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 151.4 | 183.3 | 288.8 | - | - |
| மற்றவர் | 35.2 | 43.9 | 66.5 | 65.0 | 123.3 |
| மலேசியர்கள் அல்லாதவர்கள் | - | - | - | - | - |
| **மொத்தம்** | **2, 342.2** | **2, 910.2** | **3, 788.5** | **4, 908.0** | **6, 278.8** |

| இனக்குழுக்கள் | 1970 | 1980 | 1991 | 2000 | 2010 |
|---|---|---|---|---|---|
| மலாய் | 4, 859.7 | 6, 380.4 | 8, 521.9 | 11, 680.4 | 14, 191.7 |
| சீனர் | 3, 496.0 | 4, 167.0 | 4, 623.9 | 5, 691.9 | 6, 392.7 |
| இந்தியர் | 933.3 | 1, 101.7 | 1, 316.1 | 1, 680.1 | 1, 907.8 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 878.5 | 1, 402.4 | 1, 778.0 | 2, 567.8 | 3, 331.8 |
| மற்றவர் | 151.8 | 84.5 | 572.4 | 269.7 | 189.4 |
| மலேசியர்கள் அல்லாதவர்கள் | - | - | 751.1 | 1, 384.8 | 2, 320.8 |
| **மொத்தம்** | **10, 319.3** | **13, 136.1** | **17, 563.4** | **23, 274.7** | **28, 334.1** |

**அட்டவனை 2**
**மொத்த மக்கள் தொகை - இனக்குழுக்கள்**
**1911-2010 (சதவவிதம் %)**

| **இனக்குழுக்கள்** | **1911** | **1921** | **1931** | **1947** | **1957** |
|---|---|---|---|---|---|
| மலாய் | 52.1 | 47.6 | 41.6 | 49.5 | 49.7 |
| சீனர் | 29.7 | 29.5 | 33.9 | 38.4 | 37.2 |
| இந்தியர் | 10.2 | 15.1 | 15.1 | 10.8 | 11.1 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 6.5 | 6.3 | 7.6 | - | - |
| மற்றவர் | 1.5 | 1.5 | 1.8 | 1.3 | 2.0 |
| மலேசியர்கள் அல்லாதவர்கள் | - | - | - | - | - |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

| **இனக்குழுக்கள்** | **1970** | **1980** | **1991** | **2000** | **2010** |
|---|---|---|---|---|---|
| மலாய் | 47.1 | 48.6 | 48.5 | 50.2 | 50.0 |
| சீனர் | 33.9 | 31.7 | 26.3 | 24.5 | 22.6 |
| இந்தியர் | 9.0 | 8.4 | 7.5 | 7.2 | 6.7 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 8.5 | 10.7 | 10.1 | 11.0 | 11.8 |
| மற்றவர் | 1.5 | 0.6 | 3.3 | 1.2 | 0.7 |
| மலேசியர்கள் அல்லாதவர்கள் | - | - | 4.3 | 5.9 | 8.2 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

**குறிப்பு** : இந்த சதவித கணக்கீடுகள் மலேசியா மொத்த மக்கள் தொகையையும், குடிமக்கள் அல்லாதவர்களின் தொகையையும் காட்டுகிறது.

## அட்டவனை 3
## மொத்த மக்கள் தொகை - இனக்குழுக்கள்
## 1980-2010 (சதவவிதம் %)

| **மதங்கள்** | **1980** | **1991** | **2000** | **2010** |
|---|---|---|---|---|
| இஸ்லாம் | 52.9 | 58.6 | 60.8 | 61.3 |
| புத்தம் | 17.3 | 18.4 | 18.9 | 19.8 |
| இந்து | 7.0 | 6.4 | 6.2 | 6.3 |
| கிறிஸ்துவம் | 6.4 | 8.1 | 9.1 | 9.2 |
| மற்ற சீனர் மதம் | 13.6 | 6.5 | 3.4 | 1.3 |
| மற்றவர்கள் | 0.5 | 0.5 | 0.4 | 0.4 |
| மதம் அல்லாதவர்கள்/அறியப்படாதவர்கள் | 2.1 | 1.6 | 1.2 | 1.7 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

**குறிப்பு** : இந்த சதவித கணக்கீடுகள் மலேசியா மொத்த மக்கள் தொகையையும், குடிமக்கள் அல்லாதவர்களின் தொகையையும் காட்டுகிறது.

## அட்டவனை 4
## குடிமக்களின் மக்கள் தொகை - சதவிதம்
## இனக்குழுக்கள் மற்றும் மாநிலங்கள் , 2010 (%)

| தேசம்/மாநிலங்கள் | மலாய் | சீனர் | இந்தியர் | மற்ற மண்ணின் மைந்தர்கள் | மற்றவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **மலேசியா** | **54.6** | **24.6** | **7.3** | **12.8** | **0.7** | **100.0** |
| | | | | | | |
| மேற்கு மலேசியா | 61.0 | 27.4 | 9.5 | 1.4 | 0.7 | 100.0 |
| சபா | 8.0 | 12.8 | 0.3 | 76.8 | 2.1 | 100.0 |
| சரவாக் | 24.0 | 24.5 | 0.3 | 50.5 | 0.7 | 100.0 |
| | | | | | | |
| **மேற்கு மலேசியா** | | | | | | |
| பெர்லிஸ் | 88.0 | 8.0 | 1.5 | 0.4 | 2.1 | 100.0 |
| கெடா | 77.5 | 13.5 | 7.0 | 0.2 | 1.8 | 100.0 |
| பினாங்கு | 43.0 | 45.5 | 10.5 | 0.4 | 0.6 | 100.0 |
| பேராக் | 54.2 | 30.4 | 12.4 | 2.8 | 0.2 | 100.0 |
| கிளந்தான் | 95.0 | 3.4 | 0.3 | 1.1 | 0.2 | 100.0 |
| திரங்காணு | 96.8 | 2.6 | 0.2 | 0.2 | 0.2 | 100.0 |
| பாஹாங் | 73.8 | 16.0 | 4.4 | 5.2 | 0.6 | 100.0 |
| சிலங்கூர் | 55.8 | 28.6 | 13.6 | 1.2 | 0.8 | 100.0 |
| நெகிரி செம்பிலான் | 59.4 | 23.2 | 15.2 | 1.9 | 0.3 | 100.0 |
| மலாக்கா | 65.8 | 26.4 | 6.2 | 1.2 | 0.4 | 100.0 |
| ஜோகூர் | 57.0 | 34.0 | 7.0 | 1.7 | 0.3 | 100.0 |
| | | | | | | |
| கூட்டரசுப் பிரதேசம் | 44.7 | 43.0 | 10.3 | 1.2 | 0.8 | 100.0 |

**குறிப்பு:** இந்த சதவித கணக்கீடுகள் மலேசியா குடிமக்களை மட்டுமே சார்ந்ததாகும்.

## அட்டவனை 5
## குடிமக்களின் மக்கள் தொகை சதவிதம்
## மதங்கள் மற்றும் மாநிலங்கள் , 2010 (%)

| தேசம்/மாநிலங்கள் | இஸ்லாம் | புத்தம் | இந்து | கிறிஸ்தவம் |
|---|---|---|---|---|
| **மலேசியா** | **60.6** | **21.0** | **6.4** | **9.2** |
| | | | | |
| பெர்லிஸ் | 88.5 | 9.5 | 0.8 | 0.6 |
| கெடா | 78.0 | 14.0 | 6.7 | 0.7 |
| பினாங்கு | 44.0 | 36.6 | 8.6 | 5.0 |
| பேராக் | 55.4 | 25.8 | 11.0 | 4.2 |
| கிளந்தான் | 95.3 | 3.7 | 0.2 | 0.3 |
| திரங்காணு | 97.0 | 2.4 | 0.2 | 0.2 |
| பாஹாங் | 75.0 | 14.8 | 4.0 | 1.8 |
| சிலங்கூர் | 57.7 | 25.6 | 11.8 | 3.5 |
| நெகிரி செம்பிலான் | 60.6 | 22.0 | 13.7 | 2.2 |
| மலாக்கா | 66.5 | 24.6 | 5.5 | 2.9 |
| ஜோகூர் | 58.0 | 31.0 | 6.4 | 3.3 |
| கோலாலம்பூர் | 46.0 | 38.0 | 8.5 | 4.8 |
| புத்ரா ஜெயா | 97.7 | 0.4 | 0.9 | 0.8 |
| லபுவான் | 75.0 | 10.0 | 0.4 | 12.0 |
| சபா | 58.0 | 8.3 | 0.1 | 31.5 |
| சரவாக் | 30.0 | 14.0 | 0.2 | 44.0 |

**குறிப்பு::**
1. இந்த சதவித கணக்கீடுகள் மலேசியா குடிமக்களை மட்டுமே சார்ந்ததாகும்.
2. இந்த அட்டவணையின் சதவிதம் நான்கு முக்கிய மதங்களை வெளிப்படுத்துகிறது.

**அட்டவனை 6**
**குடிமக்களின் மக்கள் தொகை**
**மதம் மற்றும் இனக்குழுக்கள் 2010 (சதவிதம் , %)**

| **மதம்** | **மலாய்** | **மற்ற மண்ணின் மைந்தர்கள்** | **சீனர்** | **இந்து** | **மற்றவர்** | **குடிமக்கள் அல்லாதவர்** |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| மொத்தம் ('000) | 14,191.7 | 3,331.8 | 6,392.6 | 1,907.8 | 189.4 | 2,320.8 |
| இஸ்லாம் | 100.0 | 40.4 | 0.7 | 4.1 | 54.0 | 69.5 |
| புத்தம் | - | 1.0 | 83.6 | 1.7 | 27.1 | 7.0 |
| இந்து | - | 0.1 | 0.2 | 86.2 | 2.4 | 4.8 |
| கிறிஸ்தவம் | - | 46.5 | 11.0 | 6.0 | 12.0 | 9.7 |
| மற்ற சீனர் மதம் | - | 3.9 | 3.4 | - | 0.4 | 0.2 |
| மற்றவர்கள் | - | 1.5 | 0.1 | 2.0 | 0.5 | 0.7 |
| மதம் அல்லாதவர்கள் | - | 4.0 | 0.8 | - | 0.6 | 0.8 |
| அறியபடாதவர்கள் | - | 2.6 | 0.2 | - | 3.0 | 7.3 |
| **மொத்தம் (%)** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

**குறிப்பு:** இந்த சதவித கணக்கீடுகள் மலேசியா குடிமக்களை மட்டுமே சார்ந்ததாகும்.

## அட்டவனை 7
## வருங்கால குடிமக்களின் மக்கள் தொகை - இனக்குழுக்கள் அடிப்படை
## 2020-2040 (கணிப்பு) (%)

| **இனக்குழுக்கள்** | **2010** கணக்கெடுப்பு | **2020** | **2025** | **2030** | **2035** | **2040** |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| மொத்தம் ('000) | 26,013.4 | 29,952.4 | 31,758.4 | 33,384.0 | 34,752.3 | 35,866.3 |
| மலாய் | 54.6 | 55.8 | 56.5 | 57.2 | 57.7 | 58.2 |
| சீனர் | 24.6 | 22.8 | 21.9 | 21.1 | 20.4 | 19.8 |
| இந்தியர் | 7.3 | 7.0 | 6.8 | 6.6 | 6.5 | 6.3 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 12.8 | 13.4 | 13.7 | 13.9 | 14.2 | 14.4 |
| மற்றவர்கள் | 0.7 | 1.0 | 1.1 | 1.2 | 1.2 | 1.3 |
| | | | | | | |
| மொத்தம் (பூமி புத்திரர்) | 67.4 | 69.2 | 70.2 | 71.1 | 71.9 | 72.6 |
| மலாய்காரர் அல்லாத பூமி புத்திரர் | 32.6 | 30.8 | 29.8 | 28.9 | 28.1 | 27.4 |
| **மொத்தம் (%)** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

**குறிப்பு:**

1. இந்த மதிப்பீட்டிலான அட்டவனை வருங்கால குடிமக்களின் சதவித கணக்கீடுகளை மட்டுமே சார்ந்ததாகும். குடிமக்கள் அல்லாதவர்கள் சேர்க்கப்படவில்லை
2. 2010-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு வருங்கால மக்கள் தொகையை நிர்நயம் செய்கிறது.